இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 226 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 14 – புதன்கிழமை 27 மார்ச் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 226 : Thiruvalluvar Year - 2055 - Panguni 14 - Wednesday 27 March 2024 - Chennai 16 Pages ₹ 5.00



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (26.3.2024) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் தூத்துக்குடி தொகுதி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் இராமநாதபுரம் தொகுதி வேட்பாளர் நவாஸ்கனி ஆகியோருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். மேடையில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ். ரகுபதி, திருமதி.கீதா ஜீவன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், முருகேசன், கருமாணிக்கம், அமிர்தராஜ், சண்முகய்யா, சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன், முக்குலத்தூர் புலிப்படை கட்சித் தலைவர் கருணாஸ், மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல் ராஜன், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் சுரேஷ் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.

## முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர் - பொய்களை மட்டுமே பரிசாகத் தரும் பிரதமர்

# மோடிக்கு ஏமாற்றத்தைப் பரிசாகத் தர இந்தியா தயாராகி விட்டது !

## தூத்துக்குடி மாவட்டம் - எட்டயபுரம் பிரச்சாரக் கூட்டத்தில்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறைகூவல்!

தூத்துக்குடி,மார்ச்.27–

**தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில், நேற்று மாலை நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “ முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர் – மக்களுக்குப் பொய்களை மட்டுமே பரிசாகத் தருபவர், பிரதமர் மோடி” என்றும், “அத்தகைய பிரதமர் மோடிக்கு ஏமாற்றத்தைப் பரிசாகத்தர இந்தியா தயாராகி விட்டது” என்றும் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் நேற்று, (26.3.2024) மாலை நடைபெற்ற மாபெரும் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில், தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் இராமநாதபுரம் மக்களவைத் தொகுதி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வெற்றி வேட்பாளர் நவாஸ் கனி ஆகியோரை ஆதரித்து வாக்குக் கேட்டு எழுச்சியுரை ஆற்றினார்.

முதல்வர் அவர்களின் உரை வருமாறு : –

முத்துநகரில் இருந்தும், சேதுச் சீமையில் இருந்தும் கடல் அலைகளைப்போல், எழுச்சியோடு கூடியிருக்கும் உங்களைப் பார்க்கும் போது, மகிழ்ச்சியாக மட்டுமல்ல, நாற்பதுக்கு நாற்பதும் நாம்தான் என்ற உறுதியும் வந்து விட்டது!

### சர்வாதிகாரியிடம் இருந்து - ஜனநாயகத்தை மீட்கும் போராட்டம்!

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தங்களின் உயிரையும், உடலையும் அர்ப்பணித்த தளகர்த்தர்கள் பலர் பிறந்த தியாக மண்ணிற்கு நான் வந்திருக்கிறேன். ஒருவகையில் இப்போது நடப்பதும் விடுதலைப் போராட்டம்தான். இது சர்வாதிகாரியிடம் இருந்து ஜனநாயகத்தை



மீட்பதற்கான விடுதலைப் போராட்டம்! தேர்தல் மூலம் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் அறப் போராட்டம்! இந்த அறப்போருக்கு உங்களை அழைக்கத்தான் நான் வந்திருக்கிறேன்! தேர்தல் ஜனநாயகப் போர்க்களத்திற்கு அறைகூவல் விடுக்கும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள அனைவருக்கும் வணக்கம்!

### சிறுபான்மை இயக்கத்துக்கு என்றும் துணை தி.மு.க.!

இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் வேட்பாளராக நவாஸ் கனி போட்டியிடுகிறார். எப்போதும், தி.மு.க. கூட்டணியில் முஸ்லிம் லீக்கிற்குத்தான் முதலில் தொகுதி பங்கீடு செய்யப்படும்! பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள் எப்போதும் நமக்கு உறுதுணையாக இருப்பவர். ஏன் என்றால், தி.மு.க. எப்போதும் சிறுபான்மை இயக்கத்துக்குத் துணையாக இருக்கும் இயக்கம்!

அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் பெற்று, ஏணிச் சின்னத்தில் போட்டியிடும், நவாஸ் கனி அவர்களைக் கடந்த தேர்தலை விட, அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வையுங்கள்!

கடந்த 2019 தேர்தலின்போது, நான் தூத்துக்குடியில் பேசியபோது, ”என் தங்கை கனிமொழிக்கு வாக்களியுங்கள் அவர் நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவார் – என் கடன் பணி செய்து கிடப்பதே என்று உழைப்பார் என்று கூறி வாக்குகள் கேட்டேன். நீங்களும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைத்தீர்கள்.

### நாடாளுமன்றத்தில் - ஒட்டுமொத்த இந்தியாவுக்காகவும் முழங்கியவர் என் தங்கை கனிமொழி!

தூத்துக்குடியில் மக்களுடன் மக்களாக கனிமொழி வாழ்ந்தார்; உழைத்தார்; போராடினார்; உங்களுக்காக நாடாளுமன்றத்தில் பேசினார். பேசினார் என்று சொல்வதைவிட, ‘கர்ஜனை மொழி’யாக முழங்கினார். தூத்துக்குடிக்காக மட்டும் அவர் பேசவில்லை, தமிழ்நாட்டிற்காகப் பேசினார்; ஒட்டுமொத்த இந்தியாவிற்காகப் பேசினார்.

மழை வெள்ளம் ஏற்பட்டபோது, அவரே தண்ணீரில் இறங்கி, மக்களுடன் மக்களாக நின்று, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதையெல்லாம், நீங்களே பார்த்தீர்கள். இதைக் கூறினால், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ‘குடும்ப அரசியல்’ என்று பழைய பல்லவியைப் பாடுவார். எங்கள்மேல் எந்தக் குற்றச்சாட்டும் விமர்சனமும் வைக்க முடியாதவர்கள் செய்யும் அவதூறு அது.

> **தூத்துக்குடியில் மக்களுடன் மக்களாக கனிமொழி வாழ்ந்தார்; உழைத்தார்; போராடினார்; உங்களுக்காக நாடாளு மன்றத்தில் பேசினார். பேசினார் என்று சொல்வதைவிட, ‘கர்ஜனை மொழி’யாக முழங்கினார். தூத்துக்குடிக்காக மட்டும் அவர் பேசவில்லை, தமிழ்நாட்டிற்காகப் பேசினார்; ஒட்டுமொத்த இந்தியாவிற்காகப் பேசினார்.**



பிரதமர் மோடி அவர்களே நாங்கள் உழைப்பதற்காக அரசியலுக்கு வந்திருக்கிறோம். ஊர் சுற்ற வரவில்லை! எப்படி மக்கள் பணியாற்ற வேண்டும் என்று எங்களுக்கு கற்றுக் கொடுத்தது யார்? தலைவர் கலைஞர் அவர்கள்!

எங்களுக்கு என்றால், தனிப்பட்ட எனக்கும் கனிமொழிக்கும் மட்டுமல்ல; இங்கு மேடையில் இருக்கும் நிர்வாகிகளுக்கு மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு தொண்டனுக்கும் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

### ஒவ்வொரு குடும்பத்துக்கும் நன்மை செய்யும் கட்சி தி.மு.க. !

அதனால்தான், அடிக்கடி சொல்கிறோம்; ஆமாம், நாங்கள் குடும்பக் கட்சிதான்! தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நன்மை செய்கின்ற கட்சி! ஒவ்வொரு நாளும் காலை முதல் இரவு வரை மக்களுடன் மக்களாக இருந்து, மக்களுக்காகப் பணியாற்றிக் கொண்டு இருக்கும் கட்சி! தமிழ்நாடு மொழி – இனம் பண்பாட்டு ரீதியாக, ஒடுக்கப் பட்டதை எதிர்த்து உருவானதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

### கொள்கை உரம் மிக்க கூட்டம் நாங்கள்!

இந்த தமிழ்நாட்டை எப்படியாவது அடிமைப் படுத்திவிட முடியாதா? என்று பகல் கனவு காணும் உங்களின் தூக்கத்தைக் கெடுக்கும் கொள்கை வாரிசுகள் நாங்கள்! இப்படிப்பட்ட கொள்கை உரமிக்க தன்மானக் கூட்டத்தைப் பார்த்தால் உங்களுக்குக் கசக்கத்தான் செய்யும்!

அதனால்தான் இந்தத் தூத்துக்குடி மக்களின் பிரதிநிதியான கனிமொழியை, மேடையில் இருக்கும்போதே நீங்கள் அவமதித்தீர்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## தங்கள் குடும்பங்களில் ஒருவனாக – தூத்துக்குடி

# மீனவர்களும் - வணிகர்களும் என்னை அரவணைத்துக் கொண்டார்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

தூத்துக்குடி, மார்ச் 27 -

**தூத்துக்குடியில் மீனவர்களும் - வணிகர்களும் என்னை தங்கள் குடும்பங்களில் ஒருவனாக அரவணைத்துக் கொண்டதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு ஆதரவாக, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.03.2024) தூத்துக்குடி காமராஜர் காய்கறி சந்தையில் சிறு வணிகர்கள், லயன்ஸ் டவுன் பகுதி மீனவ மக்கள் எனப் பல தரப்பினரிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது தொழிலாளர்கள், பெண்கள், பொதுமக்கள், சிறுவர்கள் என அனைத்துத் தரப்பினரும் அவருடன் ஆர்வத்துடன் செல்பி எடுத்துக் கொண்டனர்.

மேலும், வாக்கு சேகரிப்பின் இடையே லயன்ஸ் டவுன் பகுதி மக்களின் அழைப்பை ஏற்று அவர்கள் இல்லத்தில் தேநீர் அருந்தி, அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

இதுகுறித்து சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது:-

**“தூத்துக்குடியில் மீனவ நண்பர்களிடமும் வணிகத் தோழர்களிடமும் வாக்கு சேகரித்தபோது....**

**தங்கள் குடும்பங்களில் ஒருவன் என என்னை அவர்கள் அரவணைத்துக் கொண்டார்கள்!”**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் இன்றைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| 27.03.2024 (புதன்கிழமை) | - தென்காசி, விருதுநகர். |

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 27-03-2024

# பத்திரங்களுக்குப் பின்னால்...!

தேர்தல் பத்திரங்களைத் தோண்டத் தோண்ட புது புது பூதம் கிளம்பிக் கொண்டே இருக்கிறது!

காங்கிரஸ் கட்சியும், ஆம் ஆத்மி கட்சியும் இது தொடர்பாக வைத்துள்ள பகிரங்க குற்றச்சாட்டுகளுக்கு இதுவரை பா.ஜ.க. தலைமையோ உள்துறை அமைச்சர் அமித்ஷாவோ பதில் சொல்லவில்லை.

**“மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்ற பா.ஜ.க. தலைவர் நட்டாவை அமலாக்கத்துறை கைது செய்ய வேண்டும்”** என்று கோரிக்கை வைத்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

**“மதுபான முறைகேடு புகாரில் கைது செய்யப்பட்ட அரவிந்தோ ஃபார்மா இயக்குனரிடம் பா.ஜ.க. ரூ.55 கோடி தேர்தல் நன்கொடை பத்திரத்தை பெற்றுள்ளது. ரூ.55 கோடிக்கு பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரம் வழங்கிய பின்னர் அரவிந்தோ ஃபார்மா இயக்குனர் ஜாமீனில் விடுவிக்கப் பட்டிருக்கிறார் . மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்றது குறித்து பிரதமர் மோடியும், பா.ஜ.க. தலைவர் நட்டாவும் விளக்கம் அளிக்க வேண்டும். இது குறித்து அமலாக்கத்துறையும் விளக்கம் அளிக்க வேண்டும்”** என்று - ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை வைத்துள்ளது.

மதுபானக் கொள்கை வழக்கு தொடர்பாக டெல்லி முதலமைச்சர் கைது செய்யப்பட்டுள்ளார். துணை முதலமைச்சர் 13 மாதமாக சிறையில் இருக்கிறார். ஆனால் அது தொடர்பாக குற்றம் சாட்டப்படும் நிறுவனத்திடம் இருந்து பா.ஜ.க. நன்கொடைப் பெற்றுள்ளதை ஆம் ஆத்மி கட்சி அம்பலப்படுத்தி உள்ளது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் ஒன்றிய முன்னாள் அமைச்சருமான ஜெய்ராம் ரமேஷ் வைத்துள்ள குற்றச்சாட்டுகள் இதை விட பகிரங்கமானவை.

“கருப்பு பணத்தை ஒழிப்பேன் என்று உறுதி அளித்த பிரதமர் மோடி, ஊழலைச் சட்டப் பூர்வமாக்கி விட்டு இப்போது அதனை மறைக்க முயற்சி செய்கிறார். இந்த அப்பட்டமான ஊழல், நான்கு வழிமுறைகளில் நடந்துள்ளன.

* முதலாவதாக, ‘நன்கொடை கொடு, வாய்ப்பைப் பெறு’. அதாவது, ப்ரீப் பெய்டு லஞ்சம்.

* இரண்டாவதாக, ‘ஒப்பந்தம் பெறு, லஞ்சம் கொடு’. அதாவது போஸ்ட் பெய்டு லஞ்சம்.

* மூன்றாவது வழிமுறை என்பது ‘ஹாஃப்தா வசூல்’. அதாவது ரெய்டுக்கு பின்னர் லஞ்சம். முதலில் நிறுவனங்களுக்கு சோதனை செய்ய அமலாக்கத் துறை, சி.பி.ஐ. அனுப்பப்படும், அதிலிருந்து தப்பிக்க அந்த நிறுவனம் தேர்தல் பத்திரங்கள் வழங்கும்.

* நான்காவது, ஷெல் நிறுவனங்களின் பயன்பாடு.

தேர்தல் பத்திரங்கள் வழியாக நன்கொடை வழங்கியதன் மூலம் 38 கார்ப்பரேட் நிறுவனங்கள், 179 முக்கியமான ஒப்பந்தங்கள் மற்றும் திட்டங்களை ஒன்றிய மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகளிடம் இருந்து பெற்றுள்ளது பகுப்பாய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலமாக ரூ.2,004 கோடி நன்கொடை வழங்கியதன் மூலமாக மொத்தம் ரூ.3.8 லட்சம் கோடி மதிப்புள்ள திட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளன.

41 கார்ப்பரேட் நிறுவனங்கள் மொத்தமாக 56 முறை, அமலாக்கத் துறை, சி.பி.ஐ., வருமான வரித் துறை சோதனைகளுக்கு ஆளாகியுள்ளன. இந்நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு ரூ.2,592 கோடி கொடுத்துள்ளன. இதில் ரூ.1,853 கோடி விசாரணை அமைப்புகளின் சோதனைக்குப் பின்னர் கொடுக்கப்பட்டுள்ளது” என்று ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டி இருக்கிறார்.

**“இந்த மக்களவைத் தேர்தலில் இண்டியா கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால், தேர்தல் பத்திர ஊழலை விசாரிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்படும். அதானி விவகாரத்தை விசாரிக்க கூட்டு நாடாளுமன்றக் குழு அமைக்கப்படும். அதேபோல், பி.எம். கேர்ஸ் ஃபண்ட் குறித்து சிறப்புக் குழு மூலம் விசாரிக்கப்படும்”** என்றார் அவர். இவை அனைத்தும் பா.ஜ.க.வின் ஊழல் பாதைகள் ஆகும்.

வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லக் கூடிய பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளர்கள் வாய்மூடிக் கிடக்கிறார்கள். பதில் அளிக்க முடியவில்லை.

கடந்த சனவரி மாதமே இது தொடர்பான ரகசியங்கள் ஆங்கிலச் செய்தி இணையதளங்கள் மூலமாகக் கசிந்தன. 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரையிலான தேர்தல் ஆணைய ஆவணங்கள், வழக்கு விவரங்கள், நிதி அறிக்கைளை ஆய்வு செய்து இதனை வெளிப்படுத்தியது.

**“கடந்த 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரை பா.ஜ.க.வுக்கு நிதியளித்த நிறுவனங்கள் பட்டியலை பரிசீலித்ததில் அதில் 30 நிறுவனங்கள் மீது அதே காலகட்டத்தில் ஒன்றிய அரசின் ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. ரெய்டு நடத்தியுள்ளது. இந்த 30 நிறுவனங்களும் மொத்தம் ரூ.335 கோடியை பா.ஜ.க.வுக்கு தேர்தல் நிதியாக தந்துள்ளன. இதில் 23 நிறுவனங்கள் ரெய்டு நடத்தப்படும் வரை பா.ஜ.க.வுக்கு ஒரு பைசா கூட தேர்தல் நிதி தந்தது இல்லை. ரெய்டு நடத்தப்பட்டதும் அந்த 23 நிறுவனங்களும் பா.ஜ.க.வுக்கு நிதி தர ஆரம்பித்துள்ளன. மொத்தம் ரூ.187.58 கோடி நிதியை அந்த நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு வாரி வழங்கி உள்ளன. 4 கம்பெனிகளில் ரெய்டு நடத்தப்பட்ட 4 மாதத்துக்குள் பா.ஜ.க.வுக்கு நிதி தந்துள்ளன. பா.ஜ.க.வுக்கு ஏற்கனவே குறைவாக நிதி தந்த 6 நிறுவனங்கள் மீது ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களிலேயே அந்த நிறுவனங்கள் பல மடங்கு அதிக நிதியை பா.ஜ.க.வுக்கு கொடுத்துள்ளன. தொடர்ந்து பல ஆண்டுகளாக பா.ஜ.க.வுக்கு நிதி தந்த நிறுவனங்கள் திடீரென நிதி தருவதை நிறுத்திவிட்டால் கூட ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. இப்படி 6 நிறுவனங்களை ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர். ரெய்டு நடந்து கொண்டிருக்கும் போதே சில நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு நிதி தந்ததும் தெரியவந்துள்ளது. நன்கொடை தந்த 3 நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசிடம் இருந்து லைசென்ஸ் உள்ளிட்ட சலுகைகள் கிடைத்துள்ளது”** என்று அவை வெளியிட்டன. இவையும் இது வரை பா.ஜ.க.வால் மறுக்கப்படவில்லை.

இதைப்பற்றி எல்லாம் கேள்வி கேட்டால், ‘இவை அனைத்தும் கற்பனை’ என்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்திருக்கிறது தேர்தல் பத்திரங்கள். கிழிக்கப்பட்ட பத்திரங்களுக்கு பின்னால் பா.ஜ.க.வின் ஊழல் முகம் கோரமாகத் தெரிகிறது.




தாம்பரம் மாநகர தி.மு.கழகம் சார்பில் மேற்கு தாம்பரம், காமராஜ் தெருவில் அமைக்கப்பட்டுள்ள இந்தியா கூட்டணியின் தலைமை தேர்தல் பணிமனையை திருப்பெரும்புதூர் கழக வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு, அமைச்சரும், காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளருமான தா.மோ.அன்பரசன் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தொகுதி பொறுப்பாளர் மருது கணேஷ், மேயர்.க,வசந்தகுமாரி மண்டல குழு தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள் டி,காமராஜ், எஸ்.இந்திரன், மாநகர கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் (து) அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து – இன்று

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அரக்கோணம் தொகுதியில் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, மார்ச் 27 -

அரக்கோணம் நாடாளுமன்றவெற்றி வேட்பாளார் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இதுகுறித்து மாவட்ட தி.மு.க. செயலாளர், கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் இராணிபேட்டை ஆர். காந்தி அறிக்கை வருமாறு:

அரக்கோணம் நாடாளுமன்ற மதச்சார்பற்ற ‘இந்தியா’ கூட்டணியின் வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து, கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், வருங்கால தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (27.03.2024 புதன் கிழமை) கீழ்க்கண்ட இடங்களில் பரப்புரை மேற்கொள்ள உள்ளார்.



இன்று காலை 10.00 ஆற்காடு பேருந்து நிலையம்

காலை 10.45 இராணி பேட்டை, முத்துக்கடை பேருந்து நிலையம்

காலை 11.30 வாலாஜா பேருந்து நிலையம்

மதியம் 12.30 சோளிங்கர் பேருந்து நிலையம்

மாலை 5.00 திருத்தனி, கமலா திரையரங்கம் அருகில்

மாலை 6.00 அரக்கோணம் பழைய பேருந்து நிலையம் அருகில் என பிரச்சாரம் செய்கிறார்.

மேற்கண்ட இடங்களில் தேர்தல் பரப்புரை மேற்கொள்ளும்போது அந்தந்த சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு, BLA2, BLC, மற்றும் கிளைக் கழக வார்டு, ஊராட்சி, உட்கிளை நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்காள பெருமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை, வெற்றிகரமாக நடைபெற்றிட கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் - அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி கேட்டுக்கொண்டார்.

### வேட்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து

## திருத்தணியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, மார்ச் 27-

அரக்கோணம் நாடாளுமன்ற கழக வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆதரித்து திருத்தணியில் கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார். அமைச்சர் ஆர்.காந்தி முன்னிலை வகிக்கிறார்.

கூட்டணி கட்சித் தோழர்கள் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து இன்று (27.03.2024 புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகரத்தில் உள்ள கமலா திரையரங்கம் அருகில் கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி முன்னிலையில் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

இதில் இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள் மற்றும் கூட்டணி கட்சி தோழர்கள், கழக மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமார் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு செயலாளர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக திருத்தணி. எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

## மயிலாடுதுறை காங்கிரஸ் வேட்பாளர் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 27 –

மக்களவை தேர்தலில் தமிழகத்தில் திமுகவுடன் கூட்டணியில் காங்கிரஸ் 9 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதில், ஏற்கனவே தமிழகத்தில் 8 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டது.

அதன்படி, திருவள்ளூர் (தனி) – சசிகாந்த் செந்தில், கிருஷ்ணகிரி – கே. கோபிநாத், கரூர் –ஜோதிமணி, கடலூர் – எம்.கே. விஷ்னு பிரசாத், சிவகங்கை – கார்த்தி சிதம்பரம், விருதுநகர் – மாணிக்கம் தாகூர், கன்னியாகுமரி – விஜய் வசந்த், நெல்லை – ராபர்ட் ப்ரூஸ் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது.

விளவங்கோடு இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் தாரகை கத்பட் போட்டியிடுகிறார். ஆனால், மயிலாடுதுறை தொகுதிக்கான காங்கிரஸ் வேட்பாளர் அறிவிக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில், மயிலாடுதுறை தொகுதிக்கான காங்கிரஸ் வேட்பாளர் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மயிலாடுதுறை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக வழக்கறிஞர் ஆர்.சுதா போட்டியிடுகிறார். வேட்பாளர் ஆர்.சுதா இன்று மனு தாக்கல் செய்கிறார்.



தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதியிடம் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மேயர் ஜெகன் பெரியசாமி, இந்தியத் தேசிய காங்கிரஸ் துணைத் தலைவர் ஏ.பி.சி.சண்முகம் ஆகியோர் உடன் இருந்தனர். முன்னதாக தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி திருவுருவச் சிலைக்கு கனிமொழி கருணாநிதி மாலை அணிவித்தார்.

# தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பாற்ற ஒரு துரும்பையும் எடுத்துப் போடாத பிரதமர், எந்த முகத்தை வைத்துக் கொண்டு வாக்குக் கேட்கிறார்?

## எட்டயபுரத்தில் கழகத் தலைவர் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்று இல்லை ஒரு பெண் என்றாவது மதித்தீர்களா? தூத்துக்குடி மக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் என்றாவது மதித்தீர்களா? உண்மையில் நீங்கள் கனிமொழியை அவமதிக்கவில்லை, தூத்துக்குடி மக்களைத்தான் அவமதித்தீர்கள்!

ஜூன் 4ஆம் தேதி பாருங்கள் கனிமொழியை மீண்டும் தூத்துக்குடி மக்கள் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பத்தான் போகிறார்கள். அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் பா.ஜ.க. அதைப் பார்க்கத்தான் போகிறீர்கள்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.3.2024) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் நடைபெற்ற இந்தியா கூட் கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தூத்துக்குடி தொகுதி வேட்பாளர் திருமதி.கனிமொழி மற்றும் இராமநாதபுரம் தொகுதி வேட்பாளர் நவாஸ்கனி ஆகியோருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ரகுபதி, திருமதி.கீதா ஜீவன், ராஜகண்ணப்பன், அனிதா ராதாகிருஷ்ணன், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், முருகேசன், கருமாணிக்கம், அமிர்தராஜ், சண்முகய்யா, சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன், முக்குலத்தூர் புலிப்படை கட்சித் தலைவர் கருணாஸ், மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல் ராஜன், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் சுரேஷ் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

**தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டை மறக்க முடியுமா நினைத்தால் நெஞ்சமெல்லாம் பதறுகிறது!**

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், தூத்துக்குடி என்றாலே நமக்கு நினைவுக்கு வந்தது எது? துப்பாக்கிச் சூடு! 13 பேர் அநியாயமாகக் கொல்லப்பட்டதை மறக்க முடியுமா? அப்படியொரு மனிதநேயமற்ற கொடூரமான துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்தான் பழனிசாமி! தமிழ்நாட்டு வரலாற்றில் அ.தி.மு.க. ஆட்சியால் வைக்கப்பட்ட மிகப்பெரிய கரும்புள்ளி. துயரமும் கொடூரமுமான அந்தச் சம்பவத்தை இப்போது நினைத்தாலும் நெஞ்சமெல்லாம் பதறுகிறது.

2018ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான் உடனடியாகத் தூத்துக்குடிக்கு வந்தேன். துப்பாக்கிச் சூட்டின் சத்தமும் – மக்களின் மரண ஓலமும் ஒலித்துக் கொண்டிருந்த அந்தக் காட்சி, இப்போதும் என் மனதை விட்டு அகலவில்லை. இரத்தத்தை உறைய வைக்கும் இந்தச் சம்பவம் பற்றி அன்றைய முதலமைச்சர் பழனிசாமியிடம் ஊடகங்கள் கேட்டபோது, என்ன கூறினார்? ”இப்படி ஒரு சம்பவம் நடந்ததே எனக்குத் தெரியாது. உங்களைப்போல் நானும் டி.வி. பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று துளிகூட நெஞ்சில் ஈரம் இல்லாமல் பழனிசாமி பேட்டி அளித்ததை யாரும் மறந்திருக்கவே முடியாது.

**பழனிச்சாமியின் பொய்யைத் தோலுரித்த – அருணா ஜெகதீசன் ஆணையம்!**

“உள்துறையைக் கையில் வைத்திருந்த மாநிலத்தின் முதலமைச்சர் பேசும் பேச்சா அது? என்று நாடே கோபத்தில் கொந்தளித்தது. அந்தளவுக்குப் பெரிய பொய்யை கூறினார் பழனிசாமி. ஒரு பழமொழி கூறுவார்கள் ‘கடப்பாரையை முழுங்கிவிட்டு கசாயம் குடித்துவிடுவார்கள்’ என்று! அந்தள விற்குப் பெரிய பொய்யைப் பழனிசாமி அன்று கூறினார். அவர் கூறியது எவ்வளவு பெரிய பொய் என்று அவர்கள் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஆணையமே கூறிவிட்டது. நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கையில் பழனிசாமி கூறியது பொய் என்று தெளிவாக வந்துவிட்டது.

## தூத்துக்குடியில் மனிதநேயமற்ற கொடூரமாக துப்பாக்கிச்சூடு நடத்தி 13 பேரை அநியாயமாகக் கொன்றவர் எடப்பாடி பழனிசாமி!

‘பச்சைப்பொய் பழனிசாமி’ என்று மக்கள் சும்மாவா சொன்னார்கள்! பழனிசாமிக்குத் தெரிந்துதான் துப்பாக்கிச் சூடு நடந்தது என்று ஆணையம் ஆதாரப்பூர்வமாகக் கூறியிருக்கிறது. ஆணையத்தில் சாட்சியாக விசாரிக்கப்பட்டவர்கள் யார் தெரியுமா? அப்போது இருந்த தலைமைச் செயலாளர்! அடுத்து, சட்டம்ஒழுங்குப் பொறுப்பிலிருந்த அப்போதைய டி.ஜி.பி.! அன்றாட நிகழ்வுகளை முதலமைச்சருக்குச் சொல்லும் அப்போதைய உளவுத்துறை ஐ.ஜி.! இப்படி அரசின் உயர் பொறுப்புகளில் இருந்த அனைவரும் கூறிய சாட்சியத்தை வைத்துத்தான், பழனிசாமிக்கு தெரிந்துதான் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது என்று ஆணையம் உறுதி செய்தது!

தூத்துக்குடியில் நடக்கின்ற சம்பவங்களையும், அங்குள்ள நிலவரங்களையும் நிமிடத்திற்கு நிமிடம் எடப்பாடி பழனிசாமியிடம் ‘அப்டேட்’ செய்ததாக அவர்கள் கூறினார்கள். எனவே, ஊடகங்கள் மூலமாகத்தான் துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி தெரிந்து கொண்டதாகப் பழனிசாமி கூறியது தவறானது என்று ஆணையத்தின் அறிக்கையில் வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது.

## விவசாயிகளை எதிரிகள் போல் நடத்துவதுதான் மோடி மாடலா?

**ஆணைய அறிக்கை ஏற்று – கழக அரசின் அடுக்கடுக்கான அறிவிப்புகள்!**

இவ்வாறு, பழனிசாமியின் பொய்யை அம்பலப் படுத்திய ஆணையம், தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்டதல்ல! அ.தி.மு.க. ஆட்சியில் பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோதே அமைக்கப்பட்டது! தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் நீதியரசர் அருணா ஜெகதீசன் அவர்களின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், நம்முடைய கழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்தது.

கலவரத்தில் ஈடுபடாத நபர்கள் மீது பதிவு செய்யப்பட்ட 38 வழக்குகளைத் திரும்பப் பெற்றோம். போராட்டத்தின்போது காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்ட 93 நபர்களுக்கு, அவர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் அனுபவித்த மன வேதனைகளின் பொருட்டு 1 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது.

காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டு, பிறகு இறந்த பரத்ராஜ் என்பவரின் தாயாருக்கு 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டது. திரும்பப் பெறத் தகுதி யுள்ள 38 வழக்குகளில் தொடர்புடைய நபர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காகத் ”தடையில்லாச் சான்றிதழ் வழங்க அரசாணை வெளியிடப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் – 26.05.2021 அன்றே உத்தரவிட்டோம்.

**18 நபர்களுக்கு கல்வித் தகுதிக்கேற்ப பணி வழங்கினோம்!**

தூத்துக்குடிச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 21 நபர்களுக்கு, கடந்த ஆட்சியில் கண்துடைப்பாகச் சில பணிகள் வழங்கப்பட்டன. அவர்கள் தங்களின் படிப்புத் தகுதிக்கு ஏற்ற பணிகளைக் கேட்டார்கள். அதை நிறைவேற்றிக் கொடுத்ததும் தி.மு.க. அரசுதான்! அவர்கள் கல்வித் தகுதிக்கு ஏற்ற பணியிடங்கள் 18 நபர்களுக்கு வழங்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேல், இந்தத் துயரங்களுக்கு எல்லாம் காரணமான ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாகத் திறக்க முடியாதபடி சமீபத்தில் உச்சநீதிமன்றத்தில் உறுதியான வாதங்களை முன்வைத்து வெற்றி கண்டது, நம்முடைய திராவிட மாடல் அரசுதான்!

**பாதிக்கப்பட்டோர் வாழ்வில் ஒளி வீசும் உதயசூரியன்; தி.மு.க. ஆட்சி!**

ஒரு ஆட்சி நிர்வாகம் ஈவு இரக்கமில்லாமல் எப்படி நடக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு கடந்த அ.தி.மு.க. ஆட்சி! ஆனால், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களின் வாழ்க்கையில், ஒளி வீசும் உதயசூரியனாக இருக்கிறது தான் நம்முடைய தி.மு.க. ஆட்சி! இந்தத் திராவிட மாடல் ஆட்சி!

மக்கள் விரோத ஆட்சி நடத்திய பழனிசாமி, தன் ஆட்சி அவலங்களை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறார். மக்களை ஏமாற்ற மீண்டும் அவர் பிரச்சாரம் செய்யத் தொடங்கியிருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்னால் திருச்சியில் பேசிய பழனிசாமி, எனக்கு இரண்டு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறார்.

ஒன்று, தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும்தான் போட்டி என்று கூறியிருக்கிறார். அந்தளவிற்காவது பழனிசாமிக்குப் புரிதல் இருக்கே என்று, எனக்கு முதல் மகிழ்ச்சி!

**எங்கள் சாதனை – அ.தி.மு.க. துரோகம்! மக்கள் எடைபோட்டு தீர்ப்பளிப்பீர்!**

பழனிசாமி அவர்களே களத்தில் மோதுவோம்! எங்கள் சாதனைகளையும் உங்கள் துரோகங்களையும் எடைபோட்டு மக்கள் தீர்ப்பளிக்கட்டும்! எங்கள் கொள்கைகள் எப்படி உயர்வானது! அந்தக் கொள்கைகளுக்காக நாங்கள் எப்படி உறுதியுடன் நிற்கிறோம்! கொள்கை அடிப்படையில் ஆட்சி நடத்தி, திட்டங்களைச் செயல்படுத்துகிறோம் என்று ஒவ்வொரு நாளும் மக்கள் பார்க்கிறார்கள்

அதேபோல், பழனிசாமி என்பவர் யார்? நேற்று யாருடன் இருந்தார்; இன்றைக்கு யாருடன் இருக்கிறார்; நாளைக்கு யாருடன் இருப்பார்; சுயநலத்தின் முழு உருவமாகத் தமிழ்நாட்டின் உரிமைகளை எப்படி அடகு வைத்தார்; நேரத்திற்கு ஏற்ற மாதிரி எப்படியெல்லாம் தவழ்ந்து தவழ்ந்து பழனிசாமி போராடுவார் என்று மக்கள் எடைபோட்டுத் தீர்ப்பளிப்பார்கள்!

எப்படி என்னைப் பற்றி அவதூறுகளைப் பரப்பி, விமர்சித்துப் புடம் போட்ட தங்கமாக எஃகுபோல் நெஞ்சுறுதி கொண்டவனாக மாற்றியிருக்கிறார்களோ – அதேபோல், இப்போது தம்பி உதயநிதியையும் விமர்சிக்கத் தொடங்கியிருக்கிறார். இது இரண்டாவது மகிழ்ச்சி!

பழனிசாமி அவர்களே எங்களைத் தொடர்ந்து விமர்சியுங்கள்! வரவேற்கிறோம்! விமர்சனங்கள் ஆக்கபூர்வ மானதாக இருந்தால், சொல்வது யார் என்று பார்க்கமாட்டோம் பயனடைவது மக்கள் என்று செயலாற்றுவோம் இதுதான் தி.மு.க.!

**பா.ஜ.க.வை விமர்சிப்பதே இல்லை! எஜமான விசுவாசம் தடுக்கிறது!**

நடப்பது நாடாளுமன்றத் தேர்தல்! கடந்த பத்தாண்டு களில் நாட்டை நாசப்படுத்திப் படுகுழியில் தள்ளியிருப்பது பா.ஜ.க.! எந்த பா.ஜ.க.? ‘மோடிதான் எங்கள் டாடி‘ என்று பாதம்தாங்கிளாகத் தூக்கி தலையில் சுமந்தீர்களே அந்தப் படுபாவி பா.ஜ.க.! எந்த பா.ஜ.க.? தங்களுக்கு எதிரான ஓட்டுகள் பிரிய வேண்டும் என்று உங்களுக்கு ஸ்க்ரிப்ட் கொடுத்துள்ளதே அந்த பா.ஜ.க.! அந்த பா.ஜ.க.வைக் கண்டித்து விமர்சித்து ஒரு வார்த்தைகூட உங்களிடமிருந்து வரவில்லையே? எஜமான விஸ்வாசம் தடுக்கிறதா?

பழனிசாமி அவர்களே உங்களுக்கு, முன்னாள் இந்நாள் கிடையாது எந்நாளும் பா.ஜ.க.தான் எஜமானர்கள் நீங்கள் அவர்களின் பாதம்தாங்கிகள் மனமுவந்து தமிழ்நாட டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் துரோகம் இழைக்கும் கொள்கையற்ற கூட்டம் நீங்கள்! மோடியைப் பற்றி பாசாங்கிற்காகக்கூட பத்து சொற்களை பேசாத பாதம்தாங்கி பழனிசாமிதான், தமிழ்நாட்டைக் காப்பாற்றப் போகிறாராம்; உரிமைகளை மீட்கப் போகிறாராம்.

பழனிசாமி அவர்களே அனைத்து உரிமைகளையும் அடகு வைத்தது நீங்கள்தான்! உங்களுக்கு இதையெல்லாம் கூற அருகதை இருக்கிறதா?

இப்படி பாதம்தாங்கி பழனிசாமி ஒரு பக்கம் என்றால் அவரின் ‘ஓனர்’ மோடி மற்றொரு பக்கம் வந்திருக்கிறார். தேர்தல் நேரத்தில்தான் மோடி அவர்களைத் தமிழ்நாட்டுப் பக்கம் பார்க்க முடியும். சில நாட்களுக்கு முன்னால், கன்னியாகுமரிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதற்கும் – கைது செய்யப்படுவதற்கும், தி.மு.க.வும் – காங்கிரசும்தான் காரணம் என்று கூறியிருக்கிறார்.

”நான் ஆட்சிக்கு வந்தால், ஒரு மீனவர்கூட தாக்கப்பட மாட்டார் – கைது செய்யப்பட மாட்டார் என்று மார்தட்டினாரே மோடி? ஆனால், வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, இராமநாதபுரம் – தூத்துக்குடி என்று பல்வேறு மாவட்ட மீனவர்களுக்குச் சிறைத் தண்டனை, படகுகள் பறிமுதல், படகுகள் நாட்டுடைமை, கடும் அபராதம், மூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது என்று, தமிழ்நாட்டு மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படை அறிவிக்கப்படாத ஒரு போரை நடத்துவது மோடி ஆட்சியில்தான்!

**பிரதமர் மோடி, விஸ்வகுருவா – மவுன குருவா?**

பிரதமர் மோடி அவர்களே இதையெல்லாம் வேடிக்கை பார்ப்பது யார்? நீங்கள்தானே! தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தட்டிக் கேட்க நீங்கள் தயங்குவது ஏன்? பாதிக்கப்படுவது தமிழ்நாட்டு மீனவர்கள் என்பதாலா? கதறி அழுவது தமிழ்நாட்டுப் பெண்கள் என்பதாலா? குஜராத் மீனவர்கள்மீது பாகிஸ்தான் துப்பாக்கிச் சூடு நடத்தினால், சிறையில் அடைத்தால், படகுகளை நாட்டுடைமை ஆக்கினால் இப்படித்தான் அமைதியாக இருப்பீர்களா? நீங்கள்தான் பெரிய விஸ்வகுருவாயிற்றே! இலங்கையை உங்களால் கண்டிக்க முடியாதா? நீங்கள் விஸ்வகுருவா? இல்லை மவுனகுருவா? பதில் கூறுங்கள் மாண்புமிகு மோடி அவர்களே பதில் கூறுங்கள் என்று நான் மட்டும் கேட்கவில்லை தூத்துக்குடி இராமேஸ்வரம் மீனவர்கள் மட்டும் கேட்கவில்லை ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மீனவர்களும் கேட்கிறார்கள்!

## பாதம் தாங்கி பழனிசாமிக்கு எந்நாளும் பா.ஜ.க. தான் எஜமானர்கள்!

2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு, பாம்பனில் பா.ஜ.க. சார்பில் ‘கடல் தாமரை’ என்று ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது பா.ஜ.க. தலைவர்களில் ஒருவராக இருந்த அம்மையார் சுஷ்மா சுவராஜ் அவர்கள் இங்கு வந்திருந்தார்கள். “பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், கச்சத்தீவு மீட்கப்படும், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்” என்று கூறினார். இதெல்லாம் பத்தாண்டுக் காலத்தில் நடந்திருக்கிறதா? ”தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்படுவதும் – கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுவதும் தினசரி நடக்கிறது. இதற்கு காங்கிரஸ் அரசின் பலவீனம்தான் காரணம் என்று இராமநாதபுரத்தில் வைத்துதான் மரியாதைக்குரிய நரேந்திர மோடி அவர்கள் கூறினார்.

“மீனவர்கள் பாதுகாப்பாக வாழவேண்டும் என்றால், இந்தியாவில் வலுவான ஒன்றிய அரசு அமைய வேண்டும்” என்று கூறினார். மீனவர்கள் வாழ்வு சிறக்க சபதம் எடுப்பதாகக் கன்னியாகுமரியில் கூறினார். ”நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர்கூட உயிரிழக்க மாட்டார்கள் என்று கூறினார். தங்கச்சிமடம் மீனவர் பிரிட்டோ கொலை செய்யப்பட்டாரே, அது யார் ஆட்சியில்? மீனவர்கள்மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டதே, அப்போது நீங்கள் தானே பிரதமர்?

மேசியா நாகராஜன், செந்தில்குமார், சாம்சன், டார்வின் என்று நான்கு மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டார்களே அப்போது வேடிக்கை பார்த்த பிரதமர் யார்? நீங்கள்தானே!

**எந்த முகத்தை வைத்துக்கொண்டு – தமிழ்நாட்டு மீனவர்களிடம் வருகிறீர்கள்?**

தமிழ்நாட்டு மீனவர்களுக்கு எதிரான இலங்கையின் அராஜகங்கள், கைதுகள் அளவில்லாமல் போனது பா.ஜ.க. ஆட்சியில்தானே! இல்லையென்று ஆதாரப்பூர்வமாக மறுக்க முடியுமா? விஸ்வகுரு என்று விளம்பரப்படுத்திக் கொள்ளும் நீங்கள் தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பாற்ற ஒரு துரும்பையும் எடுத்துப் போடவில்லையே? எந்த முகத்தை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டு மீனவர்களிடம் ஓட்டு கேட்டு வருகிறீர்கள்?

தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பாற்றத் தவறிய பிரதமர் மோடி, திசைதிருப்பும் எண்ணத்துடன் எங்கள் மேல் குறை சொல்கிறார். ஒரு பிரதமர் வாக்கு கேட்டு வருகிறார் என்றால், தன்னுடைய ஆட்சிக் காலத்தில் செய்த சாதனைகளைக் கூறி வாக்கு கேட்க வேண்டும். மாறாக, பிரதமர் மோடி, எதிர்க்கட்சிகளைத் திட்டுவதில் நேரத்தை செலவு செய்து கொண்டு இருக்கிறார்.

**சுருக்குப்பை பணத்தைக் கூட உருவ – மோடி திட்டம்!**

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், வெளிநாட்டில் இந்தியர்கள் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணத்தை மீட்டு ஆளுக்கு 15 இலட்சம் ரூபாய் தரலாம் என்று கூறினாரே! கொடுத்தாரா? 15 ஆயிரமாவது கொடுத்தாரா? இல்லையே! உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், சுருக்குப் பையில் இருக்கும் பணத்தைகூட எப்படி உருவ வேண்டும் என்றுதான் திட்டம் போடுகிறார்!

ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவேன் என்று கூறினாரே! எங்கே அந்த வேலைவாய்ப்புகள்? உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, இப்போது மோடி ஆட்சியில்தான் வேலைவாய்ப்பின்மை தலை விரித்தாடுகிறது. உழவர்களின் வருமானம் இரண்டு மடங்கு ஆகிவிட்டதா? உழவர்களின் வாழ்வாதாரத்தையே பாழாக்குகிற மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்து, விவசாயிகளைத் தலைநகர் எல்லையில் போராடவிட்டு, அவர்கள் வெயிலிலும் மழையிலும் கஷ்டப்படுவதைப் பார்த்து சந்தோஷப்பட்டீர்கள். ஏதோ எதிரிகள் நம் நாட்டு எல்லைக்குள் நுழைந்ததைப்போல் தாக்குதல் நடத்துகிறீர்கள். விவசாயிகளை எதிரிகள் போல் நடத்துவதுதான் மோடி மாடலா?

**வாயாலேயே வடை சுடுவார் மோடி!**

அடுத்ததாக ஒன்று கூறினார். வீடு இல்லாதவர்களே இந்தியாவில் இருக்கமாட்டார்கள் என்று கூறினார். அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுத்துவிட்டாரா? இல்லையே. பெயர் மட்டும் பிரதமர் வீடு கட்டும் திட்டம். அதில் 60 விழுக்காடு பணம் மாநில அரசுதான் தர வேண்டும். இப்படி ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்ள அவமானமாக இல்லையா? இதுனால் தான், வாயாலேயே வடை சுடுவார் மோடி என்று சொல்கிறோம்.

தமிழ்நாட்டிற்குக் கொடுத்த எந்த வாக்குறுதியை யாவது மோடி நிறைவேற்றியிருக்கிறாரா? 2014 ஆம் ஆண்டு இராமநாதபுரத்திற்கு வாக்கு கேட்டு வந்த மோடி அவர்கள் என்ன கூறினார்? மிகப்பெரிய புண்ணியத் தலமான இராமேஸ்வரம், சுற்றுலாத் தலமாக மாற்றப்பட்டு, உலகத்தினர் அனைவரும் வந்து செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்று கூறினார். இராமேஸ்வரத்தை உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக மாற்றிவிட்டார்களா?

**மோடியின் மனதிற்கும் – தமிழ்நாட்டுக்கும் ரொம்ப தூரம்!**

மீண்டும் தனுஷ்கோடிக்கு இரயில் பாதை அமைக்க 2019 மார்ச் மாதம் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினாரே? அதன், இன்றைய நிலை என்ன? இராமேஸ்வரம் – தனுஷ்கோடி இடையே 17 கிலோ மீட்டர்தானே தூரம்? ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டதே 17 கிலோ மீட்டருக்குப் பாதை அமைக்க முடியாதா? பிரதமர் மோடி அவர்களே இராமேஸ்வரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் தூரம் இல்லை உங்கள் மனதிற்கும் தமிழ்நாட்டிற்கும்தான் ரொம்ப தூரம்!

இப்படி தமிழ்நாட்டிற்கு எதுவும் செய்யாமல், தமிழ்நாட்டிற்குக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல், அவர் கொண்டுவரும்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# எங்கள் வாக்குறுதிகள் நிறைவேற - 'இந்தியா' கூட்டணியை ஆதரிப்பீர்!

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை - 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

திட்டங்களுக்கு நான் தடையாக இருந்தேன் என்று கூறுகிறார். அவர் தமிழ்நாட்டிற்கு எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்? தமிழ்நாட்டிற்கு என்ன சிறப்புத் திட்டம் கொண்டு வந்தீர்கள் என்று நானும் நாள்தோறும் கேட்டுக் கொண்டே இருக்கிறேன் ஒரே ஒரு சிறப்புத் திட்டத்தைக்கூட பத்தாண்டுகள் பிரதமராக இருந்த மோடியால் கூற முடியவில்லை.

**தி.மு.க. அரசின் திட்டங்களைச் சொல்லட்டுமா?**

ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட இந்த மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றிய திட்டங்களைச் சொல்லட்டுமா?

திராவிட மாடல் அரசு என்பது, தமிழ்நாட்டு மக்களின் அரசு! பெருந்தலைவர் காமராசரின் சிந்தனைகளை உள்வாங்கி நடைபோடும் அரசு! அதன் அடையாளமாகத்தான், பெருந்தலைவர் காமராசர் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கியதுபோல், காலையில் பள்ளிக்கு வரும் குழந்தைகள் வெறும் வயிற்றுடன் இருக்கக் கூடாது என்று, காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

சிறிது நாட்களுக்கு முன்னால், எனக்கு ஒரு அஞ்சல் வந்தது. அதைப் பிரித்துப் பார்த்தால், அதில் 50 கடிதங்களுக்கு மேல் இருந்தன. அனைத்துமே இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகள் எனக்கு அனுப்பிய கடிதங்கள். காலை உணவுத் திட்டத்தால் பசியில்லாமல் தெம்பாக, உற்சாகமாகப் படிக்க முடிகிறது என்றும், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியதற்கு நன்றி என்றும் அந்தக் கடிதத்தில் கூறியிருந்தார்கள். முதலில் அரசுப் பள்ளிகளுக்கு மட்டுமே அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம், இப்போது அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டதால் மேலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் வயிறாரச் சாப்பிடுகிறார்கள். பணிச் சுமை குறைந்ததால் பெற்றோரும் மனதார வாழ்த்துகிறார்கள்.

அடுத்து, பெண் பிள்ளைகளுக்கு மாதா மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம்!

ஆண் மாணவர்களுக்கும் மாதா மாதம் 1000 ரூபாய் வழங்க இருக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்!

இளைஞர்களுக்கு, திறன்பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு பெற்று தரும், நான் முதல்வன் திட்டம்!

**தமிழ்நாட்டு மகளிரெலாம் எங்களை மனதார வாழ்த்துகிறார்கள்!**

இப்படி, பள்ளிக் குழந்தைகள் முதல் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் வரை, போற்றும் பல திட்டங்களை நிறைவேற்றுவதுதான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சி! கோடிக்கணக்கான குடும்பங்கள் பயனடையும் வகையில், மிகவும் கவனமாகத் திட்டங்களை வகுத்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அதில் முக்கியமானது, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'! எங்கள் தாய்வீட்டுச் சீர் மாதிரி, எங்கள் அண்ணன் ஸ்டாலின் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் தருகிறார் என்று தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 15 இலட்சம் சகோதரிகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்!

சமீபத்தில், திருப்பூரில் ஒரு சகோதரி பேசும் வீடியோவைப் பார்த்தேன்... அதில் சொல்கிறார்கள், டெய்லரிங் சென்றுதான் சம்பாதிக்கிறேன்... என்னுடைய வருமானத்தில் ஆயிரம் ரூபாய் கூடுதலாக கிடைத்த மாதிரி இருக்கிறது என்று மகிழ்ச்சியாகக் கூறினார்... இந்த ஆயிரம் ரூபாய் மளிகை வாங்க, குழந்தைகளுக்கு மருந்து மாத்திரை வாங்க, மாத கடைசியில் சிலிண்டர் வாங்க என்று தங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவிகரமாக இருப்பதாக மகிழ்ச்சியுடன் பேசினார்கள்!

இன்னும் இருக்கிறது, நாம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, தினமும் இலட்சக்கணக்கான மகளிர் சந்தோஷமாக, நாங்கள் ஸ்டாலின் அய்யா பஸ்சில், இலவசமாக பயணம் செய்கிறோம் என்று சொல்லும், 'விடியல் பயணம் திட்டம்'!

## ஒரு ஆட்சி நிர்வாகம் ஈவு இரக்கமில்லாமல் எப்படி நடக்கக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு அ.தி.மு.க. ஆட்சி!

வெளியூரில் வேலைக்குச் செல்லும் மகளிர் தங்குவதற்கு, 'தோழி விடுதி' என்று ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

இந்தத் திட்டங்களால் ஒவ்வொரு குடும்பமும் பயனடைகிறது என்று நெஞ்சை நிமிர்த்திப் பெருமையுடன் கூறுவேன்!

நம்முடைய திராவிட மாடல் அரசின் கொள்கை என்ன? "எல்லார்க்கும் எல்லாம், "அனைத்து மாவட்டங்களுக்கும் சீரான வளர்ச்சி. அதன் அடிப்படையில், கடந்த மாதம் 24ஆம் தேதி தூத்துக்குடி மாவட்டத்திற்கு நான் வந்து, வியட்நாம் நாட்டைச் சேர்ந்த 'வின் ஃபாஸ்ட்' நிறுவனத்தின் தொழிற்சாலைக்காக அடிக்கல் நாட்டியிருக்கிறேன். தூத்துக்குடி சிப்காட்டில் 16 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படவிருக்கும் இந்தத் தொழிற்சாலையால், முதல்கட்டமாக நான்காயிரம் பேருக்கு வேலை கிடைக்கப் போகிறது! தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியில் மிகப்பெரிய பங்களிப்பை அளிக்கப் போகிறது!

## பழனிசாமி அவர்களே, களத்திலே மோதுவோம்! எங்கள் சாதனைகளையும் - உங்கள் துரோகங்களையும் எடைபோட்டு மக்கள் தீர்ப்பளிக்கட்டும்!

இப்படி மக்களுக்கான நலத்திட்டங்களையும் சாதனைகளையும் ஒவ்வொரு நாளும் செய்த அந்த துணிச்சலுடன்தான் இந்த 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' உங்களிடம் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். சும்மா அல்ல, தெம்போடு, துணிச்சலோடு நிற்கிறேன். யாரைப் பற்றியும் கவலைப்படாமல் நிற்கிறேன்.

**தங்கை கனிமொழி தயாரித்த – தி.மு.க. தேர்தல் அறிக்கை!**

நம்முடைய இந்தியா கூட்டணி ஆட்சி அமைந்ததும் என்னவெல்லாம் செய்யப் போகிறோம் என்று தேர்தல் அறிக்கையாக வெளியிட்டிருக்கிறோம் அந்த அறிக்கையைத் தயார் செய்வதற்குத் தலைவர் யார் தெரியுமா? உங்கள் எம்.பி.தான். கனிமொழிதான் தலைவராக இருந்து அந்த அறிக்கையைத் தயாரித்துத் தலைமைக்குக் கொடுத்தார். அதில் சிலவற்றை மட்டும் சொல்கிறேன்

**மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் பத்தாண்டுகளாக உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!**

**சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து.**

**தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100இல் இருந்து, 150 நாட்களாவும், ஊதியம் 400 ரூபாயாவும் உயர்த்தப்படும்.**

**உலர்மீன் முற்றங்கள் கட்டுதல் போன்ற மீனவர்களுக்குத் தேவையான தொழில் கட்டமைப்புப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.**

**பாரம்பரிய மீனவ சமுதாய மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.**

**தேசிய மீனவர் நல ஆணையம் அமைக்கப்படும்.**

**ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கையை உருவாக்க அமைக்கப்பட்ட, மீனாகுமாரி குழுவின் அறிக்கை கைவிடப்படும்.**

**மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவர்களுக்கு மாற்றுப் பொருளாதார வேலை வாய்ப்புகளை உருவாக்க, மீனவக் குடும்ப உறுப்பினர்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு, மீன்கள் பதப்படுத்துதல், மீன் வளர்ப்பு, மீன் தீவனம் தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படும்.**

**மீனவ சமுதாய மக்களை அவசர காலத்தில் பாதுகாக்க 'ஹெலிகாப்டர் தளம்' தேவையான இடங்களில் அமைக்கப்படும்.**

**ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறை சீர்திருத்தப்படும்.**

**குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு எளிய முறையில் உரிமங்கள் கிடைக்க வழி வகை செய்யப்படும்.**

**நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பேரிடர் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**அதுமட்டுமல்ல, தூத்துக்குடி விமான நிலையத்தைப் பன்னாட்டு விமான நிலையமாகத் தரம் உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**

**முத்துநகர் விரைவு இரயில் சேவை போல, சென்னை செல்ல மேலும் ஒரு இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.**

## தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு : பழனிசாமி ஆட்சிக்கு கரும் புள்ளி!

**தூத்துக்குடி வி.எம்.எஸ். நகரில் ஐந்தாவது இரயில்வே கேட் மற்றும் மேம்பாலம் அமைக்கப்படும்.**

**காயல்பட்டினம் மற்றும் மீளவிட்டான் இரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படும்.**

**தூத்துக்குடியில் உற்பத்தியாகும் பனைப் பொருட்களுக்கு மதிப்பு கூட்டி ஏற்றுமதி செய்ய வழிவகை செய்யப்படும்.**

**இராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன்வலசை இரயில்வே வழித் தடத்தைக் கடக்க, சாலை மேம்பாலம் அமைக்கப்படும்.**

**தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும் "சொல்வதைச் செய்வோம்! செய்வதைத் தான் சொல்வோம்! இதுதான் வரலாறு! இந்த வரலாறு தொடர, வாக்குறுதிகள் நிறைவேற, நீங்கள் அனைவரும் இந்தியா கூட்டணியை ஆதரிக்க வேண்டும்.**

**அப்போதுதான் பா.ஜ.க. எனும் பேரிடரிலிருந்து இந்தியா விடுதலை அடைய முடியும்! பா.ஜ.க.வை ஏன் பேரிடர் என்று சொல்கிறோம்?**

**தூத்துக்குடியில் வெள்ளம் வந்தபோது உதவியவர்கள் – கனிமொழியும் அமைச்சர்களும் அல்லவா!**

நெல்லை – தூத்துக்குடியில் வெள்ளம் வந்ததே! அதற்கு நிவாரணம் கேட்டுக் கோரிக்கை வைத்தோமே! பிரதமர் கொடுத்தாரா? தூத்துக்குடியில் மழை வெள்ளம் ஏற்பட்டதும் இங்கு களத்திலிருந்து மக்களுக்கு உதவியது யார்? தங்கை கனிமொழியும், அமைச்சர் கீதா ஜீவனும், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனும்தானே மக்களுடன் மக்களாக இருந்து நிவாரணப் பணிகளைச் செய்தார்கள்.

இவர்கள் மட்டுமா? ஒட்டுமொத்த அமைச்சரவையுமே இங்குதானே இருந்தார்கள் ஓடோடி வந்து உதவி செய்தார்கள்... நானும் உடனடியாக இங்கு வந்து உதவினேன் களத்தில் இருந்தவர்களின் உழைப்பால்தானே இயல்பு நிலை விரைவாக திரும்பியது. தூத்துக்குடி – திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் அணைக்கட்டுகள், குளங்கள் மற்றும் வாய்கால்களில் ஏற்பட்ட உடைப்புகளைச் சரிசெய்ய 250 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதியை ஒதுக்கியிருக்கிறோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தூத்துக்குடிக்கு வந்து நிதி உதவியை வழங்கியதும், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான்! இது எல்லாமே தமிழ்நாடு அரசின் மாநில நிதியிலிருந்து செய்து தரப்படுகிறது. இரண்டு மாபெரும் இயற்கைப் பேரிடரை கடந்த டிசம்பர் மாதம் சந்தித்தோம். இதனால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்ய 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை கோரினோம். ஒன்றிய அரசிடமிருந்து நிதி வரவில்லை. ஆனால், அதை ஒரு காரணமாக நாங்கள் மக்களிடம் கூறவில்லை. மோடி தரவில்லை என்றால் என்ன? உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தருவேன் என்ற உங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றினேன்.

வெள்ளம் பாதித்தபோது, டெல்லியில் இருந்து அழைப்பு வந்தது. தொலைபேசியில் என்னிடம் பேசிய பிரதமர் மோடி என்ன கூறினார் தெரியுமா? 'வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட அமைச்சர் நிர்மலா சீதாராமனை அனுப்பி இருக்கிறேன், அவர் பார்வையிட்ட பிறகு, நிதி ஒதுக்கீடு செய்யப்படும்' என்று கூறினார். ஆனால், நிர்மலா சீதாராமன் வந்துவிட்டு சென்றார். கொடுத்தாரா? கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. அங்கு சென்று என்ன சொன்னார்? மக்களுக்கான உதவிகளைப் பிச்சை என்று மனசாட்சியே இல்லாமல் ஆணவத்துடன் கொச்சைப்படுத்தினார்.

**மக்களுக்கு பொய்களை மட்டுமே பரிசாகத் தருபவர் பிரதமர் மோடி!**

பிரதமர் பதவியில் இருப்பவர் கூறினாரே என்று நம்பினேன். வழக்கமாக, மக்களுக்குக் கூறும் பொய்யைத்தான் எனக்கும் பரிசாகக் கொடுத்தார். மக்களால் முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர்தான் பிரதமர் மோடி! பொய்களை மட்டுமே பரிசாகத் தரும் பிரதமருக்கு, ஏமாற்றத்தைப் பரிசாக தர தயாராகி விட்டீர்களா? தமிழ்நாட்டு வழியில் ஒட்டுமொத்த இந்தியாவும் தயாராகிவிட்டது! மோடிக்கான தோல்விப் பரிசு தூத்துக்குடியிலும், இராமநாதபுரத்திலும் தயாராகிவிட்டதுதானே?

அதற்கு, தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் – என் அன்புத் தங்கை கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிப்பீர். இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் வேட்பாளர் சகோதரர் நவாஸ் கனி அவர்களுக்கு ஏணிச் சின்னத்தில் வாக்களிப்பீர்.

**உங்கள் வாக்கு இந்தியாவைக் காக்கட்டும் !**

உங்கள் வாக்கு ஜனநாயகத்தைக் காக்கட்டும்! இந்தியாவின் அரசியல் சட்டத்தைக் காக்கட்டும்! அரசியல் சட்டம் கொடுத்துள்ள சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, சமூகநீதி என அனைத்தையும் காக்கட்டும்! மொத்தத்தில் உங்கள் வாக்கு தமிழ்நாட்டைக் காக்கட்டும்! உங்கள் வாக்கு இந்தியாவைக் காக்கட்டும்! பாசிசத்தை வீழ்த்த – இந்தியாவைக் காக்க – உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன் நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### காட்பாடி தொகுதியில் சிப்காட்- ஐ.டி. பார்க் அமைக்க நடவடிக்கை!

## டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை அதிக வாக்குகளில் வெற்றி பெறச் செய்வீர்!

### தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

*வேலூர், மார்ச். 27-*

காட்பாடி தொகுதியில் சிப்காட் - ஐ.டி. பார்க் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்றும் அரக்கோணம் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை அதிக வாக்குகள் வழங்கி வெற்றி பெறச் செய்வீர் என்றும் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய போது அமைச்சர் துரைமுருகன் குறிப்பிட்டார்.

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் டாக்டர். ஜெகத்ரட்சகனை ஆதரித்து கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் வாக்கு சேகரித்தார்.

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட காட்பாடி சட்டசபை தொகுதியில் 'இந்தியா' கூட்டணி சார்பில் தி.மு.க. தேர்தல் பணிமனை திறப்பு விழா மற்றும் வேட்பாளர் அறிமுக விழா சித்தூர் பஸ் நிறுத்தம் அருகே நடந்தது.

நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். பகுதிச் செயலாளர் துணை மேயர் எம்.



சுனில் குமார், பரமசிவம், வன்னியராஜா ஆகியோர் வரவேற்றனர். வேலூர் மாநகர கழக செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அனைவரையும் வாழ்த்தி பேசினார். நிகழ்ச்சியில் கழக பொதுச்செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளரும் கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் அரக்கோணம் நாடாளுமன்ற கழக வேட்பாளர் ஜெகத்ரட்சகனை அறிமுகம் செய்து பேசினார்கள்.

அமைச்சர் துரை முருகன் அவர்கள் பேசியதாவது:-

இங்கு போட்டியிடும் ஜெகத்ரட்சகன் ஒரு கொடை வள்ளல், அந்த புண்ணியம் தான் அவரை பல ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றி இருக்கிறது.

அவரது வளர்ச்சியை கண்டு ரெய்டு நடத்தி வழக்கு மேல் வழக்கு போட்டார்கள். அவற்றையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு என் கட்சிக்காரன் என்னை காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையோடு முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவை, அவர் ஏற்று வேட்பாளராகி இருக்கிறார்.

**ஒரே தொகுதியில் 12 முறை வென்றவன்!**

காட்பாடி சட்டசபை தொகுதியில் கடந்த தேர்தலில் துரோகங்கள் தலை விரித்தாடியது. அதை விவரிக்க விரும்பவில்லை. ஆனா லும் வெற்றி பெற்றேன். எனக்கு கிடைத்த கழக தோழர்கள் வேறு யாருக்கும் கிடைத்தார்களா என தெரியவில்லை. இந்தியாவிலேயே வேறு எந்த எம்.எல்.ஏ. வுக்கும் இல்லாத பெயரை காட்பாடி மக்கள் எனக்கு வாங்கி கொடுத்திருக்கிறார்கள்.

ஒரே தொகுதியில் 12 முறை நின்று வென்றவன், என்ற பெயரை நான் மட்டுமே வைத்திருக்கிறேன். காட்பாடி தொகுதியில் பல்கலைக் கழகம், தாலுகா அலுவலகம், கோர்ட்டு, சட்டக் கல்லூரி கொண்டு வந்தேன். காங்கேயநல்லூர் வழியாக கலெக்டர் அலுவலகத்திற்கு செல்ல பாலாற்றில் மேம்பாலம் கட்டி அடிக்கல் நாட்டினேன். இன்னும் பல பாலங்கள் கட்டி வருகிறேன்.

ஒரு தொழிற்சாலை இல்லையே என்ற குறையை போக்க காட்பாடி அருகே மகி மண்டலத்தில் சிப்காட் அமைக்க, வரும் பட்ஜெட்டில் அறிவிப்பு வர இருக்கிறது. பெல் தொழிற்சாலை அருகில் ஒரு ஐ.டி. பார்க் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன். இந்த தேர்தலில் ஜெகத்ரட்சகனுக்கு அதிக ஓட்டு வாங்கி கொடுக்க வேண்டும் துரைமுருகன் அதிக ஓட்டுக்கள் வாங்கி கொடுப்பார் என்ற பெயரை ஏற்படுத்திட வேண்டும்.

இவ்வாறு பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில் குமார் மற்றும் 'இந்தியா' கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

---

### மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்கள் தொடர்ந்திட, புதிய திட்டங்களைக் கொண்டு வர

## கழக வேட்பாளர் அருண் நேருவை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்யுங்கள்!

### தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

*டால்மியாபுரம், மார்ச் 27 -*

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அருண்நேரு புள்ளம்பாடி ஒன்றியத்தில் 33 ஊராட்சிகள் 2 பேரூராட்சிகளில் திறந்தவேனில் வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். பொதுமக்கள் பெண்கள் ஆர்வமுடன் அவரை வரவேற்று உபசரித்தனர்.

அப்போது அவருடன் பிரசாரத்தில் ஈடுபட்ட தி.மு.க. முதன்மை செயலாளரும்,தமிழக நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருமான கேஎன். நேரு பேசுகையில், 1985 ம் ஆண்டு புள்ளம்பாடியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய சேர்மன்,தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு லால்குடி தொகுதியின் எம்.எல்.ஏ.வாகவும், தமிழக அமைச்சராகவும் வெற்றி பெற்று திருச்சி மாவட்டத்தில் லால்குடி தொகுதிக்குத் தேவையான திட்டங்களை கொண்டு வந்தார். அரசு



திட்டங்கள், கலைக்கல்லூரி வேளாண்மை கல்லூரி, தொழிற்பயிற்சிநிலையம், ஊராட்சி ஒன்றிய வேளாண்மை மற்றும் கல்லூரிகளுக்கு தேவையான அலுவலக கட்டிடங்கள், தடுப்பணைகள், சாலைகள், மேம்பாலங்கள் போக்குவரத்துக்குத் தேவையான புதிய பேருந்துகள்,சாலை வசதிகள் அதிக அளவில் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு தேவையான நலத்திட்ட உதவிகள் தொடர்ந்திடவும்,மேலும் தேவையான நலத்திட்ட உதவிகள் பெற்றிடவும், தமிழக முதல்வர் ஆசி பெற்ற சின்னமான உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து பெரம்பலூர் நாடாளு மன்ற தொகுதி வேட்பாளர் அருண்நேருவை அதிக வாக்கு வித்தி யாசத்தில் வெற்றி பெற செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

அப்போது திருச்சி தி.மு.க. மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, லால்குடி சவுந்தரபாண்டியன் எம்.எல்.ஏ., லால்குடி நகரச் செயலாளர் துறை,காங்கிரஸ் சார்பில் வடக்கு மாவட்ட தலைவர் கலை, முன்னாள் மாவட்ட தலைவர் ஜெய்பிரகாஷ், மாவட்ட பொருளாளர் துரை கந்தசாமிபுள்ளம்பாடி ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் இளங்கோவன், செல்வராசா, மாவட்ட கவுன்சிலர் ஜெயலட்சுமி கருணாநிதி, நகர செயலாளர்கள் கல்லக்குடி பால்துரை, புள்ளம்பாடி முத்துக்குமார், வட்டார காங்கிரஸ் தலைவர் அர்ஜுனன், ம.தி.மு.க. துரையரசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி விடுதலை இன்பன், விஜயகுமார், முன்னாள், இந்நாள் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தி.மு.க. நிர்வாகிகள், கிளை பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக புள்ளம்பாடி ஒன்றியம் முதுவத்தூர் கிராமம தொடர்ந்து மேலரசூர், கீழரசூர், ஒரத்தூர், எம்.கண்ணனூர், மால்வாய், சரடமங்கலம், நம்புகுறிச்சி, சிறுகளப்பூர்,தெரணிபாளையம், ஊட்டத்தூர், நெய்குளம், கண்ணாக்குடி, பிகே.அகரம், குமுளூர், ரெட்டி மாங்குடி, பு.சங்கேந்தி, தாப்பாய்,வரகுப்பை, அலுந் தலைப்பூர், கல்லக்குடி, ஆலம்பாடி மேட்டூர், விரகாலூர், திண்ணகுளம், புதூர் பாளையம், ஆலம்பாக்கம், கோவாண்டகுறிச்சி, வெங்கடாசலபுரம், புள்ளம்பாடி, இ.வெள்ளனூர்,ந.சங்கேந்தி உள்ளிட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். ஆங்காங்கு பொதுமக்கள் ஆரத்தி எடுத்து , வெற்றி திலகமிட்டு, மாலை அணிவித்து வரவேற்பு அளித்தனர்.





# கிறிஸ்துவ - இஸ்லாமிய - செங்கோல் ஆதினம் மற்றும் பல்வேறு அமைப்புகள் 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு!

## தூத்துக்குடியில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தெரிவித்தனர்!

**தூத்துக்குடி, மார்ச் 27 -**

**கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய தொகுதிகளில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை கிறிஸ்துவ இஸ்லாமிய செங்கோல் ஆதினம் பல்வேறு சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்!**

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி சார்பில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று (26.3.2024) காலை, தூத்துக்குடியில், கிறிஸ்துவ



இஸ்லாமிய மற்றும் பல்வேறு சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து, இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர். ஆதரவு அளித்தவர்கள் விவரம் பின்வருமாறு:

**திருநெல்வேலி மாவட்டம்**

அந்தோணி சாமி ஆயர் அவர்கள்

பர்னபாஸ் அடிகளார், பேராயர் அவர்கள்

அருட்தந்தை டாக்டர் S. மரியதாஸ் SJ அவர்கள்

D.V.P. பொன்ராஜ் அவர்கள்

ஹாஜி Er செய்யது அகமது அவர்கள்

ஹாஜி M.K.M. செய்யது அகமது கபீர் அவர்கள் ஹாஜி M.K.M. அகமது ஷாபி அவர்கள்

ஹாஜி நவாஸ்கான் அவர்கள்

ஹாஜி F.காதர் முஹைதீன் அவர்கள்

ஹாஜி M.ஷேக் அப்துல்லா அவர்கள்

மீனாட்சி சுந்தரம் அவர்கள்

செல்லையா அவர்கள்

**கன்னியாகுமரி மாவட்டம்**

பால பிரஜாதிபதி அடிகளார் அவர்கள்

நசரேன் சூசை ஆயர் அவர்கள்

அருட்சகோதரிகள்

**தூத்துக்குடி மாவட்டம்**

தூத்துக்குடி தென்னிந்திய திருச்சபை திருமண்டல பேராயர்

LaySecretary

செங்கோல் ஆதினம்

தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம்

All India Chamber of Commerce

ஐக்கிய வியாபாரிகள் சங்கம்

மீனவர் நல சங்கம்

தூத்துக்குடி CSI திருச்சபையினர்

ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற பாடுபடுவதாகவும் உறுதி அளித்தனர்.

இந்நிகழ்வின்போது, கழக துணைப் பொதுச் செயலாளரும் தூத்துக்குடி தொகுதி கழக வேட்பாளருமான கனிமொழி கருணாநிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதாஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், அமைச்சர் மனோ தங்கராஜ், தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி, சிறுபான்மையினர் நல ஆணைத் தலைவரும் காங்கிரஸ் கட்சியில் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

### தொகுதிப் பொறுப்பாளர் இரா.கிரிராஜன் எம்.பி. சிறப்புரை!

# திருவள்ளூரில் 'இந்தியா' கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*திருவள்ளூர், மார்ச் 27-*

திருவள்ளூர் (தனி) தொகுதி நாடாளுமன்ற வேட்பாளர் சசிகாந்த் செந்திலை ஆதரித்து திருவள்ளூரில் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள், ஒன்றிய நகர வட்டார பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தேர்தல் பொறுப்பாளர் இரா.கிரிராஜன் எம்.பி. வேட்பாளரை அறிமுகப் படுத்தி சிறப்புரையாற்றுகிறார்.

இதுகுறித்து மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு வருமாறு :

தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் திருவள்ளூர் (தனி) நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர் சசிகாந்த் செந்தில் ஆதரித்து கூட்டணிக் கட்சிகளின் மாவட்டக் கழகச் செயலாளர் மாவட்ட தலைவர், ஒன்றிய, நகர, வட்டார, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூரை அடுத்த திருப்பாச்சூர் டோல் கட்டில் உள்ள ஏ.கே.என். திருமண மண்டபத்தில் இன்று (27 032024) காலை 10.00 மணியளவில் நடைபெறுகிறது.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெறுகிறது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் விஜி. ராஜேந்திரன் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுகிறார்.

இந்தியா கூட்டணி கட்சி மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள், துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ., தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மு.பாபு, கோ. கிருஷ்ணமூர்த்தி, கே.கஜேந்திரன், கோபால், தளபதி சுந்தர், புருஷோத்தமன், தணிகை வேல், இரா.கார்த்திகேயன், ரஹமத்துல்லா, நூர் முகம்மது, முன்னிலை வகிக்கிறார்கள்.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் (தனி) நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி கலந்து கொண்டு வேட்பாளரை அறிமுகப்படுத்தி சிறப்புரை ஆற்றுகிறார்.

இதில் திருவள்ளூர் தனி நாடாளுமன்றத் தொகுதி போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் வாக்கு சேகரித்து ஆதரவு கோருகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், இ.குருதாஸ், தொகுதி பார்வையாளர்கள் வடசென்னை ந.மனோகரன், ராஜா குப்புசாமி, மாவட்ட கழக நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ். கே.ஆதாம், வி.கிஷோர், மு. சுப்பிரமணியம், ராஜேஷ்வரி ரவிந்திராநாத், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சி.சு.ரவிச்சந்திரன், கூளூர் எம். ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், க.அரிகிருஷ்ணன், மோ. ரமேஷ், ப.ஆர்த்தி ரவி, ஜி.ரவிந்திரா, சி.என்.சண்முகன், சி. ஜெ.சீனிவாசன், பெ.பழனி, வி.வினோத் குமார், என்.கிருஷ்ணன், பி.டி.சந்திரன், எம். ஜெ.ஜோதிகுமார், டி.ஆர். கே.பாபு உள்பட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், துணை அமைப்பாளர்கள், கூட்டணிக் கட்சி சார்ந்த தலைவர்கள், செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் பூண்டி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் டி.கிறிஸ்டி நன்றி கூறுகிறார்.




படப்பை கரசங்கால் கலைஞர் திடலில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட "இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட தி.மு.க. செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். அருகில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் டி.ஆர். பாலு, காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் க.செல்வம், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யா, விடுதலை சிறுத்தைகள் துணை பொதுச்செயலாளர் எஸ்.எஸ்.பாலாஜி, எம்.எல்.ஏ., மனிதநேய மக்கள் கட்சி துணை பொதுச்செயலாளர் எம்.யாக்கூப் மற்றும் கூட்டணி கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள் உள்ளனர்.

### வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து

# சோழிங்கநல்லூரில் - வட்ட வாரியாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாக்குச் சேகரிப்பு!

*சென்னை, மார்ச் 27 -*

சோழிங்கநல்லூரில் தென் சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியனை ஆதரித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாக்குகள் சேகரிக்கிறார்

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி சோழிங்கநல்லூர் மத்திய பகுதி வழி தடம் விவரங்கள் வருமாறு: -

இன்று (27.3.2024) காலை 8 மணி முதல் மதியம் 1மணி வரை

**189 வட்டம் பள்ளிக்கரணை**

1.பாலாஜி டென்டல் காலேஜ் ராஜேஷ் நகர், 2. மேற்கு அண்ணாநகர், 3. காமகோடி நகர் ஐஐடி காலனி செங்கழனிஅம்மன் கோவில் தெரு, 4. விஜிபி ஷாந்தி நகர், அண்ணா எம்ஜி ஆர் நகர மனோகர் நகர், 5. செல்வம் நகர், 6. வேப்பம்பட்டு துலுக்கானத்தம்மன் கோவில் தெரு, லேபர் காலனி, 7. தங்கம் நகர மல்லி மகேஸ்வரி நகர் பெரியார் நகர் பிரதான சாலை. 8. வ வ சி தெரு, அம்பேத்கர் தெரு

**190 வது வட்டம்**

பள்ளிக்கரணை 1. அம்பாள் நகர், 2. பாஷாண்டியமமன் கோயில் தெரு, 3. கோவலன் நகர், 4. கண்ணபிரான் கோவில் தெரு, 5. வள்ளல் பாரி தகர, 6. ராஜா லட்சுமி நகர், 7. விவேகானந்தர் நகர், 8. பெருமாள் கோயில் தெரு, 9. கே.பி.ஆயில் மில் பிரதான தெரு, 10. பள்ளிக்கரணை உயர்நிலைப்பள்ளி பகுதி, வேளச்சேரி பிரதான சாலை, திருவள்ளுவர் தெரு, பவானி அம்மன் கோவில் தெரு, கிணற்று சாலை, எபினேசர் தெரு, ராஜீவ் காந்தி சாலை, பாரதிதாசன் தெரு, அம்பேத்கார் தெரு, கர்மேல் தெரு

**191 வது வட்டம்**

1. பிள்ளையார் கோவில் தெரு, 2. பழண்டியம்மன் கோவில்தெரு, 3. ஆள்சேரியன் கோவில் தெரு, 4. காந்தி சாலை, 5. ரைஸ் மில் சாலை, 6. ஜெயச்சந்திரன் நகர், 7. அண்ணா சாலை, 8. நெசவாளர் நகர், 9. திருவள்ளுவர் நகர், 10. பல்லவன் நகர்

**சோழிங்கநல்லூர் மத்திய பகுதி**

வழித் தடம் விவரங்கள்

மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை

**197 வது வட்டம்**

1. ஈ.சி.ஆர். சாலை உத்தண்டி ரைஸ் மில், 2. வீரபத்திரன் கோவில் தெரு3. பெருமாள் கோயில் தெரு , 4. செங்கேணியம்மன் கோவில் தெரு5. பிடாரி அம்மன் கோவில் தெரு , 6. உத்தண்டி காலனி , 7. நைனார் குப்பம்



முக்கிய சாலை , 8 குடுமியாண்டி தோப்பு , 9 காயிதே மில்லத் தெரு , 10. படவட்டம்மன் கோவில் தெரு, 11. பள்ளிக்கூட முக்கிய தெரு12. எம். ஜி.ஆர். நகர் முக்கிய தெரு, 13. பனையூர் குப்பம ஜாஹிர் ஹுசைன் தெரு, 14 பனையூர் குப்பம் முக்கிய சாலைகள், 15 ராஜிவ் காந்தி சாலை நகர் முக்கிய தெரு, 16. அக்கரை முக்கிய தெரு

**198 வது வட்டம்**

1. கிராம நெடுஞ்சாலை 2. செல்லியமமன் கோவில், 3. 15 வது வார்டு, 4. வேண்டராசி அம்மன் கோவில் தெரு, 5. சடகோபன் தெரு, 6. கங்கை அம்மன் கோவில் தெரு, 7. நடு தெரு, 8.காளியம்மன் கோவில் தெரு. , 9. அண்ணா தெரு, 10. ஓ.எம்.ஆர். சாலை (TCS)

**199 வது வட்டம்**

5.1. கலைஞர் சாலை, 2. கிராம நெடுஞ்சாலை முதல் எம்.ஜி.ஆர். தெரு, 3. எம். ஜி.ஆர். தெரு கோவிந்தஸ்வாமி நாயக்கர் தெரு, 4. திரௌபதி அம்மன் கோவில் முதல் கிராம நெடுஞ்சாலை, 5. பரமேஸ்வரன் நகர் முதல் கங்கை அம்மன் கோவில் தெரு, 6. துர்கை அம்மன் கோயில் தெரு, 7. கிராம நெடுஞ்சாலை, 8. பொன்னியம்மன் கோயில் 1 வது தெரு, 9. பொன்னியம்மன் கோயில் 2 வது தெரு முதல் கிராம நெடுஞ்சாலை, 10. வ. உ. சி. தெரு, 11. குமரன் நகர் 200 வது வட்டம் 1. குமரன் நகர், 2. காந்தி சாலை, 3. எம்.ஜி.ஆர், 4.ஓ.எம். ஆர். சாலை, 5. செல்லியம்மன் கோவில் தெரு, 6. துலுக்கானத்தம்மன் கோவில் தெரு, 7. பெருமாள் கோயில் தெரு, 8. ராஜீவ்காந்தி நகர், 9. ஜவகர் நகர், 10. எழில் முகா நகர்,11. ஓ.எம்.ஆர். சாலை வழியாக சென்று குமரன் நகர் தூக்கம்பாளையம் இணைப்பு சாலை வழியாக சுனாமி, நகர் ஆர்ச்சில் நுழைந்து 3, 4, 5, 6,7, 8வது பிரதான சாலை 9வது பிரதான சாலை வழியாக இடதுபுறம் சென்று பின்பு வலது புறம் சாலைகள் வழியாக வந்து சுனாமி நகர் ஆர்ச்சில் முடிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாக்குச் சேகரிக்கிறார்.

### தேர்தல் பிரச்சாரம் "சூடு" பிடித்தது





தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் தமிழச்சி தங்க பாண்டியன் 25.03.2024 அன்று, அடையாறு பெருநகர சென்னை மாநகராட்சி தெற்கு வட்டாரத் துணை ஆணையர் அலுவலகத்தில் மனுத் தாக்கல் செய்தார். உடன், தென்சென்னை காங்கிரஸ் கமிட்டி மாவட்ட தலைவர் முத்தழகன், தென்சென்னை மாவட்ட வி.சி.க. செயலாளர் இளையா, தென்சென்னை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாவட்டத் தலைவர் வேல்முருகன், மதிமுக மாவட்ட பொருளாளர் துரை சந்திரசேகர் ஆகியோர் உள்ளனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி ஆதரவு பெற்ற வடசென்னை நாடாளுமன்ற வேட்பாளர் கலாநிதிவீராசாமியை ஆதரித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, தலைமையில் ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் வரவேற்புரையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.தா.இளையஅருணா, என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், ப.குமார், ச.தமிழ்ச்செல்வன், பொ.து.ராஜா, வி.வடிவேலு, எஸ்.எல்.சுந்தர், கழகத் தோழர்கள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி தோழர்கள் கலந்து கொண்டனர். மா.நாகராஜன் நன்றி கூறினார்.

### மத்திய சென்னை நாடாளுமன்ற கழக வெற்றி வேட்பாளர் தயாநிதிமாறனை ஆதரித்து

# துறைமுகம் மேற்குப் பகுதி - வட்டங்களில் தேர்தல் பணிமனை திறப்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைக்கிறார்! க.பிரபு பங்கேற்பு! எஸ்.முரளி அறிக்கை!

சென்னை, மார்ச். 27

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதியில் உள்ள வட்டங்களில் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து பகுதி கழகம் சார்பில் தேர்தல் பணிமனை திறப்பு விழா நாளை (28.03.2024 வியாழக்கிழமை) காலை 8.00 மணி அளவில், எண்.202, கோவிந்தப்பன் தெரு, (முகப்பு தாதாமுத்தியப்பன் தெரு), துறைமுகம் மேற்கு பகுதி இந்தியா கூட்டணி தேர்தல் பணிமனையும், அதனை தொடர்ந்து துறைமுகம் மேற்கு பகுதிக்கு உட்பட்ட 3 வட்டங்களில் தேர்தல் பணிமனையும் திறக்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற கழக வெற்றி வேட்பாளர் தயாநிதிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு பணிமனையினை திறந்து வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் துறைமுகம் தொகுதி தேர்தல் பார்வையாளர் க.பிரபு, எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத் எம்.சி, பி.ஸ்ரீராமுலு, கே.விநாயகம், எல்.சம்பத்குமார், பி.விஜயகுமார், ப.பிரதீப் குமார், பா.ஜெகதீஷ், ஆர்.கலைச்செல்வி, எம்.இப்ராஹிம் கனி, ராஜேஷ் ஜெயின், வி.பரிமளம், நவீன் தாஹா, மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, மா.முத்துக்குமார், தோழமைக் கட்சி நிர்வாகிகள் சி.கண்ணன், செல்லப்பா, கருப்பையா மண்ணடி மணவாளன், (காங்கிரஸ்), ஜலால் (சி.பி.எம்), நாசர் (ம.தி.மு.க), வரதன்(சி.பி.ஐ), கு.வில்லாளன் (வி.சி.க), அப்துல் சுக்கூர் (இ.யூ.மு.லீக்), அப்பாஸ் அலி (ம.நே.ம.க), வட்டச் செயலாளர்கள் எம்.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி.ராமமூர்த்தி பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, கே.கவியரசு, ஆ.நா.பார்த்தீபன் மற்றும் டி.எஸ்.சேகர், எல்.எழிலரசு, க.முருகன், ஜி.மாசிலாமணி, எம்.வி.ஆர்.சரவணகுமார், எம்.நாராயணன், வி.எம்.முருகவேல், கே.ஆர்.மதன், நா.ரஞ்சித்விஜயாலயன், எ.பி.செந்தில், எல்.சாந்திலால், எஸ்.அசோக்ஜெயின், வினோத் கோத்தாரி, அசாருதீன், பூக்கடை வெங்கடேசன், தினேஷ், டி.கே.கலைவாணன், என்.மோகன், அ.ஆனந்த், எ.திருப்பதி, தாஸ் (எ) சண்முகசுந்தரம், சூரிய பிரகாஷ் மற்றும் பாக பொறுப்பாளர்கள் பி.கே.பெருமாள், ஜான்பாண்டியன், பாலாஜி, குட்டி (எ) பாஸ்கரன், பி.கருணா (எ) வருணவேல், முத்து, கே.முத்துமாணிக்கம் மற்றும் 57 வது வட்ட நிர்வாகிகள் கே.ஜி.துளசிராமன், கே.காந்தி, டி.வேலு, கே.பவானி, எஸ்.சந்திரசேகர், பா.முத்துக்குமார், எஸ்.சங்கர், என்.ராஜா, பின்டு, ரூபாராம், எஸ்.ராஜு, ஜி.கே.செல்வம், அபிநவ், ராமு, கே.வேலாயுதம், நாகலட்சுமி, பி.எல்.முரளி, லோகநாதன், மணிகண்டன், பன்னீர், பாபுராவ், இ.ராமச்சந்திரன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிகின்றனர்.

இவ்வாறு துறைமுகம் மேற்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தெரிவித்துள்ளார்.

### ஆர்.எஸ்.பாரதி - மாதவரம் சுதர்சனம் - டி.கே.எஸ்.இளங்கோவன் பங்கேற்பு!

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் வேட்பாளர் கலாநிதி வீராசாமி வாக்கு சேகரிப்பு!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 27-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு வேண்டுகோள் வருமாறு:-

இந்தியா கூட்டணி கட்சிகளின் வெற்றி வேட்பாளர், வடசென்னை தொகுதி டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. தனது முதல் நாள் தேர்தல் பிரச்சாரத்தினை, இன்று (27.03.2024, புதன்கிழமை) காலை 6 மணியளவில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8வது வார்டு டி.எச். ரோட்டில் அமைந்துள்ள பெரியார் சிலை அருகில் இருந்து துவங்க உள்ளார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக சட்டத்திட்ட குழு இணைச் செயலாளர் மற்றும் மாநிலங்களவை நாடாளு மன்ற உறுப்பினர் கிரி ராஜன், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணை செயலாளர் சி.தசரதன், மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன், மத்திய பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள்.

ஆதலால் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி மாநில கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணிகளின் நிர்வாகிகள் , கழக தோழர்கள், கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனி யரசு

### ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா - க.தனசேகரன் - கன்னிகை ஜி. ஸ்டாலின் - கே.கண்ணன் பங்கேற்பு!

# 137-வது வட்ட நிர்வாகிகள் -பாகத் தலைவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் பி.கே.குமார் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 27 -

கலைஞர் நகர் தெற்கு பகுதி 137வது வட்ட நிர்வாகிகள்பாகத் தலைவர்கள் கூட்டம் தென்சென்னை நாடாளுமன்ற தேர்தலையொட்டி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி இன்று (27-03-2024, புதன்கிழமை) மாலை 6 மணியளவில் கலைஞர் நகர் தெற்கு பகுதி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர் பி கே. குமார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிராபகர்ராஜா, கணக்கு நிலைகுழு தலைவர் க.தனசேகரன், பகுதி செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா, தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி. ஸ்டாலின் ஆகியோர் ஆலோசனை வழங்குகிறார்கள்.

பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், பி. எஸ். முருகேசன், மாவட்ட துணை செயலாளர் #வாசுகிபாண்டியன் ஆகியோர் கலந்து கொள்ளும் இக்கூட்டத்திற்கு, வட்டத்திற்கு உட்பட்ட வட்ட நிர்வாகிகள்,பகுதி நிர்வாகிகள், பாகத் தலைவர்கள், அவசியம் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் பி.கே.குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கன்னிகை ஜி.ஸ்டாலின் - ஏ.எம்.வி.பிரபாகரராஜா - க.தனசேகரன் - கே.கண்ணன் பங்கேற்பு!

# தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து 137 'ஆ' வட்டத்தில் பிரச்சாரம்!

## வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 27 -

கலைஞர் நகர் தெற்கு பகுதி 137வது ஆ வட்ட கழகத்தில் இன்று (27.03.2024 புதன்கிழமை) காலை 7:00 மணி அளவில் புகழேந்தி தெரு தொடர்ச்சி ( அன்பு ஒயின்ஸ்) அருகில் தென் சென்னை தி.மு.க. வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து பிரச்சாரம் நடைபெற உள்ளது.

இதில் விருகம்பாக்கம் தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி ஸ்டாலின்,

சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், பகுதி கழக செயலாளர் கே.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.உமாபதி, அஜந்தா எஸ்.ரவி, பே. தியாகு, அ.பாபு, மாவட்ட பிரதிநிதி என்.ரவி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பி.பெரியசாமி, ஜெ.சீனிவாசன்,

வட்ட கழக நிர்வாகிகள் என்.சக்கரவர்த்தி, கே.தணிகாசலம், டி.செல்லா, ஜி.ராஜேஸ்வரி, டைகர் பழனி, பி.தனசேகர், என்.ஜெகதீசன், கே.சதீஷ், நா.பாலா, எஸ்.புகழ், மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் பாகத் தலைவர்கள் மற்றும் மகளிர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் அ.கதிரேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### முக. தமிழரசு - நே.சிற்றரசு - சி.எச்.சேகர் பங்கேற்பு!- சேப்பாக்கம் பகுதியில்

# வட்டங்கள்தோறும் கழக வேட்பாளர் தயாநிதி மாறன் வீதி வீதியாக இன்று வாக்கு சேகரிக்கிறார்!



## பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் அறிவிப்பு!

### 27.03.2024 - புதன்கிழமை மாலை 4.30 மணி

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் இந்தியா கூட்டணியின் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதியின் கழக வேட்பாளர் தயாநிதி மாறன் இன்று (27, மார்ச் 2024 - புதன்கிழமை) மாலை 4.30 மணி அளவில் சேப்பாக்கம் பகுதி 62வது வட்டத்தில் அமைந்துள்ள ஐயா தெரு, பஜார் தெரு சந்திப்பில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியை துவக்குகிறார்.

---

**62வது வட்டம்** : பஜார் தெரு, ரெக்ஸ் தெரு, பாலகிருஷ்ணன் தெரு, மங்கபதி தெரு, அக்ரஹாரம் தெரு.

**62 'அ' வட்டம்** : நைனியப்பா தெரு, சுவாமி பண்டாரம் தெரு, கலவைத் தெரு, நாதமுனி தெரு, நயனியப்பா தெரு, குருவப்பா தெரு, ராஜகோபால் தெரு, சுங்குவார் அக்ரார் தெரு, சிங்கன செட்டி தெரு.

**63வது வட்டம்** : கரி மொய்தீன் தெரு, ஆதித்தனார் சாலை, காஞ்சிபுரம் பச்சையப்பன் தெரு, நாராயண நாயக்கன் தெரு, வீரபத்திர ஆச்சாரி தெரு, சைபுல் மில்க் தெரு, சவுத் கூவம் ஆறு சாலை.

**63 'அ' வட்டம்** : ஜி.பி.ரோடு, பூபேகம் தெரு, எல்.ஜி.என். சாலை, வி.என். தாஸ் ரோடு, பிள்ளையார் கோயில் தெரு, அமீர் மஹால்.

**115 வது வட்டம்** : மீர் பக்ஷி அலி தெரு, மாணிக்க மேஸ்திரி தெரு, ஜே.ஜே. கான் ரோடு.

**114 வது வட்டம்** : பக்கீர் சாஹிப் தெரு, மேயர் சிட்டிபாபு தெரு, சின்னதம்பி தெரு, எல்லிஸ் ரோடு, அப்பாவு தெரு, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை.

**114 'அ' வட்டம்** : தைப்புண் ஹெலிகான் தெரு, அருணாச்சலம் ரோடு, சி.என்.கே.ரோடு, மசூதி சந்து, ஓ.வி.எம்.தெரு, பெல்ஸ் ரோடு, நிறைவடையும் இடம்: லாக் நகர்.

---

மேற்கண்ட நிகழ்ச்சியில் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளரும், பணி குழுத் தலைவருமான நே.சிற்றரசு, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சி.எச்.சேகர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே சேப்பாக்கம் பகுதிக்குட்பட்ட பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2 (பாக முகவர்கள்), BLC (பாக உறுப்பினர்கள்), கழகத் தோழர்கள் மற்றும் இந்தியா கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.மதன்மோகன்**
செயலாளர்
சேப்பாக்கம் பகுதி தி.மு.க.
(9வது மண்டலக் குழுத் தலைவர்)

### வடசென்னை நாடாளுமன்றத் தேர்தல் 2024

# மாவட்ட தேர்தல் பணிக்குழு விவரம்!



## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

| வ.எ. | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண். |
|---|---|---|---|---|
| 1 | ஆர்.டி.சேகர், MLA | மாவட்ட பொறுப்பாளர் | தி.மு.க. | 9444010104 |
| 2 | A.சரவணன் | பெரம்பூர் தேர்தல் பொறுப்பாளர் | தி.மு.க. | 9941456355 |
| 3 | N.நவீன் | இராயபுரம் தேர்தல் பொறுப்பாளர் | தி.மு.க. | 9994306222 |
| 4 | நந்தனம் நம்பிராஜன் | R.K.நகர் தேர்தல் பொறுப்பாளர் | தி.மு.க. | 9841026427 |
| 5 | M.S.திரவியம் (R.K.நகர், இராயபுரம்) | மாவட்ட தலைவர் | காங்கிரஸ் | 9841233335 |
| 6 | ஜெ.டில்லிபாபு (பெரம்பூர்) | மாவட்ட தலைவர் | காங்கிரஸ் | 9841077467 |
| 7 | சு.ஜீவன் | மாவட்ட செயலாளர் | ம.தி.மு.க. | 8148898068 |
| 8 | L.சுந்தர்ராஜன் | மாவட்ட தலைவர் | CPM | 9444385595 |
| 9 | D.K.வெங்கடேசன் | மாவட்ட தலைவர் | CPI | 9840920207 |
| 10 | சௌந்தர் (R.K.நகர், இராயபுரம்) | மாவட்ட செயலாளர் | வி.சி.க. | 9940333329 |
| 11 | உஷாராணி (பெரம்பூர்) | மாவட்ட செயலாளர் | வி.சி.க. | 9176482815 |
| 12 | கமுதிசம்சுதீன் | மாவட்ட தலைவர் | இ.யூ.மு.லீ | 9840421230 |
| 13 | மொய்தின் (பெரம்பூர்) | மாவட்ட தலைவர் | ம.ம.க. | 7871143022 |
| 14 | இராயபுரம்அலி (R.K.நகர், இராயபுரம்) | மாவட்ட தலைவர் | ம.ம.க. | 8778163841 |
| 15 | V.உதயகுமார் (பெரம்பூர்) | மாவட்ட செயலாளர் | ம.நீ.ம. | 9840327534 |
| 16 | D.மாறன் (R.K.நகர், இராயபுரம்) | மாவட்ட செயலாளர் | ம.நீ.ம. | 7904761852 |
| 17 | முகம்மத்து ஃபாரூக் | மாவட்ட தலைவர் | ஆம்.ஆத்மீ. | 9941957466 |
| 18 | ஆர்.பாஸ்கர் | மாவட்ட செயலாளர் | ச.ம.க. | 9884951357 |
| 19 | தளபதி பாண்டியன் | மாவட்ட செயலாளர் | திராவிடர் கழகம் | 9789542571 |

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

# பா.ஜ.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பாமல், நாங்கள் தூங்கப் போவதில்லை!

## திருவண்ணாமலை தேர்தல் பிரச்சாரத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**திருவண்ணாமலை, மார்ச் 27-**

**திருவண்ணாமலையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் சி.என். அண்ணாதுரைக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.**

**அப்போது அவர், "பா.ஜ.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பாமல் நாங்கள் தூங்கப் போவதில்லை. எங்கள் தேர்தல் பிரச்சாரத்தைத் தூக்கம் பார்க்காமல், நாங்கள் செய்யத்தான் போகிறோம். உங்களை நிம்மதியாக வீட்டில் சென்று தூங்க வைக்கின்ற வரைக்கும் நாங்கள் எங்களுடைய வேலையைச் செய்துகொண்டுதான் இருக்கப் போகிறோம்" என்று சூளுரைத்தார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது உரை வருமாறு:

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருவண்ணாமலை மக்களவைத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் அருமைச் சகோதரர் அண்ணாதுரை அவர்கள் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், கழகத் தலைவர் முதலமைச்சரின் அன்பைப் பெற்ற வேட்பாளர் மட்டுமல்ல. திருவண்ணாமலை மக்களின் பேரன்பையும் பெற்றவர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிக்கவே உங்களைத் தேடி நான் வந்திருக்கிறேன்.

உங்களின் வரவேற்பையும் எழுச்சியையும் பார்க்கும்பொழுது சி.என்.அண்ணாதுரை அவர்களை மிகப்பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற முடிவெடுத்து விட்டீர்கள் என்று தெரிகிறது.

### உங்கள் பொறுப்பு!

2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போதும் சி.என்.அண்ணாதுரைக்கு வாக்கு கேட்க நான் வந்திருந்தேன். கடந்தமுறை சி. என்.அண்ணாதுரை அவர்களை 3 லட்சத்து 5 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தீர்கள். அதற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முறை குறைந்தது நான்கு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும். திருவண்ணாமலை மக்களாகிய நீங்கள் அப்படிச் செய்தால், மாதத்திற்கு இரண்டுமுறை வந்து உங்கள் பிரச்னைகளை தீர்த்து வைக்கிறேன். அதற்கு நான் பொறுப்பு, என இப்போதே உறுதியளிக்கிறேன். 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

### சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்

கடந்த சட்டமன்ற தேர்தலில் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களை கிட்டத்தட்ட ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து இருக்கிறீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சி.என்.அண்ணாதுரை அவர்கள் மக்களின் குரலாக நாடாளுமன்றத்தில் அவர் குரல் கொடுத்திருக்கிறார். உங்கள் நாடாளுமன்றத் தொகுதிக்கும் எண்ணற்ற பணிகளை ஆற்றியிருக்கிறார். கழகத்தின் இளைஞர் அணியிலும் சி.என். அண்ணாதுரை சிறப்பாக செயல்பட்டிருக்கிறார். அதேபோல கழகத்திலும் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறார். அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கு ஒரு தம்பியைப் போல, ஒரு தளபதியை போல அவர் பணி செய்து இருக்கிறார். அதனால்தான் தலைவர் அவர்கள் மீண்டும் சி.என்.அண்ணாதுரைக்கு இந்த வாய்ப்பை கொடுத்திருக்கிறார்.

இந்த நேரத்தில் ஒரு அமைச்சராகவோ, நட்சத்திரப்பேச்சாளராகவோ நான் வாக்கு கேட்க வரவில்லை. கழகத்தின் மாநில இளைஞர் அணிச் செயலாளராக நான் இங்கு வந்திருக்கிறேன் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். மாவட்ட இளைஞர் அணிச் செயலாளருக்காக வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். அந்த உரிமையோடு வந்திருக்கிறேன். இங்கு வந்திருக்கும் இளைஞர் அணி தம்பிமார்களும் ஒவ்வொரு வீடு வீடாக ஏறி இறங்கி, வாக்கு சேகரிப்பில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

'தி.மு.க காரர்களுக்குத் தூக்கம் போய்விட்டது' என்று மோடி சொல்கிறார். "ஆமாம், எங்களுக்கு தூக்கம் போய்விட்டது. நரேந்திர மோடி அவர்களே, உங்களை வீட்டிற்கு அனுப்புகின்ற வரைக்கும் நாங்கள் தூங்கப் போவதில்லை. எங்கள் தேர்தல் பிரச்சாரத்தை தூக்கம் பார்க்காமல், நாங்கள் செய்யத்தான் போகிறோம். உங்களை நிம்மதியாக வீட்டில் சென்று தூங்க வைக்கின்ற வரைக்கும் நாங்கள் எங்களுடைய வேலையைச் செய்துகொண்டுதான் இருக்கப் போகிறோம்".



### கழக அரசின் சாதனைகள்!

இந்த நேரத்தில் நம் திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்று வரும் கழக அரசின் திட்டப் பணிகள் சிலவற்றை மட்டும் இங்கேகுறிப்பிடவிரும்புகின்றேன். ரூபாய் 38 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு அறை கட்டப்பட்டுள்ளது. முதன்மைக் கல்வி அலுவலகக் கட்டடம், சேமிப்புக் கிடங்கு ரூபாய் 20 கோடி ரூபாயில் கட்டப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாதிரிப் பள்ளிக் கட்டடம் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சாத்தனூர் அணையில் இருந்து புதிய குழாய்கள் மூலம் 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தண்ணீர் கொண்டுவரப்படுகின்றது. இதெல்லாம் திருவண்ணாமலை மாவட்டத்தில் கழக அரசு செய்து முடித்திருக்கக்கூடிய சாதனைகள்.

### வாக்குறுதிகள்

தலைவர் அவர்கள் தேர்தல் வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார்கள். செய்வதைத்தான் சொல்வோம், சொல்வதைத்தான் செய்வோம் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அடிக்கடி கூறுவார். இப்போது நம்முடைய தலைவரும் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார். சில வாக்குறுதிகளை மட்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். நெல், அரிசி வியாபாரிகளுக்கு ஊக்கம் தரும் வகையில், ஏற்றுமதி மையம் அமைக்கப்படும். 10 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ள திருவண்ணாமலை சென்னை தினசரி இரயில் பொதுமக்களின் நலன் கருதி மீண்டும் இயக்கப்படும். திருவண்ணாமலை நகரம் ஆன்மிகம் மற்றும் விவசாயத்தைச் சார்ந்து அமைந்துள்ளதால் நகர வளர்ச்சிக்குத் தடையாக அமைய இருக்கும் புதிய டோல்கேட் ரத்து செய்யப்படும். திருப்பத்தூர் திருவண்ணாமலை இடையே இரயில் சேவை தொடங்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறோம்.

### கேஸ் விலை 450 ரூபாயிலிருந்து 1,200

2014ஆம் ஆண்டு சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 450 ரூபாயாக இருந்தது. இப்போது அதன் விலை 1,200 ரூபாய். தேர்தல் வந்தவுடன் நரேந்திர மோடி அவர்கள் ஒரு நாடகம் ஆடுகிறார். 100 ரூபாய் குறைக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். மக்களே ஏமாந்து விடாதீர்கள். திரும்பவும் பா.ஜ.க. வெற்றி பெற்றால் 500 ரூபாய் ஏற்றினாலும் ஏற்றிவிடுவார்கள்.

ஆனால், நம் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லி இருக்கிறார். இந்தியா கூட்டணி ஆட்சி அமைத்தது என்றால், கேஸ் சிலிண்டரின் விலை 500 ரூபாயாகக் குறைக்கப்படும். பெட்ரோல் லிட்டர் 75 ரூபாய்க்கு கொடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார். ஒரு லிட்டர் டீசல் 65 ரூபாய்க்கு கொடுக்கப்படும் என்றும் சொல்லி இருக்கிறார் நம் தலைவர் அவர்கள்.

அதுமட்டுமல்ல தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து சுங்கச் சாவடிகளும் அகற்றப்படும் என்றும் நம் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்.

### மக்களிடம் சொல்லுங்கள்!

நீங்கள் ஒரு ஐந்து திட்டங்களை மட்டும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இதை மட்டும் மக்களிடம் எடுத்துச் சொல்லி வாக்கு சேகரியுங்கள். திராவிட மாடல் அரசின் சாதனைகளை மட்டும் மக்களிடம் எடுத்துச்சொல்லுங்கள். நம் வெற்றிக்கு அதுவே போதும்.

- மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம்
- கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்
- புதுமைப்பெண் திட்டம்
- தமிழ்ப் புதல்வன் திட்டம்
- முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டம்

நாட்டு மக்களுக்கு குறிப்பாக நம் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு விடியல் வரவேண்டும் என்றால், இந்தியா கூட்டணி வெல்ல வேண்டும். அதற்கு ஏப்ரல் 19ஆம் தேதி வாக்குசாவடிக்குச் சென்று, நம் உதயசூரியன் சின்னத்தில் சி.என்.அண்ணாதுரை அவர்களுக்கு வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில், 4 லட்சம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### 10 நாளில் தலைவர் வருவார்

ஒரு படம் வெளியாகும்போது 10 நாட்களுக்கு முன்பு டிரைலர் வெளியிடுவார்கள். நான் டிரைலர்தான். மெயின் பிக்சர் இன்னும் 10 நாட்களில் பின்னாடி வருகிறது. யாரை சொல்கிறேன் தெரிகிறதா? தலைவர் இன்னும் 10 நாட்களில் உங்களை சந்திக்க இருக்கிறார். நாங்கள் எல்லாம் அடுத்த தொகுதிக்கு சென்று விடுவோம். ஆனால், இந்த தொகுதியில் இருந்து அடுத்த 22 நாட்கள் இந்தப் பிரச்சாரத்தை ஒவ்வொரு வீடாக சென்று, ஒவ்வொரு வாக்காளராக சந்தித்து, ஒவ்வொரு தெருவாகச் சென்று இந்த பிரச்சாரத்தை செய்ய வேண்டும்.

ஒவ்வொருவரும் தெருக்கள், வீடுகள் வாரியாக பொறுப்பேற்றுக்கொண்டு வாக்குச் சேகரிப்பில் ஈடுபட வேண்டும். வருகின்ற ஜூன் 3ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞரின் 101வது பிறந்தநாள். ஜூன் 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை. முத்தமிழறிஞர் கலைஞரின் நூறாவது பிறந்தநாள் பரிசாக 40க்கு 40 வெற்றி பெற்று கொடுக்க வேண்டும்.

### உரிமையோடு கேட்கிறேன்

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். ஆதரிப்பீர், உதயசூரியன், உதயசூரியன், உதயசூரியன், உங்களின் வெற்றி வேட்பாளர் சி.என்.அண்ணாதுரை அவர்களை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்புங்கள் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

உடன் அமைச்சர் எ.வ.வேலு, சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, சரவணன், கழக மருத்துவர் அணியின் மாநிலத் துணைத் தலைவர் எ.வ.வெ. கம்பன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த நியூட்டன், வளர்மதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வீரபத்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முத்தையன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சீனி கார்த்திகேயன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த சுலைமான், நவாப் ஜான், மனிதநேய மக்கள் கட்சியைச் சேர்ந்த நாசர் உசேன், கனிமுல்லா, மக்கள் நீதி மையத்தைச் சேர்ந்த அருள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

மத்திய சென்னை நாடாளுமன்ற கழக வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து

## மு.க.தமிழரசு 109வது வட்டத்தில் வாக்குச் சேகரிப்பு!

### நே. சிற்றரசு - அன்பகம் கலை - நா. எழிலன் - கலை கதிரவன் பங்கேற்பு!

*சென்னை, மார்ச் 27-*

*பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை வருமாறு :*

*மத்திய சென்னை தொகுதியில் இந்திய கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து பகுதி கழகம் சார்பில் 109 வது வட்டத்தில் மு.க.தமிழரசு இன்று (27.03.2024 புதன்கிழமை) 5 மணி அளவில் கிழக்கு, மேற்கு நமச்சிவாய புரம் சந்திப்பில் துவங்கி வீடு, வீடாக சென்று வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபடுகிறார்.*

*வாக்கு சேகரிப்பு பணியில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் அணி செயலாளர் நா. எழிலன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கலந்து கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.டி.ஆர். நாதன், டி.ஜோஸ்டானியல், மாவட்டக் கழக நிர்வாகிகள் த. விக்டர் ஆர். என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின்பாபு, பகுதி கழக நிர்வாகிகள், அவைத் தலைவர் புவி.பாலாஜி, துணை செயலாளர்கள என். பி. இதயத் பாஷா, ஸ்டெர்லிங் மோகன், ரா.பொன்னம்மாள், பொருளாளர் பா. கமலக் கண்ணன், வட்ட செயலாளர் க.சிட்டிபாபு, வரதை த.பரி, ச.டேவிட், இன்பராஜ், த.குணசேகர், கே. எஸ்.தினேஷ் பிரபு, மு. மோகன், மாவட்ட பிரதிநிதிகள் அ.குப்பன், எஸ். பார்த்திபன், த.ஐசென்ட், என்.இ. சரவணன், தட்சிணாமூர்த்தி, பா.சுரேஷ், எம்.டி.ஆர்.புகழ், ஆர்.சீனிவாசன், வி.என்.பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா.பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் குட்டி என்.மோகனவேல், பல்வேறு அணிகளுடைய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், டி.எஸ். ராஜா, எம்.டி.ஆர்.சாரதி, க. தங்கமணி, ஜே.இருதயநாதன், மு.சீனிவாசன், ஜி.வி. சரவணன், டி.செல்வி, ஜே. மீனாட்சி (எ) ஜோதி மீனா, தீபா சந்திரசேகர், மேட்லின் மேரி, எம்.ஏ.ஆரோன் பெலிக்ஸ், எம்.ஏ.ஜஸ்டின் ராஜ், எஸ்.பிரசன்னா, வே. சுதாகர், க.யோகமூர்த்தி, த. அமரேசன், கே.கமலக்கண்ணன், திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.*

*மேலும் 109 வது வட்ட நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், சு.சண்முகம், ச.ராசுகுமார், பா.ஜெயராணி, ஆ.ஆரோக்கிய தாஸ், ஜி.ஆர்.மூர்த்தி, மா. அண்ணாமலை, மோ.தியாகராஜன், மு.முனிரத்தினம், பாகப் பொறுப்பாளர் பத்மநாபன்,*

*இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளுடைய பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2 (பாக முகவர்கள்), பி.எல்.சி. (பாக உறுப்பினர்கள்), கழகத் தோழர்கள், இந்திய கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.*

*இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை விடுத்துள்ளார்.*




மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து மு.க. தமிழரசு வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார் உடன் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, நா.எழிலன் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம். கலைக் கதிரவன் இந்திய கூட்டணி கட்சி தோழர்கள் மாவட்ட ,பகுதி, வட்ட நிர்வாகிகள் கழகத்தினுடைய மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கழக வேட்பாளர் சி.என். அண்ணாதுரையை ஆதரித்து

# திருவண்ணாமலையில் மக்களிடையே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



### கழக வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து

## குன்றத்தூரில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



திருப்பெரும்புதூர், மார்ச 27 -

திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து குன்றத்தூரில் 28 ஆம் தேதி மாலை நடைபெறும் கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் உரையாற்றுகிறார் என மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் அறிவிப்பு வருமாறு :-

திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து குன்றத்தூரில் 28 ஆம் தேதி மாலை நடைபெறும் கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் உரையாற்றுகிறார் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ளஅறிக்கை வருமாறு :-

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலை சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காக திருப் பெரும்புதூர் தொகுதியில் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து கூட்டணி கட்சித் தலைவர்கள் கூட்டம் நாளை (28.3.2024) மாலை 4.00 மணியளவில் குன்றத்தூர், செங்குந்தர் திருமண மண்டபத்தில் அமைந்துள்ள அண்ணா அரங்கில் தி.மு.க. தலைமை தீர்மானக் குழு செயலாளர் முன்னாள் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மீ.அ.வைதியலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திருப் பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள கூட்டணி கட்சித் தலைவர்கள் திரளாக கலந்துகொள்கின்றனர்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

### மத்திய சென்னை தொகுதி கழக வேட்பாளர்

## தயாநிதி மாறன் இன்று வேட்பு மனு தாக்கல்!

### கழக நிர்வாகிகள் – ‘இந்தியா’ கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்பு!



சென்னை, மார்ச் 27-

மத்திய சென்னை தொகுதி தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறன் இன்று (27.3.2024 - புதன்கிழமை) வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தயாநிதி மாறன் இன்று (27.3.2024) காலை 10 மணிக்கு மண்டலம் 8, ஷெனாய் நகர் 36பி, புல்லா அவென்யூ தேர்தல் அலுவலகத்தில் தனது வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

அமைச்சரும் கிழக்கு மாவட்டச் செயலாளருமான பி.கே. சேகர்பாபு, மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன் மற்றும் கழக பொறுப்பாளர்கள், கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் உடன் செல்கின்றனர்.

அவர்களுடன், மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதி கழகச் செயலாளர்கள், சேப்பாக்கம் மதன் மோகன், திருவல்லிக்கேணி ஏ.ஆர்.பி.எம். காமராஜ், துறைமுகம் கிழக்கு ராஜ சேகர், துறைமுகம் மேற்கு முரளி, வில்லிவாக்கம் மேற்கு கூ.பி.ஜெயின், வில்லிவாக்கம் கிழக்கு வாசு, அண்ணாநகர் தெற்கு ராம லிங்கம்,

அண்ணாநகர் வடக்கு பரமசிவம், எழும்பூர் வடக்கு வேலு, எழும்பூர் தெற்கு சுதாகர், ஆயிரம் விளக்கு கிழக்கு மா.பா. அன்புதுரை, ஆயிரம் விளக்கு மேற்கு வினோத் வேலாயுதம் மற்றும் மத்திய சென்னை தொகுதிக் குட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகி கள், வட்டச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இவர்களுடன், இந்தியா கூட்டணி சார்பாக இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனித நேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மய்யம், தமிழக வாழ்வுரிமை கட்சி, கொங்கு தேச மக்கள் கட்சி மற்றும் அனைத்துக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளும் கலந்து கொள்கிறார்கள்.



மத்திய சென்னை, வட சென்னை தொகுதி தி.மு.க. வேட்பாளர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி ஆகியோர் நேற்று காங்கிரஸ் கட்சி மாநில தலைவர் செல்வப்பெருந்தகையை சென்னை ராயப்பேட்டையில் உள்ள சத்திய மூர்த்தி பவனில் சந்தித்து ஆதரவு கோரினர். அருகில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.




திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் சார்பாக திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ அறிமுகம் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமை வகித்தார். மத்திய மாநகர செயலாளர்கள் அன்பழகன், மதிவானண் ஆகியோர் வரவேற்றனர். இதில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு,தெற்கு மாவட்டச் செயலாளரும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், பழனியாண்டி, கதிரவன், ஸ்டாலின் குமார், இனிகோ இருதயராஜ், வை.முத்துராஜா, முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோவை அறிமுகம் செய்து வைத்தனர். திருச்சி தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ, நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களிடம் ஆதரவு கோரினார்.

# தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை கேட்க எட்டயபுரத்தில்
# கண்ணுக்கெட்டிய தூரம் வரை லட்சோப லட்சம் மக்கள் திரண்டிருந்த காட்சி!












கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.3.2024) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தூத்துக்குடி தொகுதி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் இராமநாதபுரம் தொகுதி வேட்பாளர் நவாஸ்கனி ஆகியோருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, திருமதி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், முருகேசன், கருமாணிக்கம், அமிர்தராஜ், சண்முகய்யா, சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன், முக்குலத்தூர் புலிப்படை கட்சித் தலைவர் கருணாஸ், மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல் ராஜன், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் சுரேஷ் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.





விழுப்புரம் மற்றும் கடலூர் நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி வெற்றி வேட்பாளர்கள் விழுப்புரம் ரவிக்குமார், கடலூர் விஷ்ணு பிரசாத் ஆகியோரை ஆதரித்து வாக்குகளைச் சேகரிக்க வருகிற 5 ஆம் தேதி விழுப்புரம் வருகை தரும் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் அரங்கத்தை அமைக்கும் பணியினை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் @ மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜ் , மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, ஒன்றியச் செயலாளர்கள் தே. முருகவேல், ஜி. இரவிச்சந்திரன், பி. வி. ஆர்.சு.விசுவநாதன், வி. ஜி. பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ. தினகரன், மாணவர் அணி அமைப்பாளர் பா. ஸ்ரீ வினோத், தொண்டர் அணி அமைப்பாளர் கபாலி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் டி. என். ஏ தமின், வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப. அன்பரசு, ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் செல்வ பிரேம் உள்ளிட்ட ஒன்றிய, நகர நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூரில் நடைபெற்ற மாபெரும் செயல் வீரர் கூட்டத்தில் தேனி நாடாளுமன்ற 'இந்தியா' கூட்டணி கழக வேட்பாளர் தங்க தமிழ்செல்வனை அறிமுகம் செய்து வைத்து வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், சரவணக்குமார், தொகுதி பொறுப்பாளர் சுப.த.சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

## திருவள்ளூர் மத்திய மாவட்ட

# இளைஞர் அணி - மாணவர் அணி - வழக்கறிஞர் அணி கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர், மார்ச் 27-

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி, மாணவரணி, வழக்கறிஞர் அணிகள் அவசர ஆலோசனை கூட்டம் குறித்து மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு. நாசர் எம்.எல்.ஏ அறிவிப்பு வருமாறு :

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட இளைஞரணி மாணவரணி மற்றும் வழக்கறிஞர் ஆலோசனைக் கூட்டம் இன்று (27 032024 புதன் கிழமை) காலை 8 மணி அளவில் ஆவடியில் உள்ள வார் ரூமில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான (ஆவடி சாமு. நாசர் எம்.எல்.ஏ.) எனது தலைமையில் நடைபெறுகிறது.

இதில் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளரை வெற்றி பெறுவது மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து ஆலோசனை வழங்கப்பட உள்ளது. இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், வழக்கறிஞர் அணி அமைப்பாளர், தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய நகர, பேரூர் பகுதி, கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு செயலாளர் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக

ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

## நொளம்பூர் வே.ராஜன் - வே.மதியழகன் - செல்வி ரமேஷ் பங்கேற்பு!

# மதுரவாயல் 149வது வட்ட தேர்தல் பணிமனை - பேராசிரியர் சுப.வீரபாண்டியன் திறந்து வைக்கிறார்!

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை! த.ரமேஷ் அறிக்கை!

சென்னை, மார்ச் 27-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்ட சார்பில், கழகத்தின் பொருளாளர், திருபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களை ஆதரித்து தேர்தல் பணிமனையினை இன்று (27.03.2024 - புதன் கிழமை) மாலை 5.00 மணி அளவில், சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, வளசரவாக்கம் 149வது வட்டத்திற்கு உட்பட்ட தேவிகுப்பம் மெயின் ரோடு, வளசரவாக்கம், எண்.173 என்ற விலாசத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்கான தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெறவுள்ளது.

இதில் 149வது வட்ட கழக செயலாளர் த. ரமேஷ் தலைமை தாங்குகிறார். மதுரவாயல் தெற்கு பகுதி கழக துணை செயலாளர் வே.மதியழகன் முன்னிலை வகிக்கிறார்.

மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் 11வது மண்டலக் குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் மற்றும் 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் பொதுசுகாதார நிலைக் குழு உறுப்பினர் திருமதி. செல்விரமேஷ் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

மேலும் அவைத்தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, துணைச் செயலாளர்கள் தி.நா.கமலநாதன், எம். குமார், திருமதி. ஆர். குப்பு, பொருளாளர் பி. எஸ்.துரைசாமி மற்றும் வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் பாக பொறுப்பாளர்கள், பாகமுகவர்கள், பாக அமைப்பாளர்கள், கூட்டணிக் கட்சி தோழர்கள் அனைவரையும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்ட செயலாளர் த. ரமேஷ் தன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# 124 'அ' வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

### மயிலை த.வேலு - எஸ்.முரளி பங்கேற்பு!

சென்னை, மார்ச் 27-

மயிலை கிழக்கு பகுதி 124 அ வட்டத்தில் கழக வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து இன்று (27.03.2024) காலை காலை 7.30 மணி அளவில் வட்டப் பொறுப்பாளர் மா.பா. அன்பு தலைமையில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஆகியோர் பிரச்சாரத்தை துவக்கி வைத்து பொதுமக்களிடம் வாக்கு சேகரிக்கிறார்.

பிரச்சார மேற்கொள்ளும் இடங்கள் துவங்கும் இடங்கள்: சத்யா வாணி முத்து நகர், சாரதாபுரம், வீசி கார்டன், புனித மேரி சாலை, பிள்ளையார் கோவில் தோட்டம், லாலா தோட்டம், ஆர். கே.மடம் சாலை (இந்தியன் வங்கி அருகில்), வடக்கு மாட வீதி, தட்சி அருணாச்சலம் தெரு, புதுத்தெரு, சோலையப்பன் தெரு, கேசவ பெருமாள் சன்னதி தெரு, அரிசிகாரன் தெரு, மசூதி தெரு, சித்திரை குளம், தெற்கு மாட வீதி, டி.எஸ்.வி. கோவில் தெரு, ஆடம் தெரு, வைத்தியர் அண்ணாமலை தெரு, மந்தைவெளி தெரு, சங்கீதா ஓட்டல், கச்சேரி சாலை போலீஸ் குடியிருப்பு விநாயகம் காலனி ராஜா கல்யாண மண்டபம், வெங்கடேச அக்ரஹாரம், அலமேலு மங்காபுரம், 124 அ வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சாரத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## நே.சிற்றரசு தலைமை! ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் முன்னிலை!

# திருவல்லிக்கேணி பகுதியில் தேர்தல் பணிமனை!

### தயாநிதி மாறன் திறந்து வைக்கிறார்!

சென்னை, மார்ச் 27-

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி நேற்று இந்தியா கூட்டணி சார்பில் தேர்தல் பணிமனை திறப்பு விழா 27.03.2024 - காலை 10.00 மணியளவில் நடைபெற்றது.

சென்னை மேற்கு மாவட்டம், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமை தாங்குகிறார். பகுதிச் செயலாளர் ஏ.ஆர். பி.எம்.காமராஜ் முன்னிலை வகிக்கின்றனர்.

தேர்தல் பணிமனையினை தயாநிதிமாறன் திறந்து வைக்கிறார்.

திருவல்லிக்கேணி தேர்தல் பணிமனை அயோத்தியா நகர்

115(அ) கே.ஜி.செந்தில் கமார், 21, தேவராஜ் தெரு, திருவல்லிக்கேணி,

116 எஸ்.சசிகுமார், 171, பெசன்ட் சாலை, திருவல்லிக்கேணி

116 (அ) ஜெ.விஜய குமார், எண்.50, எஸ்.எம். வி.கோயில் தெரு, திருவல்லிக்கேணி,

119 க.வே.மோகன், 55, வி.எம்.தெரு, இராயப் பேட்டை,

119 (அ) கே.பிரபு, 136, வி.எம்.தெரு, இராயப் பேட்டை,

120 எம்.சங்கர், 197, நடேசன் சாலை திருவல்லிக்கேணி,

120 (அ) என்.ரவி, 19, கந்தப்பா தெரு, திருவல்லிக்கேணி

என்கின்ற முகவரியில் வட்டக் கழக தேர்தல் பணிமனைகள் திறக்கப்பட்டது.

மேலும் நிகழ்ச்சியில் வீ.பி.பொன்னரசு, ஆர். என்.துரை, அ.சுபேர்கான், வி.என்.ராஜன், ப.பிரகாஷ், எ.விஜயராஜ், இ.இளம்பாரதி, கமலாசெழியன், ரவிராஜ்குமார், எம்.கே.ஆனந்த், வி. தினேஷ்குமார், ம.தயாநிதி, கே.திருநாவுக்கரசு, சி.தினகரன், எம்.பிரேம் ராஜா, ரா.பத்மாவதி, மங்கை ராஜ்குமார், ஐ.சி. எப்.எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், க.வே.மோகன், என்.ரவி, கே.பிரபு, கே.ஜி. செந்தில்குமார், எம்.கலில் ரகமான், அர்.சசிகுமார், வே.சினிவாசன், அர். கஜேந்திரன், ம.பச்சையப்பன், எஸ்.விஜயகுமார், அர்.ராஜ்குமார், எ.பி.வேலு, எல்.துளசிராமன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

## சீ.சீனிவாசன் தலைமையில்

# 88வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

சென்னை, மார்ச் 27-

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி அம்பத்தூர் வடக்கு பகுதி கழகத்தின் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் அம்பத்தூர் ஏழாவது மண்டல குழு தலைவர் பி. கே.மூர்த்தி அம்பத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி. அறிவுறுத்தலின்படி 88வது வட்டத்தில் வட்டக் கழக செயலாளர் சி.சீனிவாசன் தலைமையில் திருப்பெரும் புதூர் நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் தி.மு.க.கழக பொருளாளர் கழக வேட்பாளர் டி. ஆர்.பாலு அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்கும் பணி 25.03.2024 அன்று காலை பாடி, கலைவாணர் நகர், பாகம் 274, 275, 276 பாகங்களில் வாக்கு கேட்கும் பணி நடைபெற்றது .

இதில் மாவட்ட ஆதிதிராவிடர் கலை குழு துணை அமைப்பாளர் ஆசை ஆரோக்கியம் பகுதி பொருளாளர் கோ.சங்கர், பகுதி துணை செயலாளர் ஆர். கதிரவன், மாவட்ட பிரதிநிதி ஆர்.ஜெயராமன், 88வது வட்டத்திற்குட்பட்ட காங்கிரஸ் கட்சியின் எம்.கிஷோர்குமார், ஒய்.பால் துறை விடுதலை சிறுத்தை கட்சியின் வே.அ.அம்பேத்தேவன், வே.அ.கோட்டி, கழக நிர்வாகிகள் எம்.என்.நாகராஜ், எம்.எஸ்.செந்தில்நாதன், போ.சின்னையா, ஏ.பி.டி.ரவி, கண்.ராமலிங்கம், ஆர்.சண்முகசுந்தரம் , மு.மனோகரன், எஸ்.ஜெகநாதன், சி.ரகோத்தமன், இ.சாந்தகுமார், பி.கே. பிரபு, கலைஞர் பித்தன் சி.சுப்பு என்கின்ற சுப்பிரமணி, உ.நவநீதம், ஆர். புனிதா, எம்.தமிழ்ச்செல்வி, டி.மகேஸ்வரி, பஞ்சு ஏ. வேலு, கே.ஆனந்தன், எம். மணிகண்டன், எஸ்.திலீப் குமார், என்.ஐயப்பன், யு. இருளப்ப ராஜா, டி.கென்னடி, டி.வி.எஸ்.நகர் தங்கவேல், எம்.ராமசுபாஷ், எஸ். பழனி மற்றும் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

## திருவள்ளூர் (தனி) நாடாளுமன்றத் தொகுதி

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட 'இந்தியா' கூட்டணி நிர்வாகிகள் அவசரக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ அறிக்கை!



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதிகளின் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் அவசரக் கூட்டம் 27.03.2024 புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் கவரைப்பேட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளது. மாவட்ட காங்கிரஸ் தலைவர் துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ முன்னிலையில் திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் இரா.கிரிராஜன் எம்.பி. பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார். கும்முடிப்பூண்டி தொகுதி பொறுப்பாளர் பி.டி. அரசகுமார், பொன்னேரி தொகுதி பொறுப்பாளர் அழகிரி சதாசிவம் பங்கேற்கின்றனர். கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், சிபிஎம், சிபிஐ, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் விடுதலை, சிறுத்தைகள் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, மக்கள் நீதி மய்யம், திராவிடர் கழகம் தோழமைக் கட்சிகள் மற்றும் ஆதரவு அளித்துள்ள அமைப்புகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

பொருள்: மார்ச் 29 அன்று இந்தியா கூட்டணி வேட்பாளர் திரு.சசிகாந்த் செந்தில் அவர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பொன்னேரி வருகை குறித்து, நாடாளுமன்ற தேர்தல் குறித்து

**டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ.**

செயலாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

## திருவள்ளூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர்

# சசிகாந்த் செந்தில் வேட்பு மனுதாக்கல்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் வேண்டுகோள்!

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதியில் அடங்கிய கழகத் தோழர்கள் கவனத்திற்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் வேண்டுகோள் வருமாறு:

இன்று (27.03.2024)புதன்கிழமை காலை 10 மணி அளவில் திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் சசிகாந்த் செந்தில் ஐ.ஏ.எஸ், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருவள்ளூரில் வேட்பு மனு தாக்கல் செய்ய இருப்பதால் கழகத் தோழர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாதவரம் **எஸ்.சுதர்சனம்** எம்.எல்.ஏ.

செயலாளர், சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டத்தில் தேர்தல் பணிமனையினை மத்திய சென்னை நாடாளுமன்ற கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் திறந்து வைத்தார். உடன் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், அண்ணாநகர் தொகுதி பார்வையாளர் சி.பத்மப்ரியா, 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ.2 மற்றும் பி.எல்.சி நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் தேர்தல் அதிகாரி – மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், பழனி நாடார் எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் சாதிர் ஆகியோர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம் அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதி காட்பாடியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஜெகத்ரட்சகனை ஆதரித்து கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் பேசினார். அருகில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர தி.மு.க செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் எம்.சுனில் குமார் மற்றும் கழக முன்னணியினர், கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.



'இந்தியா' கூட்டணியின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் டி.ஆர்.பாலு 25.3.2024 அன்று திருநீர்மலையில் தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், திருநீர்மலை ஜெயகுமார், வே.கருணாநிதி மற்றும் கூட்டணிக் கட்சித் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### நாடு வாழ 'இந்தியா' கூட்டணி வெற்றி பெற வேண்டும்!

# பா.ஜ.க.விடம் இருந்து மதத்தையும், மக்களையும் காப்பாற்றுவது நமது கடமை !

## திருச்செந்தூரில் கனிமொழி கருணாநிதி பிரச்சாரம்!

**தூத்துக்குடி, மார்ச் 27-**

**நாடு வாழ, நலமுடன் திகழ வேண்டும் என்றால், 'இந்தியா' கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்றும் மதத்தையும், மக்களையும் பா.ஜ.க.விடமிருந்து காப்பாற்ற வேண்டியது நம் கடமை என்று - திருச்செந்தூரில் தேர்தல் பிரச்சாரத்தின்போது தொகுதி வேட்பாளர், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.**



தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக மீண்டும் போட்டியிடும் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள திருச்செந்தூர் தேரடித்திடலில் பிரச்சாரம் செய்தார்.

தொடர்ந்து, தெற்கு ரதவீதி, தோப்பூர், வீரபாண்டியன்பட்டினம், அம்பேத்கர் சிலைபிரசாத் நகர், சண்முகபுரம், இராணிமகராஜபுரம் ஆறுமுகநேரி பேரூராட்சி, அடைக்கலப்புரம், காமராஜபுரம், ஆறுமுகநேரி பஜார், செல்வராஜபுரம், திசைக்காவல் தெரு, மடத்துவிளை, கந்தன் குடியிருப்பு, அம்மன்புரம், சோனகன்விளை ஆகிய பகுதிகளில் கூடி நின்ற மக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

இதில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது:-

உங்களுடைய அன்பான வரவேற்புக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது தெருமுனை பிரச்சாரமா அல்லது ஒரு பொதுக்கூட்டமா என்று கேட்கத் தோன்றக் கூடிய அளவிலே இவ்வளவு பெரிய வரவேற்பைத் தந்து இருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் மீண்டும் தூத்துக்குடி வேட்பாளராக நிற்கக் கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கி இருக்கிறார்கள். சென்ற முறை நான் தேர்தலில் நின்ற போது பல பேர் என் மீது வைத்த விமர்சனம், அவர்கள் சென்னையில் இருக்கிறார்கள். நிச்சியமாக தேர்தல் முடிந்து வெற்றி வாய்ப்பு கிடைத்தால் தூத்துக்குடிக்கு திரும்பி வரவே மாட்டார்கள் என்று கூறினார்கள். ஆனால் தூத்துக்குடி என்பது என்னுடைய இரண்டாவது தாய்வீடு என்று சொல்லக் கூடிய அளவிற்கு நீங்கள் என் மீது அன்பைப் பொழிந்து இருக்கிறீர்கள். அதே போல நானும் உங்களோடு நின்று பணியாற்றி இருக்கிறேன் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அந்த உரிமையோடு நான் உங்களிடம் கேட்கிறேன், உங்களுடைய பொன்னான வாக்குகளை உதயசூரியன் சின்னத்தில் அளித்து மீண்டும் உங்களோடு பணியாற்றக் கூடிய வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தர வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இது வெறும் அரசியல் வெற்றிக்கான தேர்தல் இல்லை. நம்முடைய தேர்தல் என்பது இந்த நாட்டை காப்பாற்ற வேண்டிய தேர்தல். நம்முடைய முதலமைச்சர் சொல்வது போல், இது 2வது சுதந்திரப் போராட்டம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். நம்முடைய அடையாளங்களை, நம்முடைய மொழியை, தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது.

**மாநில உரிமைகளை பறிக்கும் ஒன்றிய அரசு!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த நாட்டில் இருக்கக்கூடிய எல்லா மாநில உரிமைகளைப் பறிக்கிறது. அப்படி உரிமைகளைப் பறிப்பதற்காக தமிழ்நாட்டு மக்களுடைய வரிப் பணத்தை அரசாங்கத்திடமிருந்து வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால், நம்மிடம் 1 ரூபாய் வாங்கி 26 பைசா தான் திருப்பி கொடுக்கிறார்கள். வெள்ள நிவாரணத்துக்கு இன்று வரை ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. ஆனால், அவர்கள் ஆட்சி செய்யும் உத்தரப் பிரதேசம் 1 ரூபாய் வரி கொடுத்தால் 2 ரூபாய் 2 பைசா திரும்பிக் கொடுக்கிறார்கள். இது ஓரவஞ்சனை, நியாயம் இல்லாமல் ஒரு அரசாங்கம் நடந்து கொள்ளலாமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பெரும்பான்மை மக்கள் சார்ந்துள்ள இந்து மதத்தை இவர்கள் காப்பாற்றுவதற்காகவே பிறந்தவர்கள் போல் தொடர்ந்து பேசுகிறார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், பா.ஜ.க.விடம் இருந்து இந்து மதத்தையும், மக்களையும் காப்பாற்றுவது நமது கடமை. ஏனென்றால் மதத்தைப் பயன்படுத்தி அரசியலுக்கு வந்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, எந்த மக்களால் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார்களோ அவர்களை எதிர்த்து வேலை செய்து கொண்டிருப்பதுதான் பா.ஜ.க.,வின் மோடி அரசு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அடித்தட்டில் இருக்கக் கூடிய மக்கள், உழைக்கக் கூடிய மக்கள், வியாபாரிகள் யாராவது பா.ஜ.க. வாழவைத்து இருக்கிறதா? என்றால் இல்லை. விவசாயிகளுக்கு எதிராகச் சட்டம், தொழிலாளர்களுக்கு எதிராகச் சட்டம், அதுபோல் ஜி.எஸ்.டி. கொண்டுவந்த இங்கே இருக்கக்கூடிய வியாபாரிகளுக்கு அபராதம் விதித்து, வியாபாரம் செய்ய முடியாத அளவுக்குச் சித்திரவதை செய்து கொண்டிருக்கக் கூடியவர்கள் தான் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பா.ஜ.க. என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**எல்லோருக்குமானவர் நம் முதலமைச்சர்!**

நம்முடைய முதலமைச்சர், எல்லோருக்குமான முதலமைச்சர், இன்னும் சொல்லப் போனால் எனக்கு ஓட்டுப் போட்டவர்கள், ஓட்டுப் போடாதவர்களுக்கும் சேர்த்துதான் நான் முதலமைச்சர். என நினைக்க கூடிய அளவிற்கு பணியாற்ற வேண்டும் என்று சொன்னவர் முதலமைச்சர். அவருடைய ஆட்சியில் இன்றைக்கு எத்தனையோ புதிய திட்டங்கள் தமிழ்நாட்டுக்காக கொண்டுவரப்படுகிறது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரப்படுகிறது, பெண்கள் இங்கு இருக்கக்கூடிய சகோதரிகளுக்குப் பேருந்துகளில் கட்டணமில்லாத பயணம், விடியல் பயணம்.

**'பக்கோடா' போடச் சொன்ன அமித்ஷா!**

அதேபோல் நம்ம வீட்டுப் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகள் ஆக இருக்கட்டும் கல்லூரியில் படிக்கும்போது மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படும், ஏன் என்றால் நம்ம பசங்க படிக்கவேண்டும். படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று விரும்பக்கூடிய ஆட்சி தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

வேலை இல்லையே என்று அமித்ஷா அவர்களைக் கேட்டால், போய் பக்கோடா போடு, அதுவும் வேலைதான் என்று சொல்லக்கூடிய மனது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, முதலமைச்சருக்கும் கிடையாது. எனது பிள்ளைகள் படிக்க வேண்டும், தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதால் தொழிற்சாலைகளைக் கொண்டு வந்து அவர்கள் அங்கே வேலைக்குச் செல்ல வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்கள் தான் நாங்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

**ஆட்சி மாற்றம் மிக மிக அவசியம்!**

தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ, இந்த நாடு தலைநிமிர எல்லா மக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றால் இங்கே மட்டுமில்லை, டெல்லியிலும் ஆட்சி மாற்றம் வரவேண்டும். இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும். நாடு நமது ஆகவேண்டும் நாற்பதும் நமது ஆக வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நீண்ட நாள் இந்த பகுதியில் கோரிக்கை என்பது பொன்னங்குறிச்சியில் இருந்து புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று நீங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். விரைவிலேயே அந்த திட்டம் தொடங்கப்படும் என்ற உறுதியை உங்களுக்கு நான் இந்த கூட்டத்தில் வழங்கிக் கொள்கிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் உரையாற்றினார்.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்திய தேசிய காங்கிரஸ் தொகுதி பொறுப்பாளரும் , திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினருமான ஊர்வசி அமிர்தராஜ், இந்தியா கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த கரும்பர், சமத்துவ மக்கள் கழகத்தில் தலைவர் எர்ணாவூர் நாராயணன், சமத்துவ மக்கள் கழக அற்புதராஜ், மக்கள் நீதி மையம் கட்சியைச் சார்ந்த அலெக்ஸ் மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.



இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் திருவள்ளூர் தனி நாடாளுமன்ற தொகுதிபோட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சசிகாந்த் செந்திலை ஆதரித்து திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஆவடி சட்டமன்றத் தொகுதி கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ வேட்பாளரை அறிமுகம் செய்து வருகின்ற தேர்தலில் கை சின்னத்திற்கு அதிகமான வாக்கு வித்தியாசத்தில்வெற்றி பெற செய்திட அனைவரும் பணியாற்றும் வேண்டுமென்று சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் திருவள்ளூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் இரா.கிரிராஜன் எம்.பி., பூந்தமல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, உள்பட இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள்தலைவர்கள் கூட்டணி கட்சித் தோழர்கள் திமுக மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர்பகுதி கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட 118 வது வட்டம் ராயப்பேட்டை இரண்டாவது தெருவில் தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறன் தேர்தல் பணிமனையை திறந்து வைத்தார். அருகில் ஆயிரம் விளக்கு தொகுதி எம்.எல்.ஏ., எழிலன், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## சென்னை கிழக்கு மாவட்டம்

# மத்திய சென்னை, வடசென்னை, திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற தேர்தல் 2024!



### மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டம் மத்திய சென்னை, வடசென்னை, திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் டி.ஆர்.பாலு, தயாநிதிமாறன், டாக்டர். கலாநிதி வீராசாமி ஆகியோரை ஆதரித்து நடைபெறும் ஆலோசனைக்கூட்டங்களின் விவரம்.

| நாள்/நேரம் | பொருள் | இடம் |
|---|---|---|
| 27.03.2024 புதன்கிழமை காலை 8.30 மணி | சென்னை கிழக்கு மாவட்டம், மத்திய சென்னை, வடசென்னை, திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம், கொளத்தூர், திரு.வி.க.நகர், அம்பத்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் கழக மற்றும் தோழமை கட்சி மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக்கூட்டம் | எண்.7, செல்லப்பா தெரு, ஓட்டேரி, சென்னை - 600012. |
| 27.03.2024 புதன்கிழமை இரவு 9.00 மணி | சென்னை கிழக்கு மாவட்டம் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிகளின் பகுதி செயலாளர்கள், வட்டசெயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம் | எண்.7, செல்லப்பா தெரு, ஓட்டேரி, சென்னை-600012 |

மேற்கண்ட ஆலோசனைக்கூட்டத்தில் குறிப்பிட்டவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் "இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து சைதாப்பேட்டை மேற்கு பகுதிக்கு உட்பட்ட ரத்தினம் தோட்டம், மசூதி சந்து, வ.உ.சி தெரு, மசூதி பள்ளம் ,தனசேகரன் தெரு, மசூதி தெரு, கருணாகரன் தெரு, அபித்காலனி, சின்னாமாள் தெரு, ஆலந்தூர் ரோடு, ராமானுஜம் தெரு, செட்டித் தெரு, பாரதியார் தெரு, வி.வி.கோயில் தெரு, ராமபுரம் ராமசாமி தெரு, புஜங்கர் தெரு, ராஜகோபால் தெரு, சாமியார் தோட்டம் ,நாராயணசாமி 1 வது தெரு, காவலர் குடியிருப்பு, துரைசாமி தோட்டம், பிராமின் லேன், கொத்தவால்சாவடி தெரு, கு.மா.வா.குடியிருப்பு, பிராமின் தெரு, விலாமர குடிசை, கொத்தவால்சாவடி தெரு, ஆலந்தூர் சுரங்கப்பாதை ஆகிய பகுதிகளில் வீடுவீடாக பொதுமக்களிடத்திலே சென்று திமுக அரசின் சாதனைகளை விளக்கி அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் சைதாப்பேட்டை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கோவி.லெனினன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.மகேஷ்குமார், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் (தனி) நாடாளுமன்றத் தொகுதி

# காங்கிரஸ் வேட்பாளர் சசிகாந்த் செந்தில் வேட்பு மனு தாக்கல்!

### மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திருவள்ளூர், மார்ச் 27

திருவள்ளூர் (தனி) நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர் சசிகாந்த் செந்தில் இன்று வேட்பு மனு தாக்கல் செய்கிறார். திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கூட்டணி தோழர்கள், தி.மு.க. நிர்வாகிகள் திரளாக பங்கேற்க வேண்டும் என மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு. நாசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு வருமாறு:-



திருவள்ளூர் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய கூட்டணிக் கட்சிகளின் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் இன்று (27.03.2024 புதன் கிழமை) மதியம் 12.00 மணியளவில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்கிறார்.

வேட்பு மனு தாக்கல் செய்யும் முன்னதாக காலை 10 மணியளவில் திருவள்ளூர் அடுத்த திருப்பாச்சூர் ஏ.கே.என் திருமணம் மண்டபத்திற்கு திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மற்றும் பூந்தமல்லி தொகுதியில் அடங்கிய இந்தியா கூட்டணி கட்சிகளின் இடம் பெற்றுள்ள தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளில் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக திரண்டு வந்து பங்கேற்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

## மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில்

# தயாநிதிமாறன் இன்று வேட்பு மனு தாக்கல்!

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் "இந்தியா" கூட்டணியில் போட்டியிடும் கழக வேட்பாளர் தயாநிதி மாறன் இன்று (27-3-24) வேட்பு மனு தாக்கல் குறித்து மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு வருமாறு:

மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் "இந்தியா" கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்கள் இன்று (27.03.2024) புதன் கிழமை காலை 10.00 மணியளவில் செனாய் நகர், புல்லா அவின்யூ, மண்டலம்8, தேர்தல் அதிகாரியிடம் வேட்பு மனுத்தாக்கல் செய்கிறார்.

ஆகவே, சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளில் இடம் பெற்றுள்ள கட்சியின் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் இந்த வேட்புமனு தாக்கல் நிகழ்ச்சியில் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## திருவொற்றியூர் பகுதியில்

# கலாநிதி வீராசாமி வாக்குச் சேகரிப்பு!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் வேண்டுகோள்!



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் தொகுதி வட சென்னை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. அவர்களை ஆதரித்து சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. எனது தலைமையில் திருவொற்றியூர் தொகுதி மேற்பார்வையாளர் சி.தசரதன் முன்னிலை யில் 27.03.2024 காலை 7.00 மணியளவில் இந்தியன் பேங்க் திருவொற்றியூர் தொகுதி 8வது வார்டில் அமைந்துள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து குறிப்பிட்டுள்ள அட்ட வணைப்படி கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர் எஸ் பாரதி அவர்களும் கழக செய்தி தொடர்பு தலைவரும் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான டி.கே.எஸ் இளங்கோவன் ஆகியோர் தேர்தல் பரப்புரையை தொடங்கி வைக்க இருக்கிறார்கள் எனவே கழக தோழர்கள் இந்தியா கூட்டணிக் கட்சி நண்பர்கள் அனைவரும் கலந்துக் கொண்டு சிறப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| வட்டம் | இடம் | நேரம் |
|---|---|---|
| 8வது வட்டம் | பெரியார்நகர், S.P | காலை 07.00 மணி முதல் 08.00 மணி வரை |
| 9வது வட்டம் | ம.வே.நகர் | காலை 08.00 மணி முதல் 09.00 மணி வரை |
| 10வது வட்டம் | சன்னதி தெரு, வடக்கு மாட வீதி, ஒத்தவாடை தெரு, சடையன்குப்பம் பாட்டை, மேற்கு மாட வீதி. | காலை 09.00 மணி முதல் 10.00 மணி வரை |
| 11வது வட்டம் | பெரிய மேட்டுப்பாளையம், சின்ன மேட்டுப்பாளையம், மார்கெட் லேன், கணக்கர் தெரு, எல்லையம்மன் கோயில் தெரு, T.H.ரோடு, சத்தியமூர்த்தி நகர். | காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை |
| 12வது வட்டம் | வன்னியர் தெரு, செட்டி தெரு, எழுத்துக்காரன் தெரு, கவரை தெரு, ஜான்ராவர் தெரு, வசந்தா நகர், T.H.ரோடு, சாத்தாங்காடு நெடுங்சாலை, B.K.N.காலனி, குமரன்நகர், வீரராகவன் தெரு, வடக்கு மாட வீதி, தெற்கு மாட வீதி | காலை 04.00 மணி முதல் 05.30 மணி வரை |
| 13வது வட்டம் | கிராமத் தெரு, மேட்டுத் தெரு, எம்.ஜி.ஆர் சாலை, வரதராஜன் கோயில் தெரு, சேஷாச்சல கிராமணி தெரு, காந்தி நகர், உதயசூரியன் தெரு. | காலை 05.30 மணி முதல் 07.00 மணி வரை |
| 14வது வட்டம் | ராஜாகடை, T.H.ரோடு, மல்லிகாபுரம், திருச்சினாங்குப்பம், நல்ல தண்ணீர் ஓடை குப்பம் | காலை 07.00 மணி முதல் 08.30 மணி வரை |
| 14வது 'அ' வட்டம் | 'A' சதானந்தப்புரம்,'B' சதானந்தப்புரம், புதிய காலனி, பீர்பைல்வான் தர்காரோடு, தியாகராயபுரம், 1,2,3,4 குறுக்கு தெருக்கள் | காலை 08.30 மணி முதல் 10.00 மணி வரை |

மாதவரம் **எஸ்.சுதர்சனம்** எம்.எல்.ஏ.

செயலாளர், சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

## ஆர்.டி.சேகர் முன்னிலை ! ஜே.ஜே.எபினேசர் தலைமை !

# ஆர்.கே.நகர் தொகுதி 'இந்தியா' கூட்டணி தேர்தல் பணிமனை !

### வேட்பாளர் கலாநிதி வீராசாமி திறந்து வைக்கிறார் !

சென்னை, மார்ச் 27 -

ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி இந்திய கூட்டணி தேர்தல் பணிமனை திறப்பு விழா இன்று (27.03.2024 புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் டி.எச்.ரோடு, தங்க மாளிகை அருகில் நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார். ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, தலைமை வகிக்கிறார்.

தேர்தல் பணிமனையை டாக்டர் கலாநிதி வீராசாமி திறந்து வைக்கிறார்.

இதில் எர்ணாவூர் எ. நாராயணன், நந்தனம் நம்பிராஜன், இரா.மதிவாணன், இரா.வெற்றிவீரன், நேதாஜி யு.கணேசன் எம்.சி, என்.மருதுகணேஷ்,

கூட்டணி கட்சி நிர்வாகிகள் எம்.எஸ்.திரவியம், எல்.சுந்தர்ராஜன், டி.வெங்கடேசன், சி.சௌந்தர், சு.ஜீவன், கமுதி பி.சமுசுதீன், ஆர்.பாஸ்கர், இராயரம்அலி, மாறன், ஒய். முகம்மதுபாருக், எழில் சம்பத், எஸ்.கே.வீராரெட்டி, வால்டாக்ஸ் ரமேஷ், ஆர்.கே.நகர் சையத், வி.ரவிக்குமார், எம்.ஜெயசங்கர், எம்.யோகன்பாபு, நாகராசு, எ. அல்லாபகஷ், பி.ராஜேஷ், ஜெ.அப்துல்காதர், பாபா ஜெகன், பி.தர்மலிங்கம், கே.கண்ணன்,

பகுதி நிர்வாகிகள் என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், மாஸ் டி.வெங்கடேசன், எம். கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன்,

வட்ட செயலாளர்கள் தா.வ.மு.கஜேந்திரன், நா. கோதண்டன், மா.நா கராஜன், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, வி.வடிவேல், எஸ்.எல்.சுந்தர், கே.தேவன், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், ஆர்.எ.எம்.சசிகுமார், ஏ.டி.மணி, வெ.சு. சத்யநாராயணன், இர.பொன் இளவரசன், இ.ரவிக்குமார், எஸ்.எம். பரசுராமன், சி. மணிகண்டன், வை. கலைவண்ணன், எம்.விமலா, எ. ரமேஷ்பாபு,

மாமன்ற உறுப்பினர்கள்: தேவிகதிரேசன், குமரி நாகராஜன், பவித்ரா நரேஷ்குமார், மணிமேகலை ஏழுமலை, கே.ரேணுகா, ஆர். விமலா, மற்றும் கழக மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் பாகம் முகவர்கள் கழக உடன்பிறப்புகள் மற்றும் கூட்டணி கட்சி தோழர்கள் கலந்து கொள்ளுமாறு

ஆர்.கே.நகர் பகுதி செயலாளர்கள் இலா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் கேட்டுகொண்டுயுள்ளார்கள்.

39வது வட்ட செயலாளர் என்.எம்.கதிரேசன் நன்றி கூறுகிறார்.

## தென் சென்னை தொகுதி கழக வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து

# சென்னை தென்மேற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவைக் கூட்டம்!

### மயிலை த.வேலு – ஜெ.கருணாநிதி – கே.எஸ்.ரவிச்சந்திரன் – ப.அப்துல் மாலிக் சிறப்புரை!

சென்னை, மார்ச் 27-

தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து, சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (27.032024, செவ்வாய்) மாலை 6 மணியளவில் 125-வது வட்டக் கழக அலுவலகம், பி.வி.கோவில் தெரு, அம்பேத்கர் பாலம் அருகில், மயிலை, சென்னை-600 004 எனும் முகவரியில் நடைபெறுகிறது.

முனைவர் இறையன்பன் குத்தூஸ், கவிஞர் நன்மாறன், மயிலை எஸ். முரளி, தி.நகர் கே.ஏழுமலை, நந்தனம் கி.மதி, டி.ஏ.தவநேசன் ஆகியோர் முன்னிலையில் ஜி.எம்.செல்வராஜ், கோயில் ரமேஷ், துணை ஆனந்த்ராஜ், ஆ. தேவேந்திரன் ஆகியோர் வரவேற்க இரா.கா.இளங்கோவன் தலைமை வகிக்கிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ , கே.எஸ்.ரவிச்சந்திரன், ப.அப்துல் மாலிக் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

நந்தனம் ஆர்.கே.சிவக்குமார் நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் சென்னை தென்மேற்கு மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு பேரவையின் மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு

# சைதை 139 அ வட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

### எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை! சை.மு.சேகர் தலைமை!

சென்னை, மார்ச் 27 .

தென்சென்னை நாடாளுமன்றத். தொகுதி கழக வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து சைதை மேற்கு 139 'அ' வட்டச் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (27- 03- 2024 புதன்கிழமை ) மாலை. 6.00 மணியளவில். எண்.21/24.வள்ளுவர் தெரு, துணை அமைப்பாளர் த.சேகர் இல்ல மாடியில் வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் சைதை மேற்கு பகுதி செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி. சைதை மா.அன்பரசன் ஆகியோர் முன்னிலை வகிக்க, களக்காடி எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், டி.என்.சிவமணி, எம்.எஸ். ஹரிபாபு, இ.வரதன், மா. ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி. வெங்கடேசன், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

இதில் சைதை எஸ்.குணசேகரன், சைதை த.சம்பத், சைதை.ஆர்.ரமேஷ், கவிதா கவுதமன், சைதை சாதிக், நா.மணிகண்டன், ஆர். கிருஷ்ணகுமார், ப.நரேஷ், ஜி.ஏழுமலை, கொடி.து. சுரேஷ்பாபு, டி.கோபா லகிருஷ்ணன், எஸ்.முகமது அலி, யமஹா ராஜேஷ்,கே. விஜயகுமார், என்.ரமேஷ், வி.வாசுதேவன், எஸ்.கண்ணன், ப.எழிலரசன், ஆர். பெருமாள், ஆர்.தாமோதரன், ப.சிவகுமார், எஸ். சையத்ஜலால், எஸ்.சரத்குமார், முன்னோடிகள். என். சண்முகம், நியுகாலனி.சம்பத், பாக பொறுப்பாளர்கள் என்.ராஜேஷ்,பி.எஸ். பிரகாஷ், எஸ்.முருகன்,ஆர். கண்ணன், என்.தீன தயாளன், ஜி.ஏழுமலை, எம்.சுந்தரேசன், ஜோ.அந்தோணி, ஜெ.தமிழ்ச்செல்வன், டி. ஜானகிராமன், கே. விஜயகுமார், கொடி.து. சுரேஷ்பாபு, பூபதி.வெங்கடேசன், ப.எழிலரசன், அ.சரவணன், ரகுபதி, மற்றும் பலர் பங்கின்றனர். இதில் வட்டக் கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் சை.மு. சேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தயாநிதி மாறனை ஆதரித்து

# 119வது வட்டத்தில் தேர்தல் பணிமனை!

### நே.சிற்றரசு – கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 27-

சென்னை மேற்கு மாவட்டம் 119வது வட்டம் திருவல்லிக்கேணி பகுதி இந்தியா கூட்டணியின் மத்திய சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து தேர்தல் பணிமனை இன்று (27.03.2024) காலை 10.00 மணியளவில் வி.எம்.தெரு, ராமாராவ் கார்டன் சந்திப்பில் திறக்கப்படுகிறது.

இதில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு எம்.சி., திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி., மாமன்ற உறுப்பினர் வே.கமலா செழியன் எம்.சி., வி.என்.ராஜன், ரவி ராஜ்குமார் மற்றும் கழக முன்னோடிகள், வட்டக்கழக நிர்வாகிகள் மற்றும் பாக தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

## திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட

# சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பணிக்குழு!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி அறிவிப்பு!



திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, திருச்சி, கரூர் பாராளுமன்ற தொகுதிகளுக்கு திருவெறும்பூர், திருச்சி கிழக்கு மற்றும் மணப்பாறை சட்டமன்ற தொகுதிகளுக்கு கீழ்க்காணும் நபர்கள் தொகுதி பார்வையாளர்களுடன் இணைந்து தேர்தல் பணியாற்ற தேர்தல் பணிக்குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

குறிப்பு : தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் தேர்தல் முடியும் வரை அங்கு தங்கியிருந்து தேர்தல் பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தேர்தல் பணிக்குழு திருவெறும்பூர் தொகுதி**

1. சீ.க.மறைமலை - தொகுதி பார்வையாளர்
2. அ.த.த.செங்குட்டுவன் - மாவட்ட துணை செயலாளர்
3. வி.தனசேகரன் - பொதுக்குழு உறுப்பினர்
4. நவல்பட்டு கே.சண்முகம் - பொதுக்குழு உறுப்பினர்
5. எம்.தமிழ்செல்வன் - மாநகர பொருளாளர்
6. ஜி.ரமேஷ் - மாவட்ட அணி அமைப்பாளர்

**தேர்தல் பணிக்குழு திருச்சி கிழக்கு தொகுதி**

1. மு.மதிவாணன் - தொகுதி பார்வையாளர்
2. இரா.மூக்கன் - மாவட்ட துணை செயலாளர்
3. லீலா வேலு - மாவட்ட துணை செயலாளர்
4. உ.ராஜேஸ்வரன் - பொதுக்குழு உறுப்பினர்
5. ஆறு.சந்திரமோகன் - மாநகர துணை செயலாளர்
6. கே.ஏ.வி.தினகரன் - மாவட்ட அணி அமைப்பாளர்

**தேர்தல் பணிக்குழு மணப்பாறை தொகுதி**

1. கே.என்.சேகரன் - தொகுதி பார்வையாளர்
2. பி.எம்.சபியுல்லா - தலைமை செயற்குழு உறுப்பினர்
3. எம்.கோவிந்தராஜ் - மாவட்ட அவைத்தலைவர்
4. இரா.குணசேகரன் - மாவட்ட பொருளாளர்
5. செ.பன்னீர்செல்வம் - பொதுக்குழு உறுப்பினர்
6. ப.கிருஷ்ண கோபால் - மாவட்ட அணி அமைப்பாளர்

அமைச்சர் **அன்பில் மகேஸ் பொய்யாமொழி**

செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

மக்களவை எனும்போரில்

# ‘இந்தியா’ கூட்டணி பெரும் வெற்றி பெற்று நல்லாட்சி அமைந்திடும்!

## சி.பி.எம். வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

*திண்டுக்கல், மார்ச் 27 -*

திண்டுக்கல் நாடாளு மன்றத் தொகுதியில் கழகத் தின் தலைமையிலான கூட் டணியில் மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போட்டி யிடுகிறது . வேட்பாளர் சச் சிதானந்தம் வேட்பு மனு தாக்கல் செய்த பிறகு பிரச் சாரத்தில் திண்டுக் கல்லில் வாக்குகள் கேட்டு பொதுமக்களிடையே அமைச்சர்கள் இ.பெரிய சாமி பிரச்சாரம் செய்தார் அப்போது அவர் குறிப் பிட் டதாவது:



திண்டுக்கல் நாடாளு மன்றத் தொகுதி தொகுதி யின் வேட்பாளராக கிரா மம் கிராமமாகச் சென்று அடிப்படை பிரச்சினை களை கையில் எடுத்து மக்க ளோடு தொடர்ந்து பய ணித்து வரும் பொதுவு டமை சிந்தனை கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சச்சிதா னந்தம் போட்டியிடுகிறார்.

ஏழை பங்காளிகளின் சின்னம், பாட்டாளி மக்க ளின் சின்னம், அந்த சின் னம் நமக்கு கிடைத்தி ருப் பது பெருமை. திண்டுக்கல் மாவட்டம் ஏழை எளிய மக்கள், பாட்டாளிகளுக் காக நடத்தும் கட்சியான சிபிஎம் நமது இந்தியா கூட் டணியில் அங்கம் வகிப்பது நமக்கெல்லாம் பெருமை. மக்களவை எனும் இந்த போரில் இந்தியாவில் ஒரு நல்லாட்சி உருவாகிட நாம் அனைவரும் ஒன்று பட்டு பாடுபட வேண்டும். நமது சின்னம் அரிவாள் சுத்தியல் நட்சத்திரம்.

மோடி ஆட்சி வங்கக்கட லில் தூக்கியெறியப்படும்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் இந்திய அள வில் மூன்றாவது இடத்தில் அதிக வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றவர் முன் னாள் எம். பி வேலுச்சாமி. அவர் நாடாளுமன்ற உறுப்பி னர் தொகுதி மேம் பாட்டு நிதியை ஒரு பைசா கூட வீணாக்காமல் திண்டுக் கல் தொகுதி முழுவதும் மக் களுக்கு பயனளிக்கும் வகை யில் பயன்படுத்தியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத் தில் இதுவரை செல்போன் அளவில் டவர் வசதி இல் லாத இடங்களுக்கு, அவற்றை அமைத்துக் கொடுத்ததோடு, பழநி மற் றும் திண்டுக்கல் மதுரை ரயில்வே பாதையில் சுரங்க பாலங்கள் கட்டிக் கொடுத் துள்ளார்.

நிலக்கோட்டை தொகு தியில் நீர்வரத்து பாதை களை சீரமைத்துள்ள துடன், குளங்களுக்கு தண் ணீர் வருவதற்கான நடவ டிக்கைகளை தனது சொந்த செலவில் மேற்கொண்ட வர்.

கொரோனா கால கட்டத்தில் நிதிகள் நிறுத்தப் பட்டாலும், மக்களுக்கு தேவையான திட்டங்களை அவர் பூரணமாக செயல்ப டுத்தி வந்துள்ளார்.

திண்டுக்கல் சீனிவாச னும் திண்டுக்கல் தொகுதி யில் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர் அமோக வெற்றி பெறுவார் என்று கூறியுள்ளனர்.

இதற்கான விடை ஜூன் 4ம் தேதி அவர் களுக்கு தெரியவரும். தி.மு.க. கூட் டணி எவ்வளவு பெரிய வெற்றியை தமிழ் நாட்டில் பெறும் என்பதை அப் போது அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். ஏனெனில் யார் நல்லாட்சி செய்கிறார் கள் என்பது மக்களுக்கு நன் றாக தெரியும். எனவே அவர்களின் ஆதரவால் கடந்த தேர்தலை விட அதிக வாக்குகள் வித்தியா சத்தில் திண்டுக்கல் தொகுதி யில் கழக கூட்டணி வேட் பாளர் அமோக வெற்றி பெறுவார் இவ்வாறு அமைச்சர் பெரியசாமி பேசினார்.

பிரச்சாரத்தின் போது அமைச்சர் அர.சக்கரபாணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலா ளர் கே.பாலகிருஷ்ணன் கிழக்கு மாவட்டச் செயலா ளர் இ.பி.செந்தில்குமார் ஆகியோர் பேசினர்.

தமிழகத்தை வஞ்சிக்கும்

# ஒன்றிய அரசைத் தூக்கி எறியும் தேர்தலாக அமையும்!

## திண்டுக்கல் சி.பி.எம். வேட்பாளரை ஆதரித்து அமைச்சர் அர.சக்கரபாணி பிரச்சாரம்!

*திண்டுக்கல், மார்ச் 27 -*

திண்டுக்கல் நாடாளு மன்றத் தொகுதி கழகத்தின் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து நத்தம் சட்டமன்ற தொகுதி திண்டுக்கல் தெற்கு ஒன்றி யத்தில் அமைச்சர் அர.சக்க ரபாணி தீவிர பிரச்சாரம் செய்தார்.

தெற்கு ஒன்றிய ஊராட்சி பகுதிகளான சிறுமலை ஊராட்சி, தோட்டனூத்து ஊராட்சி, அடியனூர் ஊராட்சி, அ. வெள்ளோடு ஊராட்சி உட்பட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங் களில் பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசிய தாவது.

கடந்த திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி யில் கழகம்பெற்ற வெற்றி யானது தமிழகத்தில் வாக்கு சதவீதத்தில் முதலாவதாக வும், இந்திய அளவில் மூன்றா வதாகவும் அமைந் தது.

இந்த தேர்தலில் கழகத் தின் தலைமையிலான இந் தியா கூட்டணி மார்க் சிஸ்ட் வேட்பாளர் சச்சி தானந்தத்தின் வெற்றி இந்தி யாவிலேயே அதிக கவ னத்தை பெறும் வகையில் அமைய வேண்டும். தமிழ கத்தை வஞ்சித்து வரும் ஒன் றிய அரசை தூக்கி எறியும் தேர்தலாக இந்த தேர்தல் கண்டிப்பாக அமையும். நமது முன்னாள் எம்.பி. வேலுச்சாமி தனது சொந்த செலவில் பல்வேறு பணி களை செய்து மக்களின் கவ னத்தை பெற்றார்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

கூட்டத்தில் முன்னாள் நத்தம் சட்டமன்ற உறுப்பி னர் ஆண்டிஅம்பலம், தெற்கு ஒன்றிய கழகச் செய லாளர் வெள்ளிமலை , திண் டுக்கல் யூனியன் தலைவர் ராஜா ஒன்றிய நிர்வாகி ராதா கிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதும்

# என் அன்பு மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துகள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாழ்த்துச் செய்தி!

*சென்னை, மார்ச் 27 -*

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:



நீங்கள் பயின்ற ஒரு அறைதான், நண்பர்களோ டும், ஆசிரியர்களோடும் மகிழ்ச்சியாக உரையாடிய ஒரு அறைதான் உங்களுக் கான தேர்வு அறை.

உங்களின் ஆசிரியர்கள் தான் தேர்வறை கண்கா ணிப்பாளர்களாக இருப் பார்கள்.

உங்களின் நண்பர்கள் தான் உங்களைச் சுற்றி அமர்ந்து தேர்வு எழுதுவார் கள். அது உங்களின் இடம். ஆகவே எதை நினைத்தும் பதற்றம் அடையாதீர்கள். பயம் கொள்ளாதீர்கள்.

தன்னம்பிக்கையோடு தேர்வு எழுதுங்கள். அது தான் உங்களுக்கான வெற் றியைத் தேடித் தரும்.

மகிழ்ச்சியோடு சென்று வாருங்கள், வாழ்த்துகள்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி

# கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி சங்கராபுரத்தில் தேர்தல் அலுவலகம்!

## உதயசூரியன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

*சங்கராபுரம், மார்ச் 27-*

தி.மு.க. தலைமையி லான ‘இந்தியா’ கூட்டணி கள்ளக்குறிச்சி நாடாளு மன்ற தொகுதி சங்கராபுரத் தில் தி.மு.க. தேர்தல் அலுவ லகம் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் உதயசூரியன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு தேர்தல் அலுவலகத்தை ரிப் பன் வெட்டி திறந்து வைத் தார். இதனைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி நாடாளு மன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் தே.மலைய ரசன் அனைவரிடத்திலும் வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டு வாக்குகள் சேக ரித்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் சங்கராபு ரம் பேரூர்ச் செயலாளர் துரை.தாகப்பிள்ளை அனை வரையும் வரவேற்றார். தி.மு.க. மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி, ஒன் றியச் செயலாளர் ந.ஆறுமு கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் ஒன்றி யக் குழுத் தலைவர் திலகவதி நாகராஜன், பாப்பாத்தி, எம்.எஸ்.குமார், வழக்கறி ஞர்கள் பரமகுரு, ஜனார்த் தனன், பால அண்ணா மலை, ரமேஷ் குமார், பிரபாகரன், தொழிலதிபர் ஆறு.கதிரவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட் டச் செயலாளர் வேல்.பழ னியம்மாள், காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலை வர் ஜெய்கணேஷ், தி.மு.க. மற்றும் இந்திய கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிடும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் கே .நவாஸ் கனி அறிமுகக் கூட்டம் மாவட்ட தி.மு.க. சார்பில் நடந்தது. மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் முன்னிலை வகித்தார். உடன் நாடாளுமன்ற வேட்பாளர் கே நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் முருகேசன், கருமாணிக்கம் தொகுதி பொறுப்பாளர்கள் முன்னாள் மேயர் குழந்தைவேலு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம், கணேசன் மற்றும் அக்ரி கணேசன், மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப.திவாகரன், செயற்குழு உறுப்பினர் மிஷா அகமது தம்பி, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன், மற்றும் மாவட்ட துணைச் செயலாளர் கருப்பையா, மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் உள்ளனர்.




2024 நாடாளுமன்றத் தேர்தல்
‘இந்தியா கூட்டணி’
வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

**கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்**

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**27-03-2024, புதன்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| மதிய உணவு இடைவேளை | | | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.


# தமிழ்நாடு முதல்வரின் சாதனைகளைக் கூறி வாக்கு சேகரிப்பு!

## சிவகங்கையில் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. பேட்டி!

*சிவகங்கை . மார்ச் 27 .*

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணியில் காங்கிரஸ் கட்சி வேட்பா ளராக கார்த்தி ப. சிதம்ப ரம் சிவகங்கை நாடாளு மன்றத் தொகுதியில் போட்டியிடுகிறார். சிவ கங்கையில் வேட்புமனு தாக்கல் செய்தபிறகு செய் தியாளர்களிடம் கார்த்தி ப.சிதம்பரம் கூறியதாவது.



‘இந்தியா’ கூட்டணி சார்பில் தமிழகத்தில் முதல் வர் மு க ஸ்டாலின் அவர் கள் தலைமையி லான ‘இந் தியா’ கூட்டணியில் சிவகங்கை நாடாளுமன் றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக மீண்டும் போட்டியிடுகிறேன். என்னை மீண்டும் போட்டி யிட வாய்ப்பு அளித்த அகில இந்திய தலைவர் கார்கே, அன்னை சோனி யாகாந்தி ,தலைவர் ராகுல் காந்தி ஆகியோருக்கு எனது நன்றியினை தெரி வித்துக் கொள்கின்றேன். இம்முறை சிவகங்கை மக்க ளின் குரலாக எனது குரல் நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிக்கும். தமிழக முதல் வர் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி தமி ழகம் மற்றும் புதுவை உட் பட 40 தொகுதிகளிலும் அமோக வெற்றி பெறும். இந்திய அளவில் ‘இந்தியா’ கூட்டணி அதிக இடங்க ளில் வெற்றி பெறும். பா.ஜ.க. படு தோல்வி யடையும் .

இந்த தேர்தல் பிரச்சா ரத்தில் பா.ஜ.க. அரசு மாநில அரசுகளுக்கு பார பட்சமாக நிதிவழங்கும் பிரச்சினை,ஜி.எஸ்.டி. வரி விதிப்பு ,சி. ஏ. ஏ சட்டம் தேர்தல் பத்திர முறைகேடு கள், மற்றும் 10 ஆண்டு கால பா.ஐ.க. மக்கள் விரோத ஆட்சி குறித்து மக் களிடம் எடுத்துக் கூறி வாக்கு சேகரிப்பேன். எனது வெற்றிக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர் கள் தலைமையிலான மூன் றாண்டு கால அரசின் சாத னைகளில் மகத்தான நான்கு முத்தான திட்டங் கள் ஆன பெண்களுக்கு இலவச பயண பேருந்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, காலை சிற்றுண்டி திட்டம் மகளிர் கல்லூரி படிக்க மாதம் தோறும் வழங்கும் ஊக் கத்தொகை போன்ற நான்கு முக்கிய திட்டங் களை மக்களிடம் எடுத்து கூறி வாக்கு சேகரிப்பேன்.

‘இந்தியா’ கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் அதில் தி.மு.க. முக்கிய இடம்பெ றும். இதில் பா.ஜ.க. அரசு கடந்த 10 ஆண்டுகளில் செய்துள்ள ஊழல்கள் தனி விசாரணைக்கு உட்படுத் தப்படும். மாநிலத்தினை பா.ஜ.க. அரசு வஞ்சித்து வருகிறது. ‘இந்தியா’ கூட் டணி ஆட்சியில் அவை கள் சீரமைக்கப்ப படும். ஜி.எஸ்.டி.வரிவிதிப்பு மாற்றி அமைக்கப்படும். நீட்தேர்வை விரும்பாத மாநிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படும். தி.மு.க . ‘இந்தியா’ கூட்டணியில் முக்கிய அங்கம் பெறும். தமிழகத்தில் தி.மு.க. பெரிய வாக்கு வங்கியாக திகழ்கிறது.

இவ்வாறு கார்த்தி ப.சிதம்பரம் கூறினார்.

பேட்டியின்போது அமைச்சர்கள் கே ஆர். பெரிய கருப்பன், எஸ். ரகுபதி, சிவ.வீ.மெய்ய நாதன் மற்றும் திருமதி தமி ழரசிரவிக்குமார் எம். எல்.ஏ. ஆகியோர் உடன் இருந்தார்கள்.



திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி நத்தம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஊராட்சிகளான சிறுமலை, தோட்டனூத்து, அடியனூத்து, அ.வெள்ளோடு உட்பட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் அமைச்சர் அர.சக்கரபாணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து தீவிர பிரச்சாரம் செய்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டிஅம்பலம், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வெள்ளிமலை, திண்டுக்கல் யூனியன் தலைவர் ராஜா, கழக நிர்வாகி ராதாகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.

## சேலம் நாடாளுமன்ற தொகுதி

# இந்தியா கூட்டணி தேர்தல் பணிக்குழு



### இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

1. திரு.இரா.இராஜேந்திரன் M.L.A., செயலாளர், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க
2. திரு.S.R.சிவலிங்கம் Ex.M.L.A., செயலாளர், சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க.
3. திரு.S.R.பார்த்திபன் M.P. மாநில துணை செயலாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி
4. திரு.A.R.B. பாஸ்கர் , தலைவர், சேலம் மாநகர மாவட்ட காங்கிரஸ்
5. திரு.S.K. அர்த்தனாரி, தலைவர், சேலம் கிழக்கு மாவட்ட காங்கிரஸ்
6. திரு.C.S. ஜெய்குமார், தலைவர், சேலம் மேற்கு மாவட்ட காங்கிரஸ்
7. திரு.மேவை.சண்முக ராஜா , மாவட்ட செயலாளர், CPI M
8. திரு.A. மோகன், மாவட்ட செயலாளர் CPI
9. Dr. C. சங்கேஸ்வரன், மாநகர மாவட்ட செயலாளர், ம.தி.மு.க.
10. திரு.ந.மகேந்திரவர்மன், சேலம் மேற்கு மாவட்ட செயலாளர், ம.தி.மு.க.
11. திரு.E.காஜாமைதீன், மாநகர் மாவட்ட செயலாளர் (வடக்கு) வி.சி.க.
12. திரு.க.மெய்யழகன், மாவட்ட செயலாளர் (மேற்கு) வி.சி.க.
13. திரு.அ.மொழி அரசு, மாநகர் மாவட்ட செயலாளர் (தெற்கு) வி.சி.க.
14. திரு.இரா.தெய்வானை, புறநகர் மாவட்ட செயலாளர் (வடக்கு) வி.சி.க.
15. திரு.வி.நா.சுந்தர், புறநகர் மாவட்ட செயலாளர் (தெற்கு) வி.சி.க.
16. திரு.S.சையத் மூசா M.C., மாவட்ட தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்
17. திரு.R.லோகநாதன், மாநகர் மாவட்ட செயலாளர், கொ.ம.தே.க.
18. திரு.நல்லதம்பி, சேலம் வடக்கு மாவட்ட செயலாளர், கொ.ம.தே.க.
19. திரு.ராஜ்குமார், சேலம் புறநகர் மாவட்ட செயலாளர், கொ.ம.தே.க.
20. திரு.அப்துல் ஜாபர், மாவட்ட செயலாளர், மனிதநேய மக்கள் கட்சி
21. திரு.அ.ச.இளவழகன், மாவட்ட தலைவர். திராவிடர் கழகம்
22. திரு.தமிழன்.அ.யுவராஜ், மாநகர் மாவட்ட செயலாளர், தமிழக வாழ்வுரிமை கட்சி
23. திரு.R.K.ராஜ்குமார், வடக்கு மாவட்ட செயலாளர், தமிழக வாழ்வுரிமை கட்சி
24. திரு.A.D.R.சந்திரன், சேலம் மத்திய மாவட்ட செயலாளர், ஆதிதமிழர் பேரவை
25. திரு.A.சாதிக்பாஷா, சேலம் மாவட்ட செயலாளர், மனிதநேய ஜனநாயக கட்சி
26. திரு.S.ஷேக் முஹம்மத், மாவட்ட தலைவர், மனிதநேய மக்கள் கட்சி

**சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சேலம் நாடாளுமன்றத்திற்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு**

| வ.எண் | பொறுப்பாளர்கள் பெயர் | கைபேசி எண் |
|---|---|---|
| 1. | திரு.C.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் தொகுதி பார்வையாளர் | 9443393399 |
| 2. | திரு.அ.இராமச்சந்திரன், மேயர் | 9443380307 |
| 3. | திரு.பா.இரகுபதி மாநகர செயலாளர் | 8883405888 |
| 4. | திரு.K.T.மணி தலைமை செயற்குழு உறுப்பினர் | 9443124441 |
| 5. | திரு.அ.பூபதி பொதுக்குழு உறுப்பினர் | 9443276685 |
| 6. | திரு.K.R.முருகன் மாநகர அவைத் தலைவர் | 9443220220 |
| 7. | அமான் (எ) நாசர்கான் பொதுக்குழு உறுப்பினர் | 9443235444 |
| 8. | திரு.S.R.அன்வர் மாவட்ட அமைப்பாளர் சிறுபான்மை நலப்பிரிவு | 9493237799 |
| 9. | திரு.கேபிள் சரவணன் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் | 9500787878 |

**சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு**

| வ.எண் | பொறுப்பாளர்கள் பெயர் | கைபேசி எண் |
|---|---|---|
| 1. | திரு.G.K.சுபாசு மாவட்ட அவைத் தலைவர் | 9944068324 |
| 2. | திரு.உதயசூரியன் தொகுதி பார்வையாளர் | 9677250777 |
| 3. | திரு.G.குமரவேல் மாவட்ட துணை செயலாளர் | 9443569971 |
| 4. | திரு.V.கணேசன் மாநகர துணை செயலாளர் | 9443008921 |
| 5. | திரு.M.M.செரீப் மாநகர பொருளாளர் | 9443893573 |
| 6. | திரு.பெ.அசோகன் பொதுக்குழு உறுப்பினர் | 9443413383 |
| 7. | திரு.K.R.G.தனபாலன் Ex MLA | 9442336948 |
| 8. | திரு.M. லோகநாதன் பொதுக்குழு உறுப்பினர் | 9442240082 |
| 9. | திரு.M.அசோகன் மாவட்ட சுற்றுசூழல் அணி தலைவர் | 9362100745 |
| 10. | திரு.P.L.பழனிசாமி மாநகர அமைப்பாளர் வர்த்தகர் அணி | 9894844777 |
| 11. | திரு.சந்திரன் மாநகர அமைப்பாளர் விவசாய தொழிலாளர் அணி | 9486765733 |
| 12. | திரு.O.TEX இளங்கோவன் மாநகர அமைப்பாள் நெசவாளர் அணி | 9025300343 |
| 13 | திரு.ஜெகநாதன் மாநகர இளைஞர் அணி முன்னாள் து.அமைப்பாளர் | 9585290707 |

**சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு**

| வ.எண் | பொறுப்பாளர்கள் பெயர் | கைபேசி எண் |
|---|---|---|
| 1. | திரு.நன்னியூர் ராஜேந்திரன் தொகுதி பார்வையாளர் | 9442401234 |
| 2. | திருமதி.மஞ்சுளா சுரேஷ் மாவட்ட துணைச் செயலாளர் | 9150422228 |
| 3. | திருமதி.கோமதி மாநகர துணைச் செயலாளர் | 9942126777 |
| 4. | திரு.தினகரன் மாநகர துணைச் செயலாளர் | 9443514142 |
| 5. | திரு.ச.சுப்ரமணி பொதுக்குழு உறுப்பினர் | 9363103585 |
| 6. | திரு.அருண் பிரசன்னா மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் | 9443280202 |
| 7. | திரு.K.ராஜா மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் | 9443514169 |
| 8. | திரு.K.M.ராஜா கொண்டப்பநாயக்கன்பட்டி | 9443234359 |
| 9. | திரு.A.ராஜேந்திரன் பொதுக்குழு உறுப்பினர் | 7598688863 |

**ஓமலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு**

| வ.எண் | பொறுப்பாளர்கள் பெயர் | கைபேசி எண் |
|---|---|---|
| 1. | திரு.மு.கார்த்திகேயன் மாவட்ட பொருளாளர் | 9362442550 |
| 2. | திரு.டேம்.வெங்கடேஷன் தொகுதி பார்வையாளர் | 9751335522 |
| 3. | திரு.S.குபேந்திரன் பொதுக்குழு உறுப்பினர் | 9943399099 |
| 4. | திரு.S.திருநாவுக்கரசு மாவட்ட துணைச் செயலாளர் | 9443418813 |
| 5. | திரு.ப.குப்புசாமி பொதுக்குழு உறுப்பினர் | 9865414558 |
| 6. | திரு.K.R.கருணாகரன் பொதுக்குழு உறுப்பினர் | 8056854699 |
| 7. | சம்பு (எ) சண்முகம் மாவட்ட கவுன்சிலர் | 9443517279 |
| 8. | திரு.அழகிரி மாவட்ட அமைப்பாளர் விவசாய தொழிலாளர் அணி | 9842934645 |
| 9. | திரு.செல்லதுரை மாநில துணைச் செயலாளர் அமைப்புசாரா ஓட்டுனர் அணி | 9751716165 |
| 10. | திரு.ரவி குமார் ஆடிட்டர், ஓமலூர். | 8610872208 |
| 11. | திரு.சா.ராஜேந்திரன் (கஞ்சநாயக்கன்பட்டி) | 9443224950 |
| 12 | திரு.அருமைசுந்தரம் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் | 9443942920 |
| 13. | தேக்கம்பட்டி சண்முகம் | 9087892046 |
| 14. | திருமதி.K.C.M.வசந்திமுருகன் மாவட்ட கவுன்சிலர் | 9488250871 |

**இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ.**
செயலாளர், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.

## சென்னை மாவட்டத்தில்

# வாக்குப் பதிவு இயந்திரங்கள்- கட்டுப்பாட்டுக் கருவிகள்!

## மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ.ராதாகிருஷ்ணன் ஆய்வு!

சென்னை,மார்ச்.27-

சென்னை மாவட்டத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) இயந்திரங்களை 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வருகின்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் கணினி குலுக்கல் முறையில் (Randomization) 16 சட்டமன்றத் தொகுதிகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) இயந்திரங்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள வைப்பு அறையிலிருந்து, 16 சட்டமன்றத் தொகுதிகளின் வைப்பு அறைகளுக்கு அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இன்று (26.03.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் பேசும்போது தெரிவித்ததாவது :

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2024னை முன்னிட்டு, வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) ஆகியவை முதற்கட்டமாக கணினி குலுக்கல் முறையில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரநிதிகள் முன்னிலையில் 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இயந்திரங்களுக்கான எண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அதன்படி, வாக்குப்பதிவிற்கான 4469 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 4469 கட்டுப்பாட்டுக் கருவிகள் மற்றும் 4842 வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) சிந்தாதிரிப்பேட்டை வைப்பு அறையிலிருந்து அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளின் வைப்பு அறைகளுக்கு காவல்துறையின் பாதுகாப்போடு அனுப்பி வைக்கும் பணி அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. இந்த இயந்திரங்கள் வீடியோ கண்காணிப்பு மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படும். இருப்பு இயந்திரங்கள் (Reserve Machines) இந்த வைப்பு அறையிலேயே வைக்கப்படும்.

தேர்தல் பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்களின் மூலம் ரூ.2,35,89,600/மும், ரூ.5,32,60,775 மதிப்பிலான 8046.45 கிராம் தங்கம், ரூ.15,00,000 மதிப்பிலான 12 ஐபோன்கள் என மொத்தம் ரூ.7,83,50,375/ மதிப்பில் பறிமுதல் செய்யப்பட்டு கருவூலத்தில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

வடசென்னையில் 23 வேட்பாளர்கள், தென் சென்னையில் 20 வேட்பாளர்கள், மத்திய சென்னையில் 9 வேட்பாளர்கள் என மொத்தம் நேற்று வரை (25.03.2024 வரை) 52 வேட்பாளர்கள் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் செலவினங்களைக் கண்காணிக்க 6 தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் உள்ளனர். மேலும், தேர்தல் பணிகளை கண்காணிக்க வட சென்னையில் கார்த்திகே தன்ஜி புத்தப்பாட்டி, (Mr.Kartikay Dhanji Budhdhabhatti, I.A.S.,) , மத்திய சென்னையில் டாக்டர் டி. சுரேஷ், (Dr.D. Suresh, I.A.S.,) , தென் சென்னையில் முத்தாடா ரவிச்சந்திரா, இ.ஆ.ப. (Thiru. Muddada Ravichandra, I.A.S.,) தேர்தல் பொது பார்வையாளர்களாகவும், காவல் பணிகளை கண்காணிக்க வடசென்னையில் உதய் பாஸ்கர் பில்லா, இ.கா.ப., (Thiru. Uday Bhaskar Billa, IPS.,) , மத்திய சென்னை மற்றும் தென் சென்னையில் சஞ்சய் பாட்டியா, இ.கா.ப., (Thiru. Sanjay Bhatia, IPS.,) தேர்தல் காவல் பார்வையாளர்களாகவும் தேர்தல் பணிகளை கண்காணிக்க உள்ளனர் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) ச.சுரேஷ் மற்றும் அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024ஐ முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் குலுக்கல் முறையில் 16 சட்டமன்றத் தொகுதிகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) இயந்திரங்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், சிந்தாதிரிப்பேட்டை ஜெயின் கோவில் பகுதியில் உள்ள வைப்பு அறையிலிருந்து, 16 சட்டமன்றத் தொகுதிகளின் வைப்பு அறைகளுக்கு அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று (26.03.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) ச.சுரேஷ் மற்றும் அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

## கழிவுநீரகற்று வரி – குடிநீர் கட்டணங்களை

# மார்ச் 31 - ஞாயிற்றுக்கிழமை செலுத்தலாம்!

## சென்னைக் குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 27-

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியினையும், குடிநீர் கட்டணங்களையும் மார்ச் மாதம் 31-ஆம் தேதிக்குள் நுகர்வோர்கள் செலுத்திட வேண்டும்.

அனைத்து பகுதி அலுவலகங்கள், பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் அனைத்து வேலை நாட்களிலும், சனிக்கிழமைகளிலும் இயங்கி வருகிறது.

இந்நிலையில், நுகர்வோர்கள் வரி செலுத்துவதற்கு ஏதுவாக 31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை அனைத்து பகுதி அலுவலகங்கள், பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் இயங்கும்.

சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை காசோலை (Cheque) மற்றும் வரைவோலைகளாக (Demand Draft) செலுத்தும் நுகர்வோ ர்களின் வசதிக்காக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் பணிமனை அலுவலகங்களில் காசோலை, வரைவோலை பெறுவதற்கான பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் நுகர்வோர்கள் தங்களது நிலுவை தொகையினை https://bnc.chennaimetrowater.in/#/public/cuslogin என்ற வலைத்தளத்தைப் பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக பணம் செலுத்தலாம். இசேவை மையங்கள் மற்றும் UPI, QR குறியீடு, PoS போன்ற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி, குடிநீர் கட்டணங்களை செலுத்தலாம்.

எனவே, நுகர்வோர்கள் 31.03.2024-க்குள் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை உடனடியாக செலுத்தி சென்னைக் குடிநீர் வாரியத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒத்துழைக்குமாறு சென்னை குடிநீர் வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் அருண் நேரு, லால்குடி புள்ளம்பாடி பகுதியில் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சட்டமன்ற உறுப்பினர் சௌந்தர பாண்டியன், நகரச் செயலாளர் துரை, கோல்டன் ராஜேந்திரன், செல்வராஜ் உட்பட பலர் உடனிருந்தனர்.

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் - தூத்துக்குடியில் கனிமொழி கருணாநிதியை ஆதரித்து மீனவ மக்களிடம் - வியாபாரிகளிடம் தீவிர வாக்குச் சேகரிப்பு!


தூத்துக்குடி மாநகரில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடைபயிற்சியின்போது வீதி, வீதியாகச் சென்று கனிமொழி கருணாநிதிக்கு வாக்குச் சேகரித்தார்.


தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு ஆதரவாக நேற்று (26.3.2024) காலை வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்ட கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுடன் பொதுமக்கள் உற்சாகமாக செல்ஃபி எடுத்துக்கொண்டனர்.


கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு ஆதரவாக வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டபோது சிறுவர், சிறுமியர்களிடம் அவர்களது படிப்பு குறித்து கேட்டறிந்தார்.


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.3.2024) தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு ஆதரவாக தூத்துக்குடி காமராஜர் காய்கறி சந்தையில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்.


கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடியில், மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதிக்கு ஆதரவாக வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டபோது, லயன்ஸ் டவுன் பகுதியில் மீனவ மக்கள் அழைத்ததன் பேரில் அவர்களது இல்லத்திற்குச் சென்று தேனீர் அருந்தி மகிழ்ந்தார். உடன் அமைச்சர்கள் பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மேயர் ஜெகன் ஆகியோர் உள்ளனர்.

## தூத்துக்குடியில் நடைபயிற்சியின் போது கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதிக்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்குச் சேகரிப்பு!

## மீனவர்கள், காய்கறி வியாபாரிகள், பொதுமக்கள் திரண்டு உற்சாக வரவேற்பு!

**தூத்துக்குடி, மார்ச் 27 -**

**கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.3.2024) காலையில் தூத்துக்குடி மாநகரில் நடைபயிற்சி மேற்கொண்டபடியே தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு வாக்குச் சேகரிக்கும் பணியையும் சிறப்பாக மேற்கொண்டார்கள்.**

**மாணவ - மாணவிகளுக்கு முதல்வர் வாழ்த்து!**

தமிழ்நாடு முழுவதும் தொடங்கும் அரசுப் பொதுத் தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்கள் எல்லோரும் சிறப்பாகத் தேர்வு எழுதி மகத்தான வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்தியபடியே தூத்துக்குடி மாநகரில் காலையில் நடைபயிற்சிக்குச் சென்ற முதலமைச்சர் அவர்கள் அங்கு தம்மை எதிர்கொண்டு சந்தித்து வணக்கம் கூறிய மாணவ – மாணவிகளிடம் நன்றாகப் படித்து எதிர்காலத்தில் நீங்கள் எல்லாம் சிறந்து விளங்கவேண்டும் என வாழ்த்தினார். அப்போது, அவர்கள், முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தும் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் இரண்டும் எங்களுக்குத் தன்னம்பிக்கை அளிக்கிறது. அதற்காக நன்றி என்று கூறி மகிழ்ந்தனர்.

**மகளிர் குழுவினர் முதல்வருக்கு வாழ்த்து!**

அப்பொழுது முதல்வர் அவர்களைச் சந்தித்த மகளிர் குழுவினர் தாங்கள் செயல்



படுத்தும் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் எங்களுக்கு மாதம் 1,000 ரூபாய் வருகிறது. நீங்கள் நல்லா இருக்கணும் என்று முதல்வரை வாழ்த்தினார்கள்.

அப்படியே மீனவ கிராமங்களில் சென்று நடைபயிற்சியோடு வாக்குச் சேகரித்தார் முதல்வர். அப்போது அன்போடு அவரை அழைத்த ஒரு மீனவர் இல்லத்திற்குச் சென்று அவர்கள் வழங்கிய தேநீரைப் பருகியபடியே மீனவர்களின் நலனுக்காக திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களையும் நினைவுபடுத்தினார். அது கேட்டு மகிழ்ந்த மீனவர்கள் உங்களுடைய கடுமையான முயற்சியினால் நீங்கள் நடத்தி வரும் சிறப்பான ஆட்சியினால் தமிழ்நாட்டில் 40 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெறுவோம்.

**அ.தி.மு.க. - பா.ஜ.க.வுக்கு வாக்களிக்க மாட்டோம்!**

உங்களால்தான், புதுடெல்லியில் ‘இந்தியா’ கூட்டணி ஆட்சி அமையும் என்று உறுதிபடக் கூறினார்கள். அத்துடன் 10 ஆண்டுகாலம் தமிழ்நாட்டைப் பாழ்படுத்திய அ.தி.மு.க.வுக்கும், எங்கள் தூத்துக்குடி பகுதி அடைந்த வெள்ளப் பாதிப்பிற்கு ஒரு பைசா கூட நிதி வழங்காமல் வாக்குக் கேட்க வருகின்ற பா.ஜ.க.வினருக்கும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று கூறியது கேட்டு முதல்வரின் முகத்தில் புன்னகை அரும்பியது.

முதலமைச்சர் அவர்கள், அடுத்து தூத்துக்குடி காய்கறிச் சந்தைக்குச் சென்றார்கள். அங்கே அவரைக் கண்டதும் அங்கிருந்த காய்கறி வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் இன்ப அதிர்ச்சியாக இருந்தது. ஒரு கடையில் காலிபிளவர் விற்ற ஒரு மூதாட்டி முதல்வர் அவர்களை வணங்கி உங்களுக்கே எங்கள் ஆதரவு என்றார். அப்படியே காய்கறி கடைகளை எல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துச் சென்ற முதலமைச்சர் அவர்களை வியாபாரிகள் எல்லாம் மகிழ்ச்சியோடு கை குலுக்கி வரவேற்றார்கள். ஒரு கடையில் இருந்த அத்தனை பேரும் சேர்ந்து முதலமைச்சர் அவர்களுடன் கைகுலுக்கியது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

**பா.ஜ.க.வினரை துரத்தியடித்த மக்கள்!**

வெண்டைக்காய் கடை, அங்கிருந்த பானிபூரி கடை, வெங்காயக் கடை முதலான பல்வேறு கடைகளுக்கும் சென்ற முதலமைச்சர் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்ற வியாபாரிகள், வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களைக் காட்டி, அவர்களுக்கே எங்கள் வாக்கு; உங்களுக்கே என்றும் வெற்றி என்று கூறி மகிழ்ந்தார்கள்.

குளச்சல் பகுதியில் பா.ஜ.க.வினரை துரத்தியடித்த மீனவ மக்கள். லயன்ஸ் டவுன் மீனவ குடியிருப்பில் மீனவர்கள் எல்லாம் திரண்டு நின்று முதலமைச்சர் அவர்களை வரவேற்று தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

முதலமைச்சர் அவர்களின் இந்த நடைபயணத்தின் போது, வேட்பாளர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், மேயர் ஜெகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## வெப்பமா..? அபத்தமா..?

அபத்தமாக உளறுவதற்கு விருது தரலாம் என்றால், அனைத்து விருதுகளுக்கும் தகுதியானவர்கள் பா.ஜ.க.வினர். அதிலும் குறிப்பாக தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலையின் உளறல்கள். ஒவ்வொரு முறையும் தமிழர்களால் எள்ளி நகையாடப்பட்டாலும், தனது முட்டாள்தனமான உளறல்களை மட்டும் நிறுத்துவதேயில்லை. "கோவையில் 2 டிகிரி வெப்பநிலை அதிகரித்ததற்குக் காரணம் திராவிடக் கட்சிகள்" என்ற அவரது உளறலுக்குத் தனது X சமூகவலைதளப் பக்கத்தில் கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார் சூழலியல் செயற்பாட்டாளர் 'பூவுலகின் நண்பர்கள்' சுந்தர்ராஜன்.

அவருடைய பதிவில், "கோவையின் வெப்பத்தை 1.5-2 டிகிரி அதிகரித்ததுதான் திராவிட கட்சிகளின் சேவை' என்கிறார் அண்ணாமலை. என்னுடைய கேள்வி, ஒரு கட்சியால் ஒரு நகரத்தின் வெப்பத்தை 2 டிகிரி அதிகரிக்க முடியுமா? இந்த அடிப்படை அறிவு கூட இல்லையா உங்களுக்கு? உங்களுக்குக் கொஞ்சமாவது அறிவியல் அறிவு இருந்தால், @IPCC_CH-யின் அறிக்கையைப் படித்துப் பாருங்கள். உலக சராசரி வெப்பநிலை 1.45 டிகிரி அதிகரித்துவிட்டதாக ஐ.பி.சி.சி அறிவித்துவிட்டது. அதுசரி, உங்களுக்கு எப்படித் தெரியும்? உங்கள் தலைவர்தான், "WE HAVE ONLY CHANGED, CLIMATE HAS NOT CHANGED" என்று சொன்னவராச்சே. உங்களுக்கு எப்படி காலநிலை மாற்றம் பற்றியெல்லாம் தெரியும்? 'ஆத்மநிர்பர் பாரத்' என்கிற பெயரில், மத்திய இந்தியாவில் உள்ள 1.75 லட்சம் ஹெக்டேர் காடுகளைப் பெருநிறுவனங்களுக்குத் தாரைவார்த்தவர்களுக்கு வெப்ப உயர்வைப் பற்றியெல்லாம் கவலை எதற்கு?" எனக் கேட்டுள்ளார்.

பா.ஜ.க.வினர் எந்தக் காலத்தில் அறிவியல்பூர்வமாகப் பேசியிருக்கின்றனர்? அண்ணாமலையின் உளறலையும் மக்கள் நகைத்துப் புறந்தள்ளுகின்றனர்.

## :ப்ளாஷ்பேக்



பா.தமிழ்மகன்



### சங்கத்தலைவர் சித்த மருத்துவர்!

சென்னை மின்வாரியச் செயலகச் சங்கத்தின் தலைவராக இருந்தார் என்னுடைய தந்தை க.பாலகிருஷ்ணன். 1972-ஆம் ஆண்டு செயலகச் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழாவை அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞரை வைத்து நடத்தினார். இந்த விழாவில், 'ஐயன்மீர் இச்சங்கம் சுண்டைக்காய் போன்றதுதான். என்றாலும், சுண்டைக்காய், வாதமொடு, மூலம், பித்தம், வயிற்றெரிச்சல், சீதம் இவை போக்கும் சிறந்த மருந்து என்பர். மோரிட்டு வறுத்து எடுத்தால் ஒரு பிடி சோறு தின்பான், ஒரு படி தின்பான். சங்கம் சிறிதெனினும் இதில் அங்கம் வகிக்கும் கலைஞர் அவர்கள் தமிழர்பால் அன்புகொண்ட மகத்தான தலைவர்' என்று வரவேற்புரை நிகழ்த்தினார். பின்பு கலைஞர் பேசும்போது 'செயலக சங்கத் தலைவர் அவர்கள் சிறந்த சித்த மருத்துவராகவும் இருக்கிறாரே' என்றபோது அரங்கமே சிரிப்பால் மகிழ்ந்தது.

-பா.தமிழ்மகன், எழுத்தாளர், சென்னை

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியாருக்கு இந்திராவின் விருது!

1972-ஆம் ஆண்டு இந்தியாவின் 25-வது சுதந்திர நாளையொட்டி தந்தை பெரியாருக்கு விருது ஒன்றை வழங்கினார் இந்திராகாந்தி. தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சரான கலைஞர் மற்றும் நாவலர், மன்னை நாராயணசாமி, இராசாராம் உள்ளிட்டோர் பெரியார் திடலுக்கு நேரில் சென்று, ரோஜா மாலை அணிவித்து, விருதினை வழங்கினர். தாம்பாளத்தில் பழங்களுடன் பட்டயத்தையும் வைத்து, அளிக்கப்பட்ட அந்த விருதை பெரியாரும் மகிழ்வோடு பெற்றுக்கொண்டார்.

# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **4**

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!

## திராவிடர்களுக்கு இடஒதுக்கீடு!

1880-ஆம் ஆண்டுகளில் பம்பாய் மாகாணத்தில் தோற்றுவிக்கப்பட்ட 'சர்வஜன சங்கம்', சென்னை மாகாணத்தில் தொடங்கப்பட்ட 'மகாஜன சபை' முதலியவை இந்தியருக்கு அரசியல் உரிமை வேண்டும் என்பதை முதன்மையாக வைத்துச் செயல்பட்டன. 'இந்திய அரசுத்துறையை இந்தியர்மயமாக்கு' என்பது இவ்வமைப்புகளின் கோரிக்கை. இதையே முக்கிய கோரிக்கையாகக் கொண்டு இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம் 1885-இல் தொடங்கப்பட்டது. இந்திய நிர்வாகத் துறை, காவல்துறை, நீதித்துறை, கல்வித்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் ஆங்கிலேயர்கள் நிரம்பி இருப்பதைக் கண்டித்து காங்கிரஸ் மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசுத்துறையை இந்தியர்மயமாக்கு, இந்தியர்களுக்குக் கூடுதல் உரிமை வேண்டும் என்ற பலவிதமான கோரிக்கைகள் எழும்பினாலும், ஒட்டுமொத்த இந்தியா முழுமையும் ஒற்றைக் கோரிக்கை என்ற நிலை இல்லை. ஏனெனில், இந்தியா பல்வேறு தரப்பினரை உள்ளடக்கியதாக இருந்தது. ஒவ்வொரு தரப்பின் நிலைமையும் வேறுபட்டது. பார்ப்பனரல்லாத மக்களின் நிலை, அதிலும் குறிப்பாக ஆதிதிராவிட மக்களின் நிலை மிகமோசமாக இருந்தது.



அயோத்திதாச பண்டிதர்

கல்வி அறிவு பெற்ற ஆதிதிராவிட மக்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்ற நிலையே நிலவியது. ஆதிதிராவிட மக்களின் இழிநிலையை மாற்ற நினைத்த அயோத்திதாச பண்டிதர் 1890-இல் சாதிபேதமற்ற 'திராவிட மகாஜன சபை'யைத் தொடங்கினார். 1891-ஆம் ஆண்டு பிப்ரவரி 1 அன்று, நீலகிரியில் கூடிய திராவிட மகாஜன சபையின் முதல் மாநாட்டில் ஆதிதிராவிட மக்களுக்கு அரசு வேலைகளில் இடஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட மிக முக்கியமான கோரிக்கைகள் எழுப்பப்பட்டன.

1908-இல் அயோத்திதாசர் தலைமையில் கூடிய திராவிட மகாஜன சபை, அரசுப் பணிகளில் ஆதிதிராவிட மக்களை நியமிக்க வேண்டும் என்று அன்றைய மெட்ராஸ் மாகாண கவர்னரை வலியுறுத்தியது. 1909-இல் மிண்டோ-மார்லி அளித்த பரிந்துரைகளின்படி இந்திய மாகாணச் சட்டமன்றங்களுக்கு, இந்திய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறை இந்திய அரசுச் சட்டத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்த திட்டமிட்டபோது, சட்டசபைகளிலும் அரசு அலுவலகங்களிலும் உள்ள இடங்களை சாதிபேதமில்லா திராவிடர்கள், சாதிபேதமுள்ள இந்துக்கள் எனத் தனித்தனியாகப் பிரித்துத் தரவேண்டும் என்று மார்லி குழுவிடம் அயோத்திதாசர் வலியுறுத்தினார். ஏனெனில், இந்துக்கள் என்ற பெயரில் உயர்சாதியினரே அனைத்து இடங்களையும் கைப்பற்றிவிடுவார்கள் என்ற முன்னுணர்வு அவருக்கு இருந்தது.

சுதேசி என்ற பெயரில் முன்வைக்கப்படும் உயர்சாதியினரின் நலனைக் கண்டு ஆதிதிராவிட மக்கள் ஏமாறக் கூடாது என்பதில், அயோத்திதாசர் எச்சரிக்கையோடு இருந்தார்.

இந்து என்ற ஒற்றை அடையாளத்தை அவர் மறுத்தார். அந்த அடையாளம் பிராமணர்களுக்குச் சாதகமாய் இருக்கும் எனப் புரிந்துகொண்டார். ஆகையால், "சாதிபேதமுள்ள இந்துக்களென்னும் பிராமண மதஸ்தர்களுக்கும், சாதி பேதமற்ற திராவிடர்களாம் பவுத்த மதஸ்தர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது" என்றார் அவர்.

**அயோத்திதாசர், மக்கள் தொகையில் பெரும்பகுதியினரான சாதிபேதமற்ற திராவிடர்களுக்கு அரசுப் பதவிகளில் இடஒதுக்கீடு வேண்டும் என்று வலியுறுத்தினார்.**

உயர் அதிகாரப் பதவியில் அமரும் பிராமணரால் சாதி நிலைப்பதோடு மட்டுமின்றி, பிராமணர்களின் ஆதிக்கம் தொடரும் என்று கருதிய அயோத்திதாசர், மக்கள் தொகையில் பெரும்பகுதியினரான சாதிபேதமற்ற திராவிடர்களுக்கு அரசுப் பதவிகளில் இடஒதுக்கீடு வேண்டும் என்று வலியுறுத்தினார்.

1914-இல் இவ்வுலகை விட்டு அயோத்திதாசர் மறையும் வரை, தான் கொண்டிருந்த சமூக நீதிக்கான உரிமை வேட்கையைக் கைவிடவில்லை. பல்வேறு வடிவங்களில் பல்வேறு சபைகளில் இடஒதுக்கீடு, பிரதிநிதித்துவம், ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை ஆகியவற்றிற்காக தொடர்ந்து குரல் எழுப்பிக்கொண்டே இருந்தார்.

...குரல் ஒலிக்கும்

# மாநாடு

ர.பிரகாசு **4**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

## முத்தாய்ப்பான 'முதல் மாநாடு!'

"வாழ்வு மூன்று எழுத்து
வாழ்விற்குத் தேவையான பண்பு
மூன்று எழுத்து;
பண்பிலே பிறக்கும் அன்பு மூன்று எழுத்து;
அன்பிலே சுரக்கும் காதல் மூன்று எழுத்து;
காதல் விளைவிக்கும் வீரம் மூன்று எழுத்து;
வீரர் செல்லும் களம் மூன்று எழுத்து;
களத்திலே பெறும் வெற்றி மூன்று எழுத்து;
அந்த வெற்றிப் பாதைக்கு நம்மை அழைத்துச்
செல்லும் 'அண்ணா' மூன்று எழுத்து"

முத்தமிழறிஞர் கலைஞரின் இந்தப் புகழ்பெற்ற உரை, தி.மு.க.வின் முதல் மாநில மாநாட்டுக்கு அண்ணாவைத் தலைமையேற்க, கலைஞர் வழிமொழிந்து ஆற்றியது.

1952-ஆம் ஆண்டு ஜனவரியில் பொதுத்தேர்தல் நடைபெறவிருந்த நிலையில், அதற்கு முன்பாக 1951-ஆம் ஆண்டு டிசம்பர் 13,14,15,16 ஆகிய 4 நாட்கள் சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானத்தில், **தி.மு.க.-வின் முதல் மாநில மாநாடு** நடைபெற்றது. தி.மு.கழகம் உருவானதற்கும், முதல் மாநில மாநாட்டுக்கும் இடைப்பட்ட காலம் 17 மாதங்கள். இடைப்பட்ட காலத்தில் 12 மாவட்ட மாநாடுகளை தி.மு.க. நடத்தியிருந்தது.

மிக நேர்த்தியாக மாநாடுகளை வடிவமைக்கும் பாங்கு, தி.மு.கழகத்துக்கு முதல் மாநாட்டிலேயே உருவாகிவிட்டது. தொண்டர் படை, தீர்மானக் குழு, பந்தல் குழு, ஓவியக் கண்காட்சிக் குழு, கலைக்குழு, மாநாட்டுப் பொருளாளர், மாநாட்டின் செயலாளர் என ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஆட்களை நியமித்தார் அண்ணா.




முதல் மாநாடே வரலாற்றில் நிலைத்து நின்றதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று 'ஓவியக் கண்காட்சி'. தமிழ்நாட்டின் வளம் அனைத்தையும் விவரிக்கும் வகையில், அந்தக் கண்காட்சி அமைந்திருந்தது. முதல் நிகழ்ச்சியாக டிசம்பர் 13- ஆம் தேதி தி.மு.க. தலைமையகமான அறிவகத்தில் இருந்து மாநாட்டுப் பந்தல் வரை மிகுந்த எழுச்சியோடு ஊர்வலம் நடைபெற்றது.

லட்சம் பேர் பங்கேற்ற மாநாட்டின் முதல் நாளிலேயே 2 நாடகங்கள் நடந்தேறின. அதில் முற்றிலும் இயக்கப் பெண்கள் மட்டுமே நடித்த 'போராட்டம்' நாடகமும் ஒன்று. இரண்டாவது நாளில் கலைஞர் நடித்த 'இளைஞன் குரல்', மூன்றாவது நாளில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி நடித்த 'ஜமீன் மாளிகை', நான்காவது நாளில் அண்ணாவின் 'சந்திரோதயம்' நாடகங்கள் அரங்கேறின.

மாநாட்டில் பொதுவுடைமைத் தலைவர் ஜீவாவும் பங்கேற்றிருந்தார்.

"நான் என் கொள்கையை விட மாட்டேன். பெரியாரும், ஜீவாவும் கொள்கையை விட மாட்டார்கள். மூவரும் சந்திக்கும் முகாம் ஏற்படத்தான் போகிறது. அது பொதுவுடைமை முகாமாக இருக்கட்டும். 'சமதர்ம முகாம்' என்று பெயர் பெறட்டும். அத்துடன் 'திராவிட' அடைமொழியும் சேரட்டும்' என்று உணர்ச்சிப் பூர்வமாக உரையாற்றினார் அண்ணா.

**தேர்தல் அரசியலுக்குள் பங்கெடுப்பதற்கு முன்பே, தி.மு.க.-வின் பலம் என்ன என்பதை நாட்டு மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் உணர்த்திய மாநாடு அது.**

அப்போது தேர்தலில் போட்டியிடாத இயக்கமாக இருந்த தி.மு.க. சில நிபந்தனைகளை விதித்து, 45 வேட்பாளர்களை ஆதரித்தது. அவர்களில் 43 பேர் வெற்றிபெற்றனர். அதேபோல தி.மு.க.-வின் ஆதரவு பெற்ற 8 பேர் நாடாளுமன்றத்தில் கால் வைத்தனர். தேர்தல் அரசியலுக்குள் பங்கெடுப்பதற்கு முன்பே, தி.மு.க.-வின் பலம் என்ன என்பதை நாட்டு மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் உணர்த்திய மாநாடு அது.

...கூட்டம் திரளும்

## திராவிடத்தால் வாழ்கிறோம்

430

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131